விலை : 20.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 01 திங்கட்கிழமை (13.02.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 056

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# நல்லாட்சியின் நகர்வு நல்லதாகவே இல்லை!

## வியாழேந்திரன் எம்.பி. கடும் விசனம்

(ஏறாவூர்)

மைத்திரி-ரணில் தலைமையிலான இந்த நல்லாட்சி அரசாங்கத்தின் நகர்வுகள் தமிழ் மக்கள் எதிர்பார்த்தது போன்று நல்லதாக அமையவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் கடுமையாக விமர்சித்துள்ளார்.

(23-ம் பக்.)



## ஐரோ. ஒன்றியம் காலக்கெடு!

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துக்கு எதிர்வரும் ஏப்ரல் 26ஆம் திகதி வரை ஐரோப்பிய ஒன்றியம் காலக்கெடு விதித்துள்ளது.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீளப் பெறுவதற்கு 11 நிபந்தனைகள் ஐரோப்பிய ஒன்றியத்தினால் முன் வைக்கப்பட்டிருந்தன.

ஏப்ரல் 26ஆம் திகதிக்கு முன்

23ஆம் பக்கம் பார்க்க....

## 15 ஆண்டுகளாக 'சசி'யால் துன்பம்!



(சென்னை)

அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினா

23ஆம் பக்கம் பார்க்க....

## எந்தக் கொம்பனாலும் என்னை எதுவும் செய்துவிட முடியாது!

### 'நான் சிங்கம்' என சசிகலா கர்ஜனை



(சென்னை)

தான் ஜெயலலிதா எனும் சிங்கத்திடம் இருந்த குட்டிச் சிங்கம். தனது உயிருள்ளவரை அ.தி.மு.கவையும் ஆட்சியையும் காப்பாற்றுவேன் என அ.தி.மு.க கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்களிடையே பேசிய அக் கட்சியின் பொதுச் செயலாளர் சசிகலா

23ஆம் பக்கம் பார்க்க....

## அரசின் நிலைப்பாடு முரண்படுகின்றது

(கொழும்பு)

அரசாங்கத்தின் உத்தியோகப்பூர்வ நிலைப்பாடு தற்போது ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலையில் காணப்படுவதாக தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின தலைமையகத்தில் நேற்று நடை

23ஆம் பக்கம் பார்க்க....

## நீதிமன்ற விவகாரங்களில் பிரதமர் தலையிடுகின்றார்

### கூட்டு எதிரணி குற்றச்சாட்டு

(கொழும்பு)



நீதிமன்றத்தின் ஊடாக நியாயத்தை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலையீடுகின்றமை பாரியதொரு பிரச்சினை என கூட்டு எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற

24ஆம் பக்கம் பார்க்க....

## காணிகளிலுள்ள எமது அடையாளங்களை அழிக்கும் நடவடிக்கையில் இராணுவம்!

### கேப்பாப்பிலவு மக்கள் குற்றச்சாட்டு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு பிரதேசத்தில் விமானப்படையினர் வசமுள்ள தமது காணிகளை மீளவும் தங்களிடம் விரைவாக கையளிக்கவேண்டும் எனக்கோரி பிலவுக்குடியிருப்பு மக்கள் இரவு பகலாக கொட்டும் பனியையும் கொளுத்தும் வெயிலையும் பாராது பதின்னான்காவது நாளாகவும் இன்று போராட்டத்தை

23ஆம் பக்கம் பார்க்க....



## மூன்று ஆசிரியர்களுக்கு பணித்தடை எதிர்த்து இன்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு முன்பாக கடந்த ஜனவரி 10-ம் திகதி இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தின் போது கல்வி அமைச்சின் செயலாளரை அசௌகரியப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் மூன்று ஆசிரியர்களுக்கு பணித்தடை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்கப்பட்ட பணித்தடைக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று நல்லூர் செம்மணி வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது. (செ)

## காலநிலையில் மாற்றம் ஏற்படும்

(கொழும்பு)

நிலவும் வறண்ட காலநிலையில் இன்று தொடக்கம் சிறிதளவான மாற்றமொன்றை எதிர்பார்ப்பதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா

23ஆம் பக்கம் பார்க்க....

CITY MEDICAL CARE (PVT) LTD

முக்கிய அறிவித்தல்

எங்கள் பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களே, 40ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் எங்களுடைய ஸ்தாபனத்துக்கு ஆதரவு வழங்கிய தங்களுக்கு நாம் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் அறியத் தருவது யாதெனில், எங்கள் நிறுவனத்துக்கு கீழ்க்காணும் முகவரியைத் தவிர வேறு எவ்வித கிளையும் யாழ்.மாவட்டத்தில் இல்லை. வேறு யாவரின் தவறான உறுதிமொழிகள் எவற்றிற்கும் நாங்கள் பொறுப்பேற்கமாட்டோம் என்பதனையும் தெரிவிக்கின்றோம்.

சிற்றி மெடிக்கல் கெயார் (பிறைவெற்) லிமிடெட்
CITY MEDICAL CARE (PVT) LTD
558 A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.போதனா வைத்தியசாலை வைரவர் கோயில் முன்பாக)
தொலைபேசி : 021 221 7661

சிற்றி மெடிக்கல்ஸ்
CITY MEDICALS
487, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(கொமர்ஷல் வங்கி அருகாமை)
தொலைபேசி : 021 222 3880
(7936)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இறந்த நிலையில் கடலாமைகள்



(குரணவாய்)

பருத்தித்துறை மூர்க்கம் கடற்கரைப் பகுதியில் கடலாமைகள் சில இறந்த நிலையில் காணப்படுகின்றன.

கடலாமைகள் தமது இனப்பெருக்கத்தினை விருத்தி செய்வதற்காக கரைகளுக்கு வந்து முட்டை இடுவதே வழமையான விடயமாகும்.

ஆனால் மூர்க்கம் கடற்கரையில் சில தினங்களாக கடலாமைகள் கரைப்பகுதியில் இறந்த நிலையில் காணப்படுகின்றன.

இது கடலில் ஏற்பட்ட ஏதாவது மாற்றமா? அல்லது கடலாமைகள் படகுகள், வள்ளங்கள் எவற்றிலாவது அடியுண்டு இறந்ததா என்பன குறித்தும் தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (செ-60)

# ஓய்வுபெற்ற அரச ஊழியர்கள் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளல்

## யாழில் நாளை ஆலோசனைக் கூட்டம்

2015ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு 3/2016 சுற்றுநிருபத்துக் அமைய கிடைக்க வேண்டிய சலுகைகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக 2015 ஓய்வூதியம் பெற்ற அரச ஊழியர்களின் ஒன்றியம் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

அதில் மேற்படி சுற்றுநிருபத்துக்கு அமைய 2015.12.31 தினத்துக்கு 20%மும் ரூ.10,000/= கொடுப்பனவும் 2016.01.01 திகதி முதல் சம்பளத்துடன் இணைத்து புதிய சம்பள திட்டம் செயற்படுத்தப்படுவதால் இக் கொடுப்பனவுகளை பெற்ற 2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரையுள்ள காலப் பகுதியில் ஓய்வில் சென்ற அரச ஊழியருக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

இந்த அநீதி சம்பந்தமாக 2015 ஓய்வூதியம் பெற்ற அரச ஊழியர்களின் ஒன்றியம் எனும் அமைப்பு கண்டியில் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை பல மாவட்டங்களில் 2015ஆம் ஆண்டு ஓய்வுபெற்றவர்களை அழைத்து விழிப்புணர்வை ஏற்படுத்தி மாவட்ட மட்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையை வெற்றி கொள்ளும் பொருட்டு தங்களது ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக ஒன்றிய அங்கத்துவத்தை பெற்றுக் கொள்வதற்காக அனுமதிக் கட்டணமாக ரூ.500/=வும் அங்கத்துவ சந்தாப் பணமாக ரூ. 500/= (மொத்தமாக ரூ.1000/=) செலுத்தி இவ் இலக்கை அடைந்து கொள்வதற்கு பங்களிப்பு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பான அறிவுறுத்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நாளை 14ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

உங்களது ஆலோசனைகளும் முன்மொழிவுகளையும் இதில் சமர்ப்பிக்கலாம் என அவ் ஒன்றியத்தின் மாவட்ட இணைப்பாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ)

# 'எழுக தமிழ் பேரணியால்' எமக்கு பிரச்சினையில்லை

## சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது - அரசு

மட்டக்களப்பில் நடத்தப்பட்ட எழுக தமிழ் பேரணி மூலம் நாட்டில் சுதந்திரம் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அமைச்சரிடம், வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன உள்ளிட்டவர்கள் தலைமையில் மட்டக்களப்பில் நடைபெற்ற எழுக தமிழ் பேரணி குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய போதே அவர் இந்த கருத்தைக் கூறியுள்ளார்.

எழுக தமிழ் பேரணி ஊடாக எமது நாட்டில் சுதந்திரம் உள்ளது என்ற விடயம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நாம் பெருமை கொள்ள வேண்டும். எமக்கு வேண்டுமானால் எழுக தமிழ பேரணிக்கு எதிராக யாழ்ப்பாணத்திற்கு சென்று பேரணியை நடத்த முடியும். இது நாட்டின் சுதந்திரம். இதனை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

அவர்கள் மட்டுமா பேரணி சென்றார்கள்? ஏன்அதனை மாத்திரம் கேட்கின்றீர்கள்? இன்று அனைத்துக்கும் பேரணி செல்கின்றார்கள்,? வீரவன்சவை வெளியே விடுமாறும் பேரணி செல்கின்றார்கள். அனைத்துக்கும் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார்கள். நீதிமன்றம் தீர்ப்பொன்றை வழங்கினாலும் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார்கள். அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்தாலும் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார்கள்.

கடந்த 20 வருடங்களாக ஒன்றுமில்லாமல் இருந்து விட்ட சுதந்திரம் கிடைத்த பின்னர் சிறிதுகாலம் இவ்வாறு நடைபெறும். இது தொடர்பில் குழப்பமடைய தேவையில்லை. வடக்கு கிழக்கை இணைக்க முடியாது என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனினும் அது தொடர்பில் குழப்படையத் தேவையில்லை. அனைவரின் விருப்பத்திற்கு அமையவும் புதிய அரசியலமைப்புதயாரிக்கப்படும்என அமைசசர் தனது கருத்தை தெரிவித்தார். (செ-11)

புலமைப்பரிசில் மாணவர்களே! வாங்கிவிட்டீர்களா?...

புகழ் வெளியீட்டாசிரியர் லோ.விஜேந்திரனின் தொகுப்பில்

லங்கா புத்தகசாலை நிறுவனத்தினரின் வெளியீடு

புலமைப்பரிசில் கடந்தகால வினாத்தாள் தொகுப்புப் பொதி

சிறப்பம்சம் (Past Papers)

- ஒவ்வொரு வினாத்தாளும் இறுதிப்பரீட்சை வினாத்தாளினை ஒத்த வகையில் தனித்தனி வினாத்தாள்களாகப் பொதியிடப்பட்டுள்ளது.
- முழுமையான புள்ளித்திட்டத்துடனான விளக்கமான விடைகள் தனியாக இணைக்கப்பட்டுள்ளது.
- இறுதிப்பரீட்சை வினாக்களுக்கு விடையளிப்பது போன்ற உணர்வுடன் நேரக்கட்டுப்பாட்டுடன் மாணவர்கள் பயிற்சி செய்வதற்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ளது.
- பெற்றோர், ஆசிரியர்கள் விடைகளைத் தனியாகப் பிரித்து வைத்துக் கொள்வதுடன் விடைகளை உறுதிப்படுத்திக்கொள்ளலாம். பெற்றோரே திருத்திப் புள்ளிகள் வழங்கலாம்.
- கடந்த கால பரீட்சை வினாத்தாள்களைப் பயிற்சி செய்வதன் மூலம் பரீட்சைப்பயம் நீங்குவதுடன் இறுதிப்பரீட்சை பற்றிய தெளிவும் ஏற்படும்.

நகரின் பிரபல புத்தகசாலைகள் அனைத்திலும் கிடைக்கும்.

தொடர்பு புகழ் வெளியீட்டகம், கொக்குவில். T.P : 0774118950

விநியோகம் :
லங்கா புத்தகசாலை, F.L.1.14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர, கொழும்பு - 12 T.P : 0112341942

விலை ரூ.500.00

(7935)

# 31ம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்புடையீர்,

நிகழும் துர்முகி வருடம் 16.01.2017 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

## கணபதிப்பிள்ளை அரிச்சந்திரன்

அவர்களின்

சிவப்பதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் 13.02.2017 திங்கட் கிழமை இன்று கீரிமலை புண்ணிய திருத்தலத்தின் கடற்கரையில் நடைபெற்று வீட்டுக்கிரியை 15.02.2017 புதன்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


இல.07D/01, மல்லாவி,
யோகபுரம்.

(C-7535)

இங்ஙனம்
குடும்பத்தினர்

# 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 28 . 10 . 1943



உதிர்வு 14 . 01 . 2017

அமரர்

## பொன்னையா சிவலிங்கம்

பதுவளை, பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.

காலனால் உன்னுயிர்,
காற்றினில் கலந்ததோ?
சீலமுடைச் சித்திரனே!
சிந்தனைக்கு எட்டாத
ஞாலத்தில் நிலைத்தாயோ?
நினைவுகளில் ... தவிக்கின்றோம்.
உளம் நொந்து நிற்கின்ற
ஒரு வாழ்வைத் தந்தெங்கு
நிலைத்தீர்கள்; நெருப்பினிலே ...
நிற்கின்றோம்; மறந்திடோம் நாம்!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்

(C- 7536)

## வியாளேந்திரன் எம்.பியின் ஏற்பாட்டில்

# கேப்பாப்பிலவு மக்களுக்கு ஆதரவாக மட்டு.நகரில் கவனயீர்ப்பு போராட்டம்








(சித்தாண்டி)

**முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் தங்கள் காணிகளை மீளக் கையளிக்கக்கோரி முன்னெடுத்து வரும் தொடர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்பு நகரில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாளேந்திரன் ஏற்பாட்டில் காந்தி சதுக்கத்தில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் உட்பட பல நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.**

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள்" நல்லாட்சி அரசே எங்கே உன் நல்லாட்சி, அரசே நில அபகரிப்பை உடன் நிறுத்து, நல்லாட்சி அரசே தமிழர்களின்பொறுமையைச்சோதிக்காதே, நல்லாட்சி அரசே எங்கள் நிலத்தில் எங்களை வாழ விடும்" உட்பட பல வாசக அட்டைகளை கைகளில் ஏந்தியவாறு கோசங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இ.துரைரெட்ணம், தமிழ் மக்கள் பேரவையின் கூட்டு இணைத் தலைவர் களில் ஒருவரான ரி.வசந்த ராசா உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (இ)

## நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிகம்; 52 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிகூடிய விலைக்கு அரிசியை விற்பனை செய்த 52 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மேலும், பொருட்களுக்கான விலைப் பட்டியலை காட்சிப்படுத்தாத ஒரு வர்த்தகருக்கு எதிராகவும் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபை பெப்ரவரி மாதத்தின் இது வரையான காலப்பகுதிக்குள் 754 வர்த்தக நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப் பட்டுள்ளன.

இதன்போது 376 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (இ-7)

## 2.8 மில்லியன் ரூபா பெறுமதியான போலி நாணயத்தாள்களுடன் 23 வயதேயான இளைஞன் கைது

ஹொரணை, கொட்டிகன் கொட பகுதியில் 2.8 மில்லியன் ரூபாய் பெறுமதியான போலியான நாணயத்தாள்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபரொருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். 23 வயதுடைய இளைஞன் ஒருவரே, இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார், இது தொடர்புடைய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## சித்திரம் வரைந்த ஜோடிக்கு மறியல்



காலி புகையிரத நிலையத்துக்குள் அனுமதியின்றி நுழைந்து, ரயில் பெட்டிகளில் சித்திரம் வரைந்த பிரான்ஸ் நாட்டு ஜோடியை, விளக்க மறியலில் வைக்குமாறு, காலி பிரதான நீதவான், நேற்று முன்தினம் சனிக்கிழமை உத்தர விட்டுள்ளார்.

இவ்வாறு பெட்டிகளில் வரைந்ததன் காரணத்தினால், ரயில்வே திணைக்களத்துக்கு 64,440 ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக, நீதவானிடம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு ரயில் பெட்டிகளில் வரையப்பட்ட சித்திரங்களை அழிக்க முடியாது என்றும் சித்திரம் வரையப்பட்ட பெட்டிகளுக்கு முற்றாக வர்ணம் பூச வேண்டும் என்றும் ரயில்வே திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## குடும்ப பெண்ணொருவர் நேற்று எரிந்த நிலையில் சடலமாக மீட்பு

சாவகச்சேரி பகுதியில் வீடொன்றிலிருந்து எரிந்த நிலையில் குடும்பப் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் சாவகச்சேரி சங்கத்தானை முருகன் கோவில் வீதி 2ஆம் ஒழுங்கையில் உள்ள வீட்டிலிருந்தே இச் சடலம் மீட்கப் பட்டது. யோகநாதன் ஸ்ரீகலா(வயது-57) என்ற குடும்பப் பெண்ணே எரிந்த நிலையில் வீட்டு முற்றத்தில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்சம்பவம்பற்றி மேலும் தெரிய வருவதாவது,

சத்தம் கேட்டு அயலவர்கள் ஓடி வந்த வேளை மேற்படி குடும்பப் பெண் எரிந்த நிலையில் முற்றத்தில் காணப்பட்டார்.

அதனை அறிந்த அயலவர்கள் உடனடியாக தீயை கட்டுப்படுத்த முயன்றும் முயற்சி பலனளிக்காது போனது. மேற்படி குடும்பப் பெண் மூன்று வருடங்களாக இவ்வீட்டில் தனிமையில் வசித்து வருவதாகவும் இவரது பிள்ளைகள் கொழும்பு, வெளிநாட்டில் வசித்து வருவதாகவும் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு வருகை தந்த சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-3, 89)

## புதிய அரசியலமைப்பு தொடர்பில்

## சர்வஜன வாக்கெடுப்பை நடத்த சு.க. இதுவரை இணங்கவில்லை

## அமைச்சர் சுசில் மறுப்பு

புதிய அரசியலமைப்புச் சட்டம் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இதுவரை இணக்கத்தை வெளியிடவில்லை என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்புத் திருத்தத்திற்கு மாத்திரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணக்கம் வெளியிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடுவலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதேவேளை புதிய அரசியலமைப்புச் சட்டம் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் கூறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அரசியலில் பேதம் வேண்டும்-பிரதமர்

(கொழும்பு)

பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளை அரசாங்கம் தீர்க்கின்றதா? இல்லையா என்பது தொடர்பிலேயே அரசியலில் பேதம் இருக்க வேண்டுமே தவிர, இன மற்றும் மதவாத அடிப்படையில் பேதம் இருக்கக் கூடாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சாரணர் இயக்கத்தின் நூற்றாண்டு பூர்த்தியை முன்னிட்டு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இனவாதம் மற்றும் மதவாதம் இன்றி இலங்கையர் என்ற அடையாளத்துடன் முன்னோக்கிச் செல்லும் நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுமாறும் பிரதமர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# உலகக்கோப்பை தோல்விக்கு பழிக்குப்பழி வாங்குவோம்

## டி வில்லியர்ஸ் சொல்கிறார்



2015-ம் ஆண்டு உலகக்கோப்பை அரையிறுதி போட்டியில் அடைந்த தோல்விக்கு நியூசிலாந்தை பழிக்குப்பழி வாங்க இருப்பதாக டி வில்லியர்ஸ் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியா - நியூசிலாந்தில கடந்த 2015-ம் ஆண்டு நடைபெற்ற 50 ஓவர் உலகக்கோப்பையில் அரையிறுதி ஒன்றில் நியூசிலாந்து - தென்னாபிரிக்கா அணிகள் பலப்பரீட்சை நடத்தின. பரபரப்பான ஆட்டத்தில் நியூசிலாந்து வெற்றி பெற்றது. தோல்வியடைந்த டி வில்லியர்ஸ் தலைமையிலான தென்னாபிரிக்கா அணி வீரர்கள், தோல்வியை சகித்துக் கொள்ள முடியாமல் மைதானத்திற்குள்ளே அழுது தங்கள் ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார்கள்.

அதற்கு பழிவாங்கும் நேரத்தை தென்னாபிரிக்கா எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. இந்நிலையில்தான் தென்ஆப்பிரிக்கா அணி நியூசிலாந்து செல்கிறது. இரு அணிகளும் மோதும் ஒரேயொரு போட்டி கொண்ட இருபது - 20 கிரிக்கெட் 17-ந் திகதி நடக்கிறது.

அதன்பின் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் 19-ந் திகதி தொடங்குகிறது. அதன்பின் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் மார்ச் 8-ந் திகதி தொடங்குகிறது.

இதற்காக தென்னாபிரிக்கா அணி விரைவில் நியூசிலாந்து செல்ல இருக்கிறது. இந்த தொடரின்போது 2015 உலகக்கோப்பை தொடரில் ஏற்பட்ட தோல்விக்கு பழிக்குப்பழி வாங்குவோம் என்று டி வில்லியர்ஸ் கூறியுள்ளார். (க)

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்; போராடுகின்றது பங்களாதேஷ்

இந்தியாவுக்கு எதிரான ஹைதராபாத் டெஸ்டில் இன்றைய கடைசி நாளில் பங்களாதேஷத்தின் வெற்றிக்கு 356 ஓட்டங்கள் தேவையுள்ள நிலையில் கைவசம் 7 விக்கெட்டுக்கள் உள்ளன.

இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஒரேயொரு போட்டி கொண்ட டெஸ்ட் தொடர் ஹைதராபாத்தில் நடைபெற்று வருகிறது. நாணய சுழற்சியில் வென்று பட்டிங் தேர்வு செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட் இழப்பிற்கு 687 ஓட்டங்கள் குவித்தது. விராட் கோலி (204), முரளி விஜய் (108), சகா (106 ஆட்டமிழக்காமல்) சிறப்பான பட்டிங்கை வெளிப்படுத்தினார்கள்.



பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய பங்களாதேஷ் 388 ஓட்டங்கள் சேர்த்தது. இந்தியாவை விட 299 ஓட்டங்கள் பின்தங்கியிருந்தது. அந்த அணியின் கப்டன் முஷ்பிகுர் ரஹிம் 127 ஓட்டங்கள் குவித்தார்.

299 ஓட்டங்கள் முன்னிலைப் பெற்றாலும் இந்தியா பாலோ-ஆன் கொடுக்காமல் தொடர்ந்து 2-வது இன்னிங்சை தொடங்கியது. அதிரடியாக விளையாடிய இந்தியா 4 விக்கெட் இழப்பிற்கு 159 ஓட்டங்கள் சேர்த்து 2-வது இன்னிங்சை டிக்ளேர் செய்தது. புஜாரா அவுட்டாகாமல் 54 ஓட்டங்கள் சேர்த்தார். அப்போது இந்தியா 459 ஓட்டங்கள் முன்னிலைப் பெற்றிருந்தது.

இதனால் பங்களாதேஷ் அணியின் வெற்றிக்கு 459 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயித்துள்ளது இந்தியா. 459 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பங்களாதேஷ் 2-வது இன்னிங்சை தொடங்கியது.

தமிம் இக்பால், சவுமியா சர்கார ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். இக்பால் 3 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். அடுத்து மொமினுல் ஹக்யூ களம் இறங்கினார். சவுமியா சர்கார் 42 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜடேஜா பந்தில் வீழ்ந்தார். ஸ்லிப் திசையில் நின்ற ரகானே ஒரு கையால் அபாரமாக பிடியெடுத்து அவரை வெளியேற்றினார்.

மொமினுல் ஹக்யூ 27 ஓட்டத்தில் அஸ்வின் பந்தில் வெளியேறினார். இதனால் பங்களாதேஷ் 75 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 3 விக்கெட்டுக்களை இழந்தது.

4-வது விக்கெட்டுக்கு முஹமதுல்லாவுடன் சாஹிப் அல் ஹசன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி 4-வது நாள் ஆட்டம் முடியும்வரை இருவரும் மேலும் விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டனர். இதனால் பங்களாதேஷ் 4-வது நாள் ஆட்ட முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 103 ஓட்டங்கள் எடுத்துள்ளது. முஹமதுல்லா 9 ஓட்டங்களுடனும், சாஹிப் அல் ஹசன் 21 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

தற்போது பங்களாதேஷ் அணி இந்தியாவை விட 356 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளது. கைவசம் 7 விக்கெட்டுக்கள் உள்ளன. இன்றைய கடைசி நாளில் 90 ஓவரகள் வீசப்படும். நடுவர்கள் நினைத்தால் கூடுதலாக ஒன்றிரண்டு ஓவரகள் வீசப்படலாம். கடைசி நாளில் இந்திய ஆடுகளங்களில் 356 ஓட்டங்கள் எடுப்பது எளிதான காரியம் அல்ல.

இதனால் இந்தியா இந்த தொடரில் தோல்வியை சந்திக்காது. மாறாக பங்களாதேஷ் இந்த போட்டியை சமநிலை செய்ய வேண்டுமென்றால் 90 ஓவர்கள் வரை நிலைத்திருக்க வேண்டும். வெற்றி பெறுவது மிகக்கடினம். (க)



# விராட்டின் சாதனையை முறியடித்தார் டி கொக்



இலங்கை அணிக்கு எதிரான ஐந்தாவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க வீரர் குயிண்டன் டி கொக் இந்திய அணி தலைவர் விராட் ஹோலியின் சாதனையை முறியடித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அங்கு மூன்றுவித போட்டிகளில் விளையாடியது. இதில் டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்காவும் இருபது-20 தொடரை இலங்கையும் கைப்பற்றி இருந்தது.

இந்நிலையில் நடந்த ஐந்தாவது ஒரு நாள் போட்டியிலும் இலங்கை அணி தோல்வியை சந்தித்தது.

இதனால் தென்னாபிரிக்க அணி 5-0 என்ற கணக்கில் தொடரை வென்று அசத்தியுள்ளது.

இப்போட்டியில் குயிண்டன் டி கொக் 36 ஓட்டங்கள் எடுத்த போது ஒருநாள் அரங்கில் 3000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டினார். இந்த ஓட்டங்களை இவர் 74 இன்னிங்ஸில் எடுத்தார்.

இதே ஓட்டங்களை இந்திய அணியின் தலைவர் விராட் ஹோலி 75 இன்னிங்ஸில் எடுத்தார். தற்போது அச்சாதனையை டி கொக் முறியடித்துள்ளார்.

இந்த பட்டியலில் தென்னாபிரிக்க வீரர் ஹசீம் அம்லா 57 இன்னிங்ஸில் 3000 ஓட்டங்கள் எடுத்து முதலிடத்தில் உள்ளார்.

# இந்திய வீரர் யூசுப் பதான் வெளிநாட்டு இருபது-20 லீக்கில்



இந்தியாவின் முதல் வீரராக யூசுப் பதான் வெளிநாட்டு இருபது - 20 லீக் தொடரில் விளையாட இருக்கிறார். ஹாங் காங் இருபது - 20 லீக் அணி அவரை ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்திய அணியில் இடம்பிடித்த போது பிரபலமானதை விட ஐ.பி.எல். தொடரின்மூலம் பிரபலமானவர் யூசுப் பதான். இவர் தற்போது கொல்கத்தா அணிக்காக விளையாடி வருகிறார். ராஜஸ்தான் அணியில் இவர் இடம்பிடித்திருக்கும்போது அந்த அணி அறிமுக ஐ.பி.எல். கோப்பையை கைப்பற்றியது.

தற்போது யூசுப் பதான் இந்திய அணியில் இடம் பெறவில்லை. ஐ.பி.எல். தொடரில் மட்டுமே இடம் பிடித்து வருகிறார். இந்நிலையில் ஹாங் காங் இருபது - 20 லீக் தொடரில் விளையாடுவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதன்மூலம் வெளிநாட்டு இருபது - 20 லீக்கில் விளையாடும் முதல் இந்திய வீரர் என்ற பெயரை பெற்றுள்ளார்.

யூசுப் பதானை கவ்லூன் கேன்டன்ஸ் என்ற அணி ஒப்பந்தம் செய்துள்ளது. ஹொங் காங் இருபது - 20 லீக் தொடர் மார்ச் 8-ந் திகதி முதல் 12-ந் திகதி வரை நடக்க இருக்கிறது.


இந்த லீக்கில் பாகிஸ்தானின் சாகித் அப்ரிடி, இங்கிலாந்தின் டைமல் மில்ஸ், இலங்கையின் சங்கக்கார, டில்ஷான், மேற்கிந்தியத் தீவுகள் டேரன் சமி, நியூசிலாந்தின் ஜேம்ஸ் பிராங்களின் உள்பட பலரும் விளையாட இருக்கிறார்கள். (க)

# படுதோல்விக்கு பதிலடி தருவோம் சனத் ஜெயசூர்ய எச்சரிக்கை

தென்னாபிரிக்காவிடம் சமீபத்தில் நடந்த ஒருநாள் கிரிக்கெட் தொடர் படுதோல்விக்கு நிச்சயம் பதிலடி தருவோம் என சனத் ஜெயசூர்ய நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழு தலைவர் சனத் ஜெயசூர்ய அளித்துள்ள பேட்டியில், தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் தொடரின் இலங்கை அணியின் தோல்விக்கு சாக்கு சொல்ல விரும்பவில்லை.

இலங்கை அணி சரியாக விளையாடவில்லை என்பதே உண்மை. அதிலும் முக்கியமாக துடுப்பாட்டத்தில் வீரர்கள் சொதப்பியது முக்கிய காரணம்.



தென்னாபிரிக்க அணி 2018இல் இலங்கைக்கு வந்து விளையாடவுள்ள போட்டிகளில் எங்கள் தோல்விக்கு பதிலடி தருவோம் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இனி தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு சென்று விளையாடும் போது அவர்கள் ஆடுகளத்தை கணித்து ஆடுவது பற்றி அரவிந்த டி சில்வா, பயிற்சியாளர் கிரஹாம் போர்ட் ஆகியோருடன் ஆலோசனை நடத்துவோம் என்று கூறியுள்ளார்.

இந்த அதிரடி விரைவில் இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் ஆரம்பமாகும் என கூறிய அவர் அந்நாட்டு நிலவரம் மற்றும் களத்தை கணிக்க வீரர்கள் தொடர் ஆரம்பிக்கும் முன்னரே அங்கு அனுப்பப்படுவாம் என ஜெயசூர்ய தெரிவித்துள்ளார்.




# அரசாங்கத்திற்கு எதிர்ப்பு நாளுக்கு நாள் அதிகரிப்பு


## கூட்டு எதிர்க்கட்சி தெரிவிப்பு

இந்த அரசாங்கத்திற்கு நாளுக்கு நாள் எதிர்ப்புகள் அதிகரித்து வருவதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி கொலோன்ன பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியின் பிணை முறிப்பத்திர விவகாரத்துடன் சம்பந்தப்பட்ட நிறுவனம் அரச நிறுவனத்தை கொள்வனவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

இது தொடர்பாக அரசாங்கம் அமைதியானகொள்கையை கடைப்பிடித்து வருகிறது எனவும் ரஞ்சித் சொய்சா தெரிவித்தார். (இ-7)



# ரூ.1,012 மில்லியன் வருமானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையால் 2016ஆம் ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பாதீட்டுத் தொகை ரூபா 857 மில்லியனாக இருந்த போதும் உண்மையாக ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 1012 மில்லியனாக காணப்படுகிறது. இதில் உள்ளூராட்சித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அரசிறை மானியம் ரூபா 461 மில்லியன் தவிர்ந்த ஏனைய வருமானமாக ரூபா 551 மில்லியன் காணப்படுகின்றது. இவற்றில் சபையால் ஈட்டப்பட்ட வருமானமாக ரூபா 263 மில்லியனும் ஏனைய நிதி மூலங்களில் இருந்து பெறப்பட்ட வருமானம் ரூபா 288 மில்லியனாகவும் காணப்படுகின்றது. சபையால் ஈட்டப்பட்ட சொந்த வருமானத்தில் சோலை வரி, தண்ணீர் விற்பனை மற்றும் களியாட்ட வரிகளாக ரூபா 65.1 மில்லியனும் கடைவாடகை / குத்தகையாக ரூபா 79.3 மில்லியனும் உரிமங்களாக ரூபா 21.7 மில்லியனும் சேவைகளுக்கான கட்டணமாக ரூபா 38.3 மில்லியனும் குற்றங்கள் தண்டங்களாக ரூபா 9.3 மில்லியனும் முத்திரைத் தீர்வாக ரூபா 34.4 மில்லியனும் ஏனைய வருமானமாகவும் ரூபா 14.9 மில்லியனும் பெறப்பட்டன.

ஏனைய நிதிமூலங்களில் வீதிப் புனரமைப்புக்காக நெல்சிப் திட்டத்தினூடாக ரூபா 18 மில்லியனும் சேர். பொன். இராமநாதன் வீதி புனரமைப்புக்காக ரூபா 50 மில்லியனும் விசேட மாநகர் திண்மக் கழிவகற்றல் வேலைத்திட்டத்திற்காக ரூபா 26 மில்லியனும் அங்காடித் தொகுதிப் புனரமைப்புக்காக ரூபா 13 மில்லியனும் வீதிப் புனரமைப்புக்காக மாகாணசபைகள்உள்ளூராட்சிஅமைச்சினால் ரூபா 4 மில்லியனும் மீள்குடியேற்ற அமைச்சினால் ரூபா 7 மில்லியனும் பெறப்பட்டன.

மேலும் மாநகர சபையின் தகவல் தொழில்நுட்ப மேம்படுத்தலுக்காக மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி ஊடாக ரூபா ஒரு மில்லியனும் பெறப்பட்டு செலவு செய்யப்பட்டது.

2016ஆம் ஆண்டில் சபையால் மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவீனம் ரூபாய் 1012 மில்லியனில் நிரந்தர ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளங்கள் ரூபா 461 மில்லியன் தவிர்ந்த ஏனைய செலவீனம் ரூபா 551 மில்லியனாகும். இதில் வேலைகள் முடிவுறாதுள்ள வேலைத் திட்டங்களுக்காக 2017ற்கு பொறுப்புக்களாககொண்டுசெல்லப்பட்ட தொகை ரூபா26 மில்லியன்களாகும். இவை தவிர ஈட்டப்பட்ட சொந்த வருமானத்தில் தனியார் பொதுப் பங்களிப்புடனான திண்மக்கழிவு சேகரித்தலில் ரூபா 13 மில்லியனும் வீதிப் புனரமைப்புக்காக ரூபா 29 மில்லியனும் மூலதனச்செலவிற்காக ரூபா 79 மில்லியனும் நீர்க்கம்பங்கள், குழாய்கள் பழுது பார்த்தல், புதிய இணைப்புக்கள் வழங்கல், பராமரித்தல் ஆகியவற்றுக்கு ரூபா 8.5 மில்லியனும் ஏனைய நூல் நிலையங்கள், சந்திகள், பொழுது போக்கு இடங்கள்,வாகனங்கள்மற்றும் நிலையான சொத்துக்களை பராமரித்தல் போன்ற மீண்டு வரும் செலவீனங்களுக்குமாக செலவு செய்யப்பட்டன.

மேற்படி செலவீனங்களின் மூலம் 2016ஆம் ஆண்டில் 15 வடிகால்களும் 70 வீதிகளும் புனரமைப்பு செய்யப்பட்டதோடு 2277 புதிய மின் விளக்குகள் பொருத்தப்பட்டன. 78 புதிய நீர் இணைப்புக்களும் 91 நீர்க் குழாய் உடைவுத் திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன. சபை எல்லைக்குள்ளும் சபைக்கு வெளியேயும் 61 தீயணைப்பு சேவைகள் மேற் கொள்ளப்பட்டன. புதிய கட்டட விண்ணப்ப அனுமதிகள் 620 வழங்கப்பட்டன. சபை எல்லைக்குள் 14,774 தொன் திண்மக்கழிவுகள் அகற்றப்பட்டதோடு 28.05 மில்லியன் லீற்றர் திரவக் கழிவுகளும் அகற்றப்பட்டுள்ளன. மேலும் 381 டெங்குத் தொற்று அறிவித்தல்கள் பெறப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. காக்கைதீவுக் கரையோரத்தில் நூறு தென்னை மரக்கன்றுகள் நடப்பட்டது. சபையின் சித்தமருத்துவப் பிரிவில் 65,995 நோயாளர்கள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். நாவாந்துறையில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களிற்கு பாடசாலை நாட்களில் இலவசப் பேருந்து சேவை வழங்கப்பட்டு வருகின்றது. நாவலர் கலாசார மண்டபம், பொது நூலக மண்டபம், நகர மண்டப மைதானம் ஆகியன நிகழ்வுகளின் தன்மைக்கேற்ப இலவசமாக வழங்கப்பட்டன என யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (இ

40 வருடங்களுக்கு மேலாக மக்களின்
நன்மதிப்பை வென்ற
"றோயல் குளுக்கோஸ்"
PACKED BY: ROYAL INDUSTRIES,
Colombo-13 TP:- 077 727 7670
தற்போது புதிய வடிவில்!!




இழந்த சக்தியை உடனடியாக
மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
"றோயல் குளுக்கோஸ்"
தொடர்புகளுக்கு
சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TP:-021 222 2567

துயர் பகிர்கின்றோம்
அமரர் இராசையா அம்பலவாணர்
எமது வித்தியாலய ஆசிரியர்
செல்வி. தசாயினி அம்பலவாணர்
அவர்களின் பாசமிகு தந்தை
இராசையா அம்பலவாணர் அவர்களின்
மறைவையொட்டி குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம
சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரிய நலன்புரிக்கழகம்
யா/ சதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.
(A-7320)



## இராசி பலன்

13.02.2017

(மாசி 01, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.34 மணிக்கு

திருதிகை பின்னிரவு 6.30 மணிவரை

பூரம் முற்பகல் 10.29 மணிவரை

சுபநேரம் 12.34-2.04 மணிவரை

இராகுகாலம் 8.04-9.34 மணிவரை

வளவன்

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக் | | | |
| சூரி கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அவிட்டம் மாலை 4.15 மணிக்கு கன்-சந் | | |
| புத | | | சந் ராகு |
| | சனி | குரு | |

**மேடம்:** தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்:** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், தாய் வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப காரியங்களில் கலந்து கொள்ள அழைப்பு வந்து சேரலாம்.

**மிதுனம்:** எடுத்த கருமங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்:** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்:** தேவையற்ற சந்தேகங்கள் ஏற்படலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு உங்கள் தகுதியை உயர்த்தும், தேக நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**கன்னி:** சுப காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம்.

**துலாம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெறுவீர்கள், குடும்ப உறுப்பினர்களிடையே மகிழ்ச்சி கூடும், முயற்சியில் முன்னேற்றம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** போசன சுகமுண்டு, தூர தேசத்திலிருந்து தகவல்கள் வந்து சேரலாம், செய் தொழில் மேன்மையுண்டு, உற்சாகமான நாள்.

**தனுசு:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மகரம்:** விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் அமைதி காண வேண்டிய நாள், திருடர் பயமுண்டு, முயற்சிகளில் அதிக பிரயாசை எடுக்க வேண்டிய நாள்.

**கும்பம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சிந்தனை மிகுதியான நாள்.

**மீனம்:** பகைவர்கள் விலகுவர், மற்றவர்கள் பாராட்டும் வகையிலான காரியங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

# நாம் இனவாதத்துக்குப் பதிலாக சமத்துவத்தை உருவாக்குவோம்



## அமைச்சர் அநுர யாழில் தெரிவிப்பு

நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற கசப்பான சம்பவங் களை மறந்து இனவாதத்துக்கு பதிலாக சமத்துவத்தை உருவாக்க அனைவரும் முன்வர வேண்டும் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 2016 ஆம் ஆண்டுக்கான இரண் டாவது இளையோர் மாநாடு நேற்று முன்தினம் யாழ்.வீரசிங் கம் மண்டபத்தில் நடைபெற் றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகை யில்,

நாட்டில் உள்ள மக்களிடையே மொழி தொடர்பான பிரச்சினை அதிகளவு காணப்படுகிறது. அரச கரும மொழியாக தமிழ், சிங்கள மொழிகள் சட்டமைப்பில் உள் வாங் கப்பட்டுள்ளது. ஆனால் மக்க ளிடத்தில் அந்த மொழிகள் அதி களவில் பயன்பாட்டில் இல்லாதி ருப்பது பாரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. அவை நிவர் த்தி செய்யப்படவேண்டும்.

எமது நல்லாட்சியில் மக்களின் காணி பிரச்சினைகள் படிப்படியாக தீர்த்து வைக்கப்படுகிறது. வீட மைப்பு தொழில்வாய்ப்பு தொடர் பாக அமைச்சரவையில் கலந்து ரையாடி வருகிறோம். அத்து டன் தொழில் வாய்ப்பு பிரச்சினை களை தீர்க்க வேண்டும் என்பத ற்காக பல நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறோம். தொழில் வாய்ப்பு பிரச்சினையை தீர்க்க புதிய முதலீடுகளை செய்ய வேண் டும்.

தற்போது சுற்றுலாத் துறை விருத்தி செய்யப்படுகிறது. அதன் மூலம் வேலைவாய்ப்பு பெற்றுக் கொள்ள முடியும்.

ஒவ்வொருவரும் பிரிந்து செயற் படுவதால் குறைகளை பேசிக்கொ ண்டே இருக்க வேண்டிய நிலை தான் ஏற்படும். எனவே ஒரு நாட்டின் இனமாக இணைய வேண்டும்.

நாட்டில் உள்ள இளையோரில் 90 வீதமானவர்கள் வேலைவாய் பில்லாமல் இருக்கிறார்கள். எமது அரசின் ஒரே குறிக்கோள் சமமான முறையில் சகல பிரதேசங்களி லும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பது. அந்த வகையில் அபி விருத்திகளை செய்து வருகி றோம் என அவர மேலும் தெரி வித்தார். (இ-9)

# போராட்ட காலத்தில் தனித்துறை அமைத்து கல்வியை வளர்த்தவர் தலைவர் பிரபாகரன்

## சிறிதரன் எம்.பி.தெரிவிப்பு



(கரணவாய்)

போராட்ட காலத்திலேயே தமி ழீழ தேசிய தலைவர் பிரபாகரன் கல்விக்கு தனித்துறையினை வைத்து கல்வியை வளர்த்தார். அக் காலத்தில் கல்வி அதிகாரங்கள் செம்மை ப்படுத்தப்பட்டன. ஆனால் இன்று நவீன தொழில்நுட் பங்கள் என்ற போர்வையில் மாணவர்க்ள வேறு திசையிற்கு கொண்டு செல் லப்படுகின்றனர். இது அவர்களை விலங்கு போடுகின்ற அல்லது சமூ கத்திலிருந்து தள்ளி வைக்கின்ற சூழலாகவுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம். சிறிதரன் தெரிவித்தார்.

வட இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் சனிக் கிழமை பாட சாலை அதிபர் திருமதி தேவ ராணி நவரட்ணம் தலைமை யில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தென்னாபிரிக் காவில் விடுதலைக்காக போராடிய நெல்சன் மண்டேலா கல்விச் சீர் திருத்ததை செய்திரு ந்தார்.

தேசிய தலைவர் வே.பிரபாக ரன் கல்விக்கு தனித்து றையினை வைத்து கல்வி யினை வளர்த்தார். இன்று நவீன தொழில் நுட்பங்கள் என்ற போர்வையில் மாண வர்கள் வேறு திசைக்கு கொண்டு செல்லப் படுகின்றனர். இதிலிருந்து வெற்றி பெற வேண்டுமானால் உல கத்தில் எந்த தொழில் நுட்ப த்தின் ஊடாக எங்களை வளர்தது்க் கொள்ள முடியுமோ அதனையே நாங்கள் கொண்டு வரவேண்டும். தேசியம் என் பது கல்வியிலோ விடுதலை யிலோ மட்டும் அல்ல தேசி யம் சார்ந்த பொருளாதாரம், தேசியம் சார்ந்த உரிமைகள் இருக்கின்றன. அதனை மாணவர்கள் கையில் எடு த்தால் நல்ல நிலையினை அடை வர்.

என்னால் முடியும் என்ற நம் பிக்கை இருக்கும் வரை ஒரு மனித னால் சாதிக்க முடியும். எத்தனை துன்பங்கள் துய ரங்கள் வந்தாலும் யார் ஏறி மிதித்தாலும் நம்பிக்கை, சத்தியம், நேர்மையோடு நடந்தால் எல்லாவற்றையும் முறியடிக்கலாம். இந்த மைதானத்தில் கூடி இருக் கிறோம் என்றால் ஈழ விடுதலைக் காக போராடிய எத்தனையோ ஆயி ரம் உறவுகளின் இரத்தத்திலும் சதையிலும் கண்ணீரிலும் நிறை ந்து இருக்கிறது எமது தேசம். மக் கள் போராட்டம் பற்றி மறந்து விடக்கூடாது. அது இரத்தத்திலும் உணர்விலும் கலந்து இருக்க வேண்டிய ஒரு விடயம். நாம் சளை க்காது நம்பிகையோடு செயற்பட்டு நல்ல மாணவர்களாக உருவாக வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3-60)

# சாயி மனித மேம்பாட்டு கல்விமுறை கண்காட்சி

(கரணவாய்)

சத்தியசாயி கல்வி நிறுவனம் நடத்தும் மனித உன்னதத்தை நோக்கிய சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி முறை கண்காட்சி எதிர்வரும் 19ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (இ-3-60)


# பொதுக் கூட்டம்

வலி. தென்மேற்கு (சண் டிலிப்பாய்) பிரதேச செயலக பகி ரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் வலி. தென் மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் 2017ஆம் ஆண்டிற் கான செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் – எஸ். எஸ். மன்மதராசா, செயலா ளர் – ம.வின்சன் குணாளன், பொரு ளாளர் – வே. சிவசுந்தரம், உப தலைவர் – சி. இராசதுரை, உப செயலாளர் – ஆர். துஸ்யந்தன், செயற்குழு உறுப்பினர்களாக – எம். எக்ஸ். சர்வானந்தன், வி.க. இரா சதுரை, கணக்குப் பரிசோதகர்– வ.ஸ்ரீ காந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-3)

# மக்களுடன் பேச முடியவில்லை எனக்கு பாதுகாப்பு அத்தியாவசியமே

## சுமந்திரன் எம்.பி.தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் என்னைக் கொல்லப்போகிறார்களா என்று எனக்கு தெரியாது. ஆனால் எனக்கு ரிய பாதுகாப்பு அத்தியாவசியமா னது என பாராளுமன்ற உறுப் பினர் சுமந்திரன் தெரிவித்துள் ளார்.

விடுதலைப்புலிகளால் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் நம்புகிறீர்களா? உங்க ளுக்கு அவ்வாறான அச்சுறு த்தல் எவையும் நடைபெற் றதாக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய் யப்படவில்லை என்ற முதலமைச் சரின் கருத்து தொடர்பில் ஊடகவி யலாளர்களால் கேட்கப்பட்ட கேள் விக்கு பதில் அளிக்கும் போது அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

என்னை கொலை செய் வதற் காக முன்னெடுப்பு செய் யப்பட்டு அது கைகூடாத வகையில் முன்னாள் போராளிகள் சிலர் கைது செய்யப் பட்டுள்ளார்கள். 3 தடவைகள் என்னை கொலை செய்ய முயற் சிகள் மேற்கொள்ளப் பட்டது என்று கிளிநொச்சி நீதவானுக்கு பொலி ஸார் எழுத்து மூலம் தகவல் கொடு த்தார்கள். 2 தடவைகள் கொலை செய்ய முயற்சித்தார்கள் என்று எனக்கு தெரிய வந்தது. ஆனால் தற்பொழுது 3 தடவைகள் முயற்சி மேற்பட்டதாக சொல்லப்பட்டுள் ளது.

பொலிஸாரின் ஜனவரி 31 ஆம் திகதி அறிக்கையில் தெட்டத்தெளி வாக சொல்லப்பட்டுள்ளது. அவ் வாறு சொல்லப்படவில்லை என உண்மைக்கு புறம்பான தகவலை ஏன் சொல்கிறீர்கள் என்று முதல மைச்சரிடம் நீங்கள் கேளுங்கள்.

என்னைக் கொல்வதற்கு வெளி நாட்டில் இருந்து பணம் மற்றும் அறிவித்தல் வந்தி ருந்தாக பொலி ஸார் கூறியு ள்ளனர். 5 பேர் கைது செய்யப்பட்டதற்கு 12 ஆயிரம் முன்னாள் போராளிகளை யும் குற்றம் சொல்ல தேவை யில்லை. ஆனால் குற்றச் செயலில் ஈடுபட் டால் நடவடிக்கை தொடரும். கவ னமாக இருக்க வேண்டும். உண்மை செய்திகளை திரிவுபடு த்துகிறவர்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

என்னைக் கொலை செய்ய முயற்சி செய்யப்பட்டது என்பது தொடர்பில் அது பொய்யானது என்று சந்தே கிக்க இடம் இல்லை. ஏனெ னில் பொலிஸாரால் குறிப்பிட்டுள்ள தகவலும் என்னுடைய செயற்பா டுகளும் ஒத்து வருவதால் பாதுகா ப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. அது அசௌகரியமான சூழலை உருவாக்கியுள்ளது. மக் களுடன் சுதந்திரமாக பேச முடிய வில்லை. இந்த பாதுகாப்பை நானே விரும் பவில்லை. ஆனால் தற்போது இப்பாதுகாப்பு அத்தியா வசியமானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# வடக்கில் பட்டதாரிகளுக்கு விரைவில் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும்

## போராட்டம் நடத்த முஸ்தீபு

வடக்கு மாகாணத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் விரைவில் அரச தொழில் வாய்ப்புகளுக்குள் உள்வாங்கப்படவேண்டும் என்றும் அண்மையில் தொண்டர் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நியமனத்தில் ஊழல் நடைபெற்றுள்ளமையை கண்டித்தும் எதிர்வரும் 20 ஆம் திகதி வடமாகாண ஆளுநர் அலுவலக முன்றலில் வடமாகாணத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றிணைந்து போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் நேற்றைய தினம் யாழ்.நல்லூர் ஆலய முன்றலில் ஒன்று கூடி கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். குறித்த கலந்துரையாடல் தொடர்பாக வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தலைவர் ஜெ.துசாந்தன் கருத்து தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் தற்போது உள்ளார்கள். அவர்களின் தொழில் வாய்ப்புக்கள் எவ்வாறான வகையில் அமைந்துள்ளது. கடந்த காலத்தில் பட்டதாரிகள் சங்கத்தின் செயற்பாடுகள் என்ன என்பது தொடர்பில் குறித்த கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

வடமாகாணத்தில் வேலையற்ற பட்டதாரிகள் அதிகரித்துள்ள நிலையில் அண்மையில் தொண்டராசிரியர்களுக்கான நியமனம் தேவையற்றதொன்று என கருதுகிறோம். அதிலும் தொண்டர் ஆசிரியர்கள் தொடர்பாக ஆரம்பத்தில் கூறப்பட்ட எண்ணிக்கையைவிட தற்போதுள்ள எண்ணிகை அதிகரித்துள்ளது. இதில் ஊழல் நடைபெற்றுள்ளது என கருதுகிறோம்.

போர்க்கால சூழலில் தொண்டராசிரியர்களாக இணைந்து கல்வி சேவை வழங்கியவர்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் 1990 ஆம் ஆண்டு பிறந்தவர்களுக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இது எவ்வகையில் சாத்தியம் என்பது தொடர்பில் ஆராயப்பட வேண்டும்.

அத்துடன் பட்டதாரிகள் உள்வாங்கப்படக்கூடிய நுண்கலைத்துறை மற்றும் சமூக விஞ்ஞான கற்கைகள் போன்ற துறைகளில் உள்ள பாடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படவில்லை. மேலும் பட்டதாரிகள் ஆரம்பக்கல்வி துறையில் இணைவதற்கு விருப்பமாக இருக்கிறர்கள். ஆனால் விண்ணப்பங்கள் கோரப்படவில்லை. அவர்களை ஆரம்ப கல்வித்துறையில் இணைத்துக்கொள்ள வேண்டும் என ஏகமனதாக கோரிக்கை விடுத்துள்ளோம்.

தொண்டர் ஆசிரியரிடம் நியமனம் சரியான முறையில் வழங்கப்பட வேண்டும். ஆசிரிய நியமனத்தில் பட்டதாரிகள் உள்வாங்கப்பட வேண்டும். அத்துடன் வேறு தொழில்வாய்ப்புக்குள் பட்டதாரிகள் உள்வாங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து வடமாகாணத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றுகூடி எதிர்வரும் 20 ஆம் திகதி ஆளுநர் அலுவலகம் முன்றலில் போராட்டம் ஒன்றினை மேற்கொள்வதாக முடிவெடுக்கப்பட்டுள்ளதுடன் அன்றைய தினம் எமது சங்கத்துக்கான புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)






## அமெரிக்க பாதுகாப்பு நிபுணர் வடக்கிற்கு நேரில் வந்து ஆய்வு



அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் வடபகுதி வந்து நிலைமைகளை நேரில் ஆய்வு செய்துள்ளார்.

அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்தில், தெற்காசியப் பிராந்திய விவகாரங்களுக்கான நிபுணராகப்பணியாற்றும் ஜோன் ஹில்ஸ் என்ற அதிகாரி கடந்தவாரம் இலங்கைக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்தப் பயணத்தின் போது, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் கடற்படை ஆலோசகராகவுள்ள லெப். கொமாண்டர் பிரையன் பேஜுடன் இணைந்து வடபகுதியில் ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்.

கடந்த 8ஆம் திகதி வடக்கிற்குப் பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்க பாதுகாப்பு நிபுணர், இங்குள்ள பிராந்திய இராணுவத்தலைமையகங்களுக்கும் சென்று பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது, அமெரிக்கப் பாதுகாப்பு நிபுணர் ஜோன் ஹில்ஸ், முல்லைத்தீவு படைகளின் தலைமையகத்தில், அதன் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் டம்பத் பெர்னாண்டோவையும் சந்தித்துள்ளார். (இ-7)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: சூரிசெவ் 3 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/கடை
தொ.இ: B/6916

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:BAகனடா PR
தொ.இ: B/6917

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 73 செவ் 1 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:லண்டன் PR
தொ.இ: B/6919

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ரோகினி
உயரம்: 164cm
தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ் PR
தொ.இ: B/6920

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 45 சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/6934

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
உயரம்: 157cm
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/6936

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 150cm
தகைமை/தொழில்:HNDTHM
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/6938

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 69 செவ் 4 இல்
தகைமை/தொழில்:ICT/ஆசிரியர்
தொ.இ: G/6939

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:-kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.


## வடமாகாண மாணவர்களுக்கான ஆங்கில எழுத்துக் கூட்டல் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்யும் நோக்கில் ஆங்கில எழுத்துக்கூட்டல் (Spelling Bee Competition) போட்டி எதிர்வரும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் மூன்றாவது ஆண்டாக இவ்வருடமும் நடத்தப்படவுள்ளது.


காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் கனடாவில் வாழும் ஆங்கில சிறப்புப் பட்டதாரியான சிவராசா பாலராஜாவின் வழிநடத்தலில் நடைபெறவுள்ள இப்போட்டியில் 05 வயது தொடக்கம் 07 வயது வரையான (தரம் 02 மற்றும் அதற்கு உட்பட்டவர்களும்) மாணவர்கள் ஒரு பிரிவாகவும் 08 வயது தொடக்கம் 10 வயது வரையான (தரம் 03 தொடக்கம் தரம் 05 வரையான) மாணவர்கள் ஒரு பிரிவாகவும், 11 வயது தொடக்கம் 13 வயது வரையான (தரம் 06 தொடக்கம் தரம் 08 வரையான) மாணவர்கள் ஒரு பிரிவாகவும், 14 வயது தொடக்கம் 16 வயது வரையான (தரம் 09 தொடக்கம் தரம் 11 வரையான) மாணவர்கள் ஒரு பிரிவாகவும் என நான்கு பிரிவுகளாக இடம் பெறவுள்ளன.

இதில் இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகும் மாணவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன், முதல் மூன்று நிலைகளைப் பெறும் மாணவர்களுக்குப் பெறுமதியான பணப் பரிசில்களும், வெற்றியீட்டும் மாணவருக்கு வெற்றிக் கேடயமும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களையும், சொற்தொகுதிகளையும் http://marumalarchy.org/ என்ற மறுமலர்ச்சி மன்ற இணையத் தளத்திலோ அல்லது காலையடி, பண்டத்தரிப்பு என்ற முகவரியில் அமைந்துள்ள மன்ற அலுவலகத்தில் இருந்தோ, வட மாகாணத்தில் அமைந்துள்ள புத்தக விற்பனை நிலையங்களில் இருந்தோ பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பத்திற்காகவோ, இப் போட்டியில் பங்குபற்றுவதற்காகவோ மாணவர்களிடமிருந்து எவ்வித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மார்ச் மாதம் 03 ஆம் திகதிக்கு (03.03.2017 க்கு) முன்னதாக கல்வி கற்கும் பாடசாலை அதிபரின் சான்றுப்படுத்தலுடன் மறுமலர்ச்சி மன்றம், காலையடி, பண்டத்தரிப்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (இ-9)

# காணி விடுவிப்புக்காக சிவ பிரார்த்தனை



கோப்பாப்பிலவு பிலவுக் குடியிருப்பு மக்களின் காணி விடுவிப்பு மீள்குடியேற்றம் வெற்றி பெற வேண்டி கோப்பாப்பிலவு மாதிரி கிராம பிள்ளையார் ஆலயத்தில் கடந்த ஆறு நாட்களாக சிவ பிரார்த்தனையில் ஈடுபடும் ஆறுமுகம் வேலாயுதம் பிள்ளையை படத்தில் காணலாம்.

கடந்த 6 ஆம் திகதி முதல் தொடர்ந்து 6 நாட்களாக பிள்ளையார் ஆலயத்தில் பூசை வழிபாடும் நடைபெற்று வருகின்றது. (படம்;- பனிக்கன்குளம் செய்தியாளர்.)

## கிளி, முல்லை, யாழ்ப்பாணம் மாவட்டங்களின்

# பெண் அமைப்புக்கள் ஒன்றிணைந்து பிலவுக்குடியிருப்பு காணி விடுவிப்புக்கு ஆதரவாக நேற்று கவனயீர்ப்பு






பிலவுக்குடியிருப்பு பிரதேசத்தில் விமானப் படையினர் முகாம் முன்பாக கடந்த 13 நாட்களாக இரவு பகலாக கொளுத்தும் வெயிலிலும் கொட்டும் பனியிலும் காணி விடுவிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதிகளவான பெண்களும் சிறார்களும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறுபட்ட பெண்கள் அமைப்புக்கள் ஒன்றிணைந்து விமானப்படை முகாமிற்கு முன்பாக நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர் **எங்களின் நிலங்களை எமக்குத்தா!, பெண்களின் வாழ்வாதாரத்தை இல்லாதொழிக்கும் காணி அபகரிப்பு ஒழிக, வீதியோரமே எமது வாழ்விடமா?** போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இறுதியாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் பிலவுக்குடியிருப்பு மக்களை சந்தித்து கலந்துரையாடி இப் போராட்டம் வெற்றி பெறும் வரை தமது பூரண ஆதரவு கிடைக்குமெனவும் தெரிவித்தனர். (2-281)

## காணி விடுப்பு; மீள்குடியேற்றத்திற்காக

# போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுடன் வடக்கு மாகாண சபையினர் இணைவு



கேப்பாபிலவு - பிலவுக் குடியிருப்பு பகுதியில் விமானப் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமது சொந்த வாழ்விடம் கோரி நேற்று 13 ஆவது நாளாகவும் தொடரும் போராட்டத்திற்கு வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் உட்பட அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அடங்கிய குழுவொன்று நேற்றைய தினம் அங்கு சென்று மக்களுடன் கலந்துரையாடி அவர்களது தொடர் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியிருந்தனர்.

அந்த வகையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கம், வடக்குமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன், எஸ்.பசுபதிப்பிள்ளை, சர்வேஸ்வரன், ஜி.ரி.லிங்கநாதன், அ.பரஞ்சோதி உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் வருகை தந்து மக்களின் போராட்டம் தொடர்பான நிலைப்பாடுகளை கேட்டறிந்ததுடன் ஆதரவு வழங்குவதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன் இப்போராட்டம் தொடர்பில் உரிய தரப்பினருக்கு கூறி அதற்கு தீர்வு பெற்றுத் தருவதற்கு முயல்வதாகத் தெரிவித்தனர். (2-281)




## 13 ஆவது நாள்

# பிலவுக் குடியிருப்பு மக்களை சந்தித்து பல தரப்பினரும் ஆதரவு




சொந்தமண்மீட்புப்போராட்டத்தில் 13 ஆவது நாளான நேற்றைய தினமும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பிலவுக் குடியிருப்பு மக்களுக்கு ஆதரவு வழங்கும் முகமாக பல்வேறு தரப்பினரும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் அகில இலங்கை அரசாங்க பொது ஊழிய சங்கத்தை சார்ந்தவர்களும் நேற்றைய தினம் மக்களுக்குஆதரவுவழங்கிபோராட்டத்தில் இணைந்தனர்.

அதனை விட முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், கத்தோலிக்க மதத்தலைவர்கள், இளைஞர் அணியினர் என பல்வேறு தரப்பினரும் நேற்றைய தினம் போராட்டத்திற்கு வருகை தந்து தங்களின் ஆதரவை வழங்கியிருந்தனர். (2-281)

# அரசே! எங்களைப் போலவே இம் மக்களையும் அவர்களது பரம்பரை நிலங்களில் வாழவிடு

## சம்பூர் இளைஞர் அணி நில மீட்பு போராட்டத்திற்கு ஆதரவு




தமது சொந்தக் காணிகளை விடுத்து மீள் குடியேற அனுமதிக்குமாறு கோரி தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வரும் கோப்பாப்பிலவு - பிலவுக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவாக சம்பூரில் தமது காணிவிடுப்புபோராட்டத்தில் ஈடுபட்டு வெற்றி கண்ட இளைஞர் அணியொன்று நேற்றைய தினம் பிலவுக் குடி யிருப்பு மக்களுடன் இணைந்து தமது ஆதரவை வழங்கியிருந்தனர். இவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த காலத்தில் சம்பூர் பகுதியில் காணி விடுப்பு தொடர்பில் போராடி வெற்றி கண்டோம்.

இதேபோன்று இவர்களின் நிலம் மீட்பு போராட்டத்திற்கு நம்பிக்கையூட்டும் செயலாகவே வருகை தந்துள்ளோம். திருகோணமலை சம்பூரில் இது போன்ற மாபெரும் மக்கள் போராட்டமே வெற்றி கண்டது.

தீர்மான அர்ப்பணிப்புடன் முன்னெடுக்கப்படும் போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும். ஆதலால் எமது முழுமையான ஆதரவு இம் மக்களுக்கு கிடைக்கும் என தெரிவித்தனர். (2-281)

# படையினர் மக்களின் வளம் நிறைந்த காணிகளை கையகப்படுத்துவதை ஒருபோதும் ஏற்கமுடியாது

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் கேப்பாப்பிலவு மக்களை சந்தித்து தெரிவிப்பு



கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்கள் உறுதியாக தங்களின் தொடர் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றார்கள். மக்கள் அரசியலவாதிகளையும், அதிகாரிகளையும் நம்பியிருந்த நிலைமை மாறி தங்களுடைய பிரச்சினைகளை தாங்களே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று எழுச்சிக்கொண்டது வரவேற்கத்தக்க விடயமாகும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அம் மக்கள் மத்தியில் அவர் கூறுகையில்,

இந்த மக்களின் போராட்டம் தமிழ் மக்கள் மத்தியில் நிலத்திற்காகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அரசியல் கைதிகள் போன்ற தீர்க்கப்படாது உள்ள பிரச்சினைகளை எதிர்கொள்கின்ற மக்களுக்கு ஒரு உந்து சக்தியாக இருக்கும்.


போராட்டத்திற்கு எவ்வித வேறுபாடுகளும் இன்றி அரசியல் தரப்புக்கள், மத அமைப்புகள், பொது அமைப்புக்கள் என அனைவரும் தங்களுடைய தார்மீக ஆதரவை வழங்கி வருகின்றார்கள். இது இந்த மக்களுக்கு தங்களின் போராட்டத்திற்கு பின்னால் அனைவரும் நிற்கின்றார்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தங்களின் சொந்த நிலங்களுக்குச் செல்வதனை தவிர வேறு எந்த சமரசத்திற்கும் செல்லத் தயாராக இல்லை.

படையினர் தற்போதும் மக்களின் வளம்மிக்க ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை ஆக்கிரமித்து வைத்திருப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

அவர்களின் போராட்டம் வெற்றிபெற வேண்டும். அதற்கு அனைவரும் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (2-15-3/12)

# 68 கிலோ கேரள கஞ்சா பொதிகள் மீட்பு



(பரந்தன்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய விசேட மது ஒழிப்பு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையையடுத்து 68 கிலோகிராம் கேரள கஞ்சாப் பொதிகள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன.

பளை வத்திராயன் பகுதியிலிருந்து குருநாகல் நோக்கி கார் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்ட 34 கிலோ கேரளக் கஞ்சாப் பொதிகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடம் மேற்கொண்ட விசாரணையையடுத்து மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், 11 கிலோ கேரளக் கஞ்சாவும் மீட்கப்பட்டது. குறித்த சம்பவத்தின்போது ஒரு மோட்டார் கார், 3 மோட்டார் சைக்கிள்கள், மீன்பிடி வள்ளம் இரண்டு, அதி வலு கொண்ட இஞ்சின் இரண்டும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

சந்தேக நபர்களை 7 நாட்களிற்கு பொலிஸ் விசாரணைக் குட்படுத்துவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்த நிலையில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் 23 கிலோ கேரளக் கஞ்சாவை நேற்று முன்தினம் மீட்டனர்.

நேற்றைய தினம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெலிக்கன்ன, கிளிநொச்சி உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரொசான் ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் மீட்கப்பட்ட பொருட்களை பார்வையிட்டனர்.

குறித்த நடவடிக்கையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெலிக்கன்னவினால் நியமிக்கப்பட்ட மது ஒழிப்பு விசேட குழுவுடன் பளை பொலிஸாரும் ஈடுபட்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், பிரதி பொலிஸ் அத்தியட்சகர் ரொசான் ராஜபக்ஷ உள்ளிட்ட உயரதிகாரிகளின் வழி நடத்தலில் பளை பொலிஸாரால் பல இலட்சம் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சா மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (2-312-15)

# தொண்டராசிரியர்களின் நியமனத்தை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.தெரிவிப்பு

(குருமன்காடு)

நீண்டகாலமாக போதியளவு கொடுப்பனவின்றி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக உழைத்த தொண்டர் ஆசிரியர்களின் நியமனத்தை விரைவுபடுத்த வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, சேமமடு சண்முகானந்தா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணம் யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசம். இங்குள்ள மாணவர்கள் வளப்பற்றாக்குறையுடன் கல்வி கற்கும் அதே வேளை ஆசிரியர் வளம் இன்றியும் மிகவும் கஷ்டப்பட்டே தமது கல்வியைத் தொடர்ந்தனர். இதன்போது மாணவர்களுக்கு கல்வியைப் புகட்டுவதற்காக பல இளைஞர், யுவதிகள் தொண்டர் ஆசிரியர்களாக போதியளவு கொடுப்பனவும் இன்றி பணியாற்றியிருந்தனர். இவர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்ந்தும் இழுபறியில் இருந்து வருகிறது. இதனால் பலர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அடுத்து தாம் என்ன செய்வது என்று தெரியாத நிலையில் பலர் உள்ளனர். தற்போது வெளியாகியுள்ள தொண்டர் ஆசிரியர் பெயர்ப் பட்டியலில் வவுனியா வடக்கில் உள்ள சிலர் விடுபட்டுள்ளனர். அவர்களையும் உள்வாங்கி அவர்களுக்கான நியமனத்தை விரைவுபடுத்த மத்திய, மாகாண கல்வி அமைச்சுக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். (2-250)




# டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் கண்டறியப்பட்டு ஒழிப்பு நடவடிக்கை

## பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன





வவுனியா, பட்டாணிச்சூர பகுதியில் டெங்கு நுளம்பை ஒழிக்க விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நெளுக்குளம் பொலிஸார் மற்றும் வவுனியா பொது சுகாதார பணிமனையினர் இணைந்து நேற்று முன்தினம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பட்டாணிச்சூர் கிராம சேவையாளர் பிரிவில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் கண்டறியப்பட்டன. இதனை அழிக்கும் நடவடிக்கையே இதன்போது இடம்பெற்றது. வீடு வீடாகச் சென்று மக்களுக்கு டெங்கு நுளம்பின் தாக்கம் தொடர்பில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இப்பகுதியில் அமைந்திருந்த பாடசாலை, பள்ளிவாசல், வாகனங்கள் திருத்தும் இடங்கள், பொதுமக்களின் வீடுகள் என்பவற்றில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் நுளம்பு பெருகும் இடங்களும் அடையாளம் காணப்பட்டு அழிக்கப்பட்டன.

இவ் டெங்கு ஒழிப்பு விசேட நிகழ்வில் வைத்தியர் லவன், பொது சுகாதார பரிசோதகர் வாகீசன். நெளுக்குளம் பொலிஸ் உத்தியோகத்தர், கிராம சேவையாளர் தவராசா, சமுதாய பாதுகாப்பு குழு தலைவர் நாகூர்கனி ஸாபி, அதன் பொருளாளர் ஜெமீல் மற்றும் சமுதாய பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்தி விவசாய நிலங்களுக்கான நில அளவை வரைபடங்களை வழங்குமாறு கோரிக்கை



மன்னார் மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்கள் வன இலாகாவால் கையகப்படுத்தப்பட்டிருந்த நிலையில் தமது நிலங்களுக்கான நில அளவை வரைபடங்களை வழங்குமாறு கோரி 71 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் மடு பிரதேச செயலகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி வியாழக்கிழமை இக் கோரிக்கையை இம் மக்கள் முன்வைத்துள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மன்னார் மடுப்பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் பகுதியில் '965, 1996, 1970 மற்றும் 1971 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் உணவு விவசாயத்திட்டத்தின் கீழ் விவசாயச் செய்கைக்காக அப் பகுதி மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டிருந்தன. அக் காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் முன்னைய ஆட்சியிலிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்தன.

யுத்த சூழ்நிலை காரணமாக இவ் விவசாய நிலங்கள் நீண்டகாலமாக கைவிடப்பட்டிருந்த நிலையில் அவை சிறிய பற்றைக்காடுகளாக மாறியுள்ளன. யுத்தம் முடிவடைந்த பின்னர் மீள்குடியேறியுள்ள அப் பகுதி மக்கள் தமது சொந்த விவசாய நிலங்களை துப்புரவு செய்வதற்கு வன இலாகாவால் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், அக் காணிகளை தமது காணிகளென அடையாளப்படுத்தி சுமார் 200 ஏக்கர் காணியில் எல்லைக்கற்களை புதைத்தி விட்டு சென்றுள்ளனர். இதனால் அப்பகுதி மக்களின் விவசாய நிலங்கள் 200 ஏக்கர் பறிபோகும் நிலையில் உள்ளன.

இந் நிலையில் அம்மக்கள் தமது உறுதிக்காணிகளுக்கான நில அளவை வரைபடங்களையும், அது தொடர்பான விபரங்களையும் தருமாறு கோரி தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து மடுப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் கையளித்துள்ளனர்.

பிரதேச செயலாளர் விடுமுறையில் இருந்ததால் அவ் விண்ணப்பங்களை பெற்றுக் கொண்ட நிர்வாக உத்தியோகத்தர் இது தொடர்பில் 14 நாட்களுக்குள் தெரியப்படுத்துவதாக மக்களிடம் வாக்குறுதியளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (2-250)

# பண்டாரவன்னியனின் உருவச்சிலை இனந்தெரியாதோரினால் உடைப்பு

## மல்லாவி நகரப்பகுதியில் சம்பவம்



(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மல்லாவி நகரப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அடங்காப்பற்று வன்னிமண்ணைக் கடைசியாக ஆட்சி செய்த பண்டாரவன்னியனின் உருவச்சிலை இனம் தெரியாத விசமிகளால் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலைவேளையில் உடைக்கப்பட்டமைக்கு மல்லாவி கிராம பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவது, நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகனின் பன்முகப்படுத்த பட்ட நிதியொதுக்கீடான 5 இலட்சம் ரூபாவை துணுக்காய் பிரதேச செயலக ஒத்துழைப்புடன, துணுக்காய் பிரதேச செயலகத்திற்கு முன்பாக திருவள்ளுவர் உருவச் சிலையும், மல்லாவி நகரப் பகுதியில் பண்டார வன்னியன் உருவச் சிலையும், அமைக்கும் பணிகளை அந்தந்தப் பகுதிகளில் உள்ள கிராம அமைப்புக்களின் ஊடாக முன்னெடுத்திருந்தார்.

இதில் பண்டாரவன்னியன் உருவச் சிலை கடந்த ஜனவரி மாதம் 2 ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது

இந் நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளையில் பண்டார வன்னியன் சிலையின் பாதுகாப்பு கேடயம் ஏந்திய கையின் தோள் மூட்டுப் பகுதி உடைக்கப்பட்டு, வாளின் நுனிப்பகுதியும் உடைக்கப்பட்டுள்ளது. (2-15

# சொத்துக் குவிப்பு வழக்கு இறுகும் சசிகலாவின் கழுத்து

## சட்டத்தரணி ஆச்சாரியர் அதிரடி





சசிகலா, அ.தி.மு.க-வின் சட்டமன்றக் கட்சித் தலைவராகத் தேர்வாகி முதல்வர் நாற்காலியை நோக்கி நகர்ந்த நிலையில், 'அடுத்த வாரத்தில் சொத்துக்குவிப்பு வழக்கின் தீர்ப்பு வெளியாகும்' என அறிவித்தது உச்ச நீதிமன்றம். இந்த வழக்கை மையமாக வைத்து, 'இதில் தீர்ப்பு தரும் வரை, சசிகலா பதவியேற்கத் தடை விதிக்க வேண்டும்' என பலத்த குரல் எழுந்துவருகிறது. இந்தச் சூழலில், கர்நாடக அரசு சட்டத்தரணியாக இருந்து இந்த வழக்கில் வாதாடி முடித்திருக்கும் பி.வி.ஆச்சார்யாரை சந்தித்த போது,

**“தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் இரண்டாம் நபராகக் குற்றம் சாட்டப்பட்ட சசிகலாவின் பங்கு என்ன?”**



“சசிகலாவுக்குப் பெரிய ரோல் இருக்கிறது. வழக்கில் சம்பந்தமுள்ள 32 கம்பனிகளில், பெரும்பாலான கம்பனிகளில் சசிகலா பங்குதாரராக இருக்கிறார். இந்த நிறுவனங்களின் மூலம் வரும் வருமானத்தை எந்த வங்கிக் கணக்கில் போட வேண்டும், எப்போது போட வேண்டும் என்று வழிகாட்டியவர் சசிகலாதான். புதிய சொத்துகளை வாங்கும்போது 'எந்த நிறுவனத்தின் பெயரில் வாங்க வேண்டும்' என்றும், 'அதையெல்லாம் எப்படிப் பதிவு செய்ய வேண்டும்' என்றும் ஜெயலலிதாவுக்குப் பரிந்துரை செய்ததும் சசிகலா தான். 'ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் கூட்டுச் சதி செய்து தனித் தனியாகக் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்' என்று கீழ் நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது.

'ஊழல் தடுப்புச் சட்டம் அரசு ஊழியர்களுக்குத் தான்' என்று இருந்தாலும், அரசு ஊழியரான ஜெயலலிதாவைக் குற்றம் செய்யத் தூண்டியவர்களாக சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் இருந்திருக்கிறார்கள். எனவே, இந்த வழக்கில் சசிகலாவின் மீது, குற்றம்செய்யத் தூண்டுதல், குற்றத்துக்கான கூட்டுச்சதி செய்தல் போன்ற முக்கிய குற்றச்சாட்டுகள் இருக்கின்றன.”

**“ஜெயலலிதாவின் மரணம், தீர்ப்பை பாதிக்குமா?”**

“நிச்சயம் பாதிக்காது. முதல்கட்ட விசாரணை நடந்தபோது, ஜெயலலிதா உயிரிழந்திருந்தால் வழக்கில் பாதிப்பு ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால், இறுதி விசாரணை முடிந்து உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்புக்காகத் தள்ளிவைத்திருக்கும் நிலையில், ஜெயலலிதாவின் உயிரிழப்பு என்பது வழக்கின் தீர்ப்பை எந்தவிதத்திலும் பாதிக்காது. ஒருவேளை மீண்டும் விசாரணைக்கு வந்தால்கூட, கூட்டுச்சதியில் தனித்தனியாகக் குற்றம் செய்தவர்கள் என்பதால் இந்த மூன்று பேரும் தனித்தனியாக விசாரிக்கப்படுவார்கள்.”



**“தீர்ப்பு எப்படி இருக்கும என எதிர்பார்க்கிறீர்கள்?”**

“இந்த வழக்கின் சட்டத்தரணி என்ற முறையில், நீதிமன்றத் தீர்ப்பு பற்றி நான் எந்தக் கருத்தும் கூற முடியாது. ஆனால், ஒவ்வொரு சட்டத்தரணிக்கும் அவர்களுடைய வழக்கில் வெற்றிபெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கத்தான் செய்யும்.”

**“ஜெயலலிதா சொல்லித்தான் செய்தோம். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என இப்போது சசிகலா உள்ளிட்ட மூன்று பேரும் சொல்லித் தப்பிக்க வாய்ப்பு இருக்கிறதா?”**

“இது புதிய வழக்கு அல்ல. பல ஆண்டுகளாக நடந்துவந்த வழக்கு. எல்லா விசாரணையும் கீழ் நீதிமன்றம், உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் என எல்லா இடங்களிலும் முடிந்த பிறகு மேல்முறையீட்டு வழக்கில் தீர்ப்புவரும் நிலையில், சசிகலா, சுதாகரன், இளவரசி யாரும் மாற்றிப் பேச முடியாது.”

**“தீர்ப்பு வருவதற்கு முன் தமிழக முதல்வர் பதவியை சசிகலா ஏற்றுக்கொள்வது சரியா?”**

“சட்டப்படி இன்று அவர் முதல்வர் ஆவதற்குத் தடையில்லை. ஒருவேளை உச்ச நீதிமன்றத்தில் தண்டனை பெற்றால் மீண்டும் மாற்றம் வரும். அதனால், தமிழ்நாட்டில் அசாதாரண சூழ்நிலை ஏற்படும். ஏன் அந்த நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து. ஊழல் தடுப்புச் சட்டத்தில் ஒருநாள் தண்டனை விதிக்கப்பட்டாலும் முதல்வர் பதவியில் இருக்க முடியாது. தேர்தலிலும் போட்டியிட முடியாது. மற்ற சட்டங்களின் கீழ் இரண்டு வருடங்களுக்கு மேல் தண்டனை விதிக்கப்பட்டால் முதல்வராக ஆக முடியாது, தேர்தலிலும் போட்டியிட முடியாது.”

**“நீங்கள் கர்நாடக அரசு அட்வகேட் ஜெனரலாக இருந்ததால் கேட்கிறோம். சசிகலா பதவி ஏற்பு விடயத்தில் தமிழக ஆளுநர் எப்படி செயற்பட வேண்டும்?”**

“சசிகலா பதவியேற்க முடியாமல் காலம் தாழ்த்துவதும், அவருடைய விருப்பத்தின்படி உடனடியாக பதவி ஏற்கச் செய்வதும் ஒரு மாநிலத்தின் உச்சபட்ச அதிகாரத்தில் இருக்கும் ஆளுநரின் முடிவு. இதில் என்னுடைய தனிப்பட்ட கருத்துகளைக் கூற முடியாது.”

**“உச்ச நீதிமன்றத்தில் விசாரணை விரைவில் முடிந்தது. ஆனால், தீர்ப்பு இவ்வளவு மாதங்கள் தள்ளிப் போயிருக்கிறதே?”**

“காலதாமதம் பற்றி என்னிடம் கேட்கக் கூடாது. இப்போதாவது தீர்ப்பு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருப்பதில் மகிழ்ச்சி. இதுபோன்ற வழக்குகளில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்குவதில் காலதாமதம் செய்யக் கூடாது.”



**“கடந்த ஐந்து மாதங்களாகத் தீர்ப்பு பற்றி எதுவும் பேசாமல் இருந்த நீங்கள், சசிகலா பதவி ஏற்க இருந்த சூழ்நிலையில், 'விரைவாகத் தீர்ப்பு சொல்ல வேண்டும்' என மெமோ தாக்கல் செய்திருக்கிறீர்களே?”**

“இது தவறான தகவல். இது, அ.தி.மு.க-வின் சட்டமன்றக் கட்சித் தலைவராக சசிகலா அறிவிக்கப்பட்டதற்குப் பின் எடுக்கப்பட்ட முடிவு அல்ல. கடந்த 4ஆம் திகதி கர்நாடக சட்ட வல்லுநர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதில் கர்நாடக அரசு தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் வாதாடும் சட்டத்தரணி துஷ்யந்த தவே கலந்து கொண்டார். அவரிடம் நான், 'இந்த வழக்கின் தீர்ப்பு நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்து வருகிறது. விரைவாகத் தீர்ப்பு வழங்க, நீங்கள் உச்ச நீதிமன்றத்தில் முறையிட வேண்டும்' என்று கேட்டுக் கொண்டேன். அதையடுத்து அவர் உச்ச நீதிமன்றத்தில் மெமோ தாக்கல் செய்தார். இந்த சூழலில் உச்ச நீதிமன்றம், ஒரு வாரத்தில் தீர்ப்பு வழங்குவதாக அறிவித்தது. இடையில் 5ஆம் திகதி, சசிகலா சட்டமன்றக் கட்சித் தலைவராகத் தேர்வு செய்யப்பட்ட அறிவிப்பு வந்தது. அந்த அறிவிப்புக்கும் தீர்ப்புக்கும் சம்பந்தம் இல்லை.”

ஜூனியர் விகடன

# சுற்றுலா பயணிகளின் வசதிக்காக விரைவில் மின்சார கார் அறிமுகம்

சுற்றுலா பயணிகளின் வசதிக்காக எதிர்வரும் காலங்களில் மின்சார உயர்தூக்கி மற்றும் மின்சார மோட்டார் வாகனங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

முதற்கட்டமாக சிகிரியா சுற்றுலா பயணிகளை இலக்கு வைத்து இந்த வாகனங்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

சிகிரியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொல்பொருள் நிர்மாணங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

சிகிரியாவை பார்வையிடுவதற்காக செல்லும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதற்கமைய மின்சார உயர்தூக்கி மற்றும் மின்சார மோட்டார் வாகனங்களை அறிமுகப்படுத்தி வைபபது அவசியம் என அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் வெளிநாட்டு விஜயங்களில் ஈடுபடவுள்ளமையினால் நாளை முதல் அமைச்சர் அகிலவிராஜ காரியவசம் பதில் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பசில் மீண்டும் திரும்புகிறார்

(கொழும்பு)

நீதிமன்றத்தின் அனுமதியுடன் வெளிநாடு சென்றிருந்த முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அடுத்த வாரம் இலங்கை திரும்பவுள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

கடந்த அரசாங்கத்தில் திவிநெகும திணைக்களத்திற்கு சொந்தமான 29 மில்லியன் ரூபா பணத்தை பயன்படுத்தி 50 இலட்சம் நாட்காட்டிகளை அச்சிட்டமை சம்பந்தமாக அவருக்கு எதிரான வழக்கில் ஆஜராகவே பசில் இலங்கை வருகிறார்.

இந்த வழக்கு கடந்த டிசெம்பர் மாதம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது பசில் ராஜபக்ஷ வெளிநாடு செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இதனையடுத்து அவர் டிசெம்பர் 10 ஆம் திகதி மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்கா புறப்பட்டுச் சென்றதாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்திருந்தார். (இ-7)

## ஜல்லிக்கட்டு காளையால் செந்தில் தொண்டமானுக்கு கார் பரிசாக கிடைத்தது!

சர்வதேச புகழ்பெற்ற மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியின்போது சிறந்த காளைக்காக இலங்கையின் மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமானுக்கு கார் ஒன்றும் பசு ஒன்றும் பரிசாக கிடைத்துள்ளது.

அலங்காநல்லூரில் இடம் பெற்ற போட்டியின் போது இந்த பரிசு அவருக்கு கிடைத்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக நடைபெறாமல் இருந்த ஜல்லிக்கட்டு போட்டி அலங்காநல்லூரில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வெளிநாட்டு பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை

வெளிநாட்டு பணியாளர்களுக்கு ஓய்வூதிய கொடுப்பனவினை வழங்க தீர்மானம் எடுத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டு பணியாளர்களுக்கு ஓய்வூதிய கொடுப்பனவினை வழங்கும் நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

பணியாளர்களை பாதுகாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு மாத்திரம் இந்த ஓய்வூதிய கொடுப்பனவினை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக அவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் வரப்பிரசாதங்களை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## நிர்வாகத் தெரிவு

வடமராட்சி புலோலி தென்மேற்கு கந்தமுருகேசனார் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் வெ.சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் மு.ஜெகதேவன் (ஜே.பி), செயலாளர் திருமதி நே.நாகேஷ்வரி, பொருளாளர் திருமதி த.குகேந்திரராணி, உபதலைவர் பா.இரகுநாதன், உபசெயலாளர் சு.நடராசா, செயற்குழு உறுப்பினர்கள் திருமதி. சி.வசந்தா, திருமதி ஜெ.யோகம்மா, திருமதி லோ.திலகவதி, திருமதி ஜெ.தங்கலதா, திருமதி பி.மதுராந்தகி, செல்வி கா.பவானி, கணக்காய்வாளர் திருமதி பா.யசோதா, காப்பாளர் த.வதனரூபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-3)

## விமலை விடுவிக்கக்கோரி கூட்டு எதிரணி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவை பிணையில் விடுதலை செய்யக்கோரி நாடளாவிய ரீதியில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பேச்சாளருமான ரஞ்சித் டி. சொய்சா தெரிவித்துள்ளார்.

அரச வாகனங்களை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரை பிணையில் விடுதலை செய்யக்கோரியே மேற்படி போராட்டங்கள் இடம்பெறவுள்ளன.

அதனடிப்படையில் இன்று நுவரெலியாவிலும் 15 ஆம் திகதி அநுராதபுரத்திலும் அதனைத்தொடர்ந்து இரத்தினபுரி, நாத்தாண்டியா, குருநாகலை, ஹோமாகம, பிலியந்தலை, கொலன்னாவை ஆகிய இடங்களில் 18 ஆம் திகதி வரை ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறவுள்ளன. மேலும், எதிர்வரும் 19 ஆம் திகதி கதிர்காம ஆலயத்திலும் சீனிகம ஆலயத்திலும் தேங்காய் உடைத்து விசேட வழிபாடுகள் நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மகிந்தவின் பதாகை உடைப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ வின் உருவப்படம் பொறிக் கப்பட்ட பதாகை உடைத்து நீக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரதியமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, வென்னப்புவ பொலிஸாரிடம் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்துள்ளார்.

வடமேல் மற்றும் மேல் மாகாண சபைகளை இணைக்கும் மகா ஓயா ஊடாக அமைக்கப்படும் பாலம் தொடர்பிலான நிகழ்வினை முன்னிட்டு கொச்சிக்கடை பிரதேசத்தில் வைக்கப்பட்ட பதாகையே இவ்வாறு உடைக்கப்பட்டுள்ளது.

எனினும் நேற்று முன்தினம் மாகாண சபை உறுப்பினர இதனை முற்றாக நீக்கி விட்டு, வேறொரு பகுதியில் வைக்க வேண்டிய பதாகையை வைத்துள்ளனர் எனவும் பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும இந்த யோசனையை முன்மொழிந்த ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மற்றும் இதனை நடைமுறைப்படுத்திய மகிநத ராஜபக்ஷவின் உருவப்படமும் அதில் பொறிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சர்ச்சைக்குரிய தனியார் நிறுவனம் அரச நிறுவனத்தை வாங்கத் திட்டம்

(கொழும்பு)

மத்திய வங்கி முறி கொடுக்கல்- வாங்கல் தொடர்பில் சர்ச்சைக்குரிய நிறுவனமொன்று அரச நிறுவனமொன்றை விலைக்கு வாங்க நடவடிக்கை எடுத்து வருவதாக கூட்டு எதிர்க் கட்சி தெரிவித்துள்ளது.

அரசாங்கம் இது தொடர்பில் தொடர்ந்தும் மௌனம் காத்து வருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்ஷா தெரிவித்துள்ளார். (இ-7)

## நீர்த்தேக்கத்தை பார்வையிட அதிகமானோர் திரண்டனர்



(கொழும்பு)

மகாவலி நீர்த்தேக்க செயற்றிட்டத்தின் இறுதி நடவடிக்கையான மொரகஹகந்தை களுகங்கை நீர்த்தேக்க செயற்றிட்டத்தை பார்வையிட நாட்டின் பல பாகங்களிலிருந்தும் அதிகமான மக்கள் வருகை தந்த வண்ணமுள்ளதாகவும், கடந்த இரு தினங்களில் மாத்திரம் சுமார் 2 இலட்சம் பேர் வருகை தந்துள்ளதாகவும் அச்செயற்றிட்டத்தின் பொது மக்கள் இணைப்பு அதிகாரி டீ.எம். தயானந்த தெரிவித்துள்ளார். (இ-7)

## மூவாயிரம் மெற்றிக் தொன் அரிசி விரைவில் இறக்குமதி

(கொழும்பு)

இன்னும் ஓரிரு வாரங்களில் மூவாயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படவுள்ளதாக கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத் தலைவர் ரொஹான் டி அத்துகோரள தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படவுள்ள அரிசி, ச.தொ.ச. வியாபார நிலையங்கள் ஊடாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 563 படையினர் ஒரே நாளில் கைது

## இராணுவப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)


இலங்கை இராணுவத்தை விட்டுத் தப்பியோடிய 563 படையினர் ஒரே நாளில் கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தை விட்டு தப்பிச் சென்றவர்கள் மீண்டும் படைகளில் இணைந்து கொள்வதற்கு அல்லது சட்டரீதியாக படைகளில் இருந்து விலகிக் கொள்வதற்கு, பாதுகாப்பு அமைச்சு கடந்த ஆண்டு இறுதியில் பொதுமன்னிப்புக் காலத்தை அறிவித்திருந்தது.

2016 டிசெம்பர் 31ஆம் திகதியுடன் பொதுமன்னிப்புக் காலம் முடிவடைந்த நிலையில், கடந்த 9ஆம் திகதி இலங்கை இராணுவமும், பொலிஸாரும இணைந்து தப்பியோடிய படையினரைக் கைது செய்யும் பாரிய நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்போதே 563 தப்பியோடிய படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை இராணுவ வரலாற்றில் தப்பியோடிய பெரும் எண்ணிக்கையான படையினர் ஒரே நாளில் கைது செய்யப்பட்டமை இதுவே முதல் முறையாகும்.

அதேவேளை, பொதுமன்னிப்புக்காலம் முடிவடைந்த பின்னர், இதுவரையில் ஒரு அதிகாரி மற்றும் 360 தப்பியோடிய படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் இலங்கை இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (இ-7)



# மேலும் 12 அமைச்சர்கள் ஓ.பி.எஸ்ஸுக்கு ஆதரவு

யார் முதலமைச்சர் என் பதில் சசிகலாவுக்கும், ஓ.பன் னீர்செல்வத்துக்குமிடையே ஏற்பட்ட அதிகார மோதல் உச்சத்தை எட்டியுள்ள நிலை யில் மேலும் 12 அமைச் சர்கள் முதலமைச்சர் பன் னீர்செல்வத்தை ஆதரிக்க இருப்பதாக தகவல் வெளி யாகியுள்ளது.

அ.தி.மு.க. பொதுச்செய லாளர் சசிகலாவை முன்னி ன்று ஆதரித்த அ.தி.மு.க. அமைப்புச் செயலாளர் பொன்னையன், அமைச்சர் மாஃபா பாண்டியராஜன் என அடுத்தடுத்து பன்னீர்செல் வம் முகாமுக்கு பலர் தாவி வருகின்றனர்.


இதுவரை 6 எம்.எல்.ஏ.க் களும், சில எம்.பி.க்களும் ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆத ரவு தெரிவித்துள்ள நிலை யில், இந்த பட்டியலில் மேலும் 12 அமைச்சர்கள் இணை யக்கூடும் என தெரிய வந் துள்ளது. அமைச்சர்கள் ராஜே ந்திர பாலாஜி, ஜெயக்குமார், கே.சி.வீரமணி, நிலோபர் கபில் என 12 அமைச்சர்கள் ஓ.பன்னீர்செல்வத்தை ஆதரி க்கக் கூடும் என தகவல் வெளியாக அதிர்ந்து போயுள் ளது சசிகலா தரப்பு.

இதனையடுத்து சசிகலா வுக்கு நேரடியாக ஆதரவு தெரிவிப்பவர்களின் பட்டி யலில் இடம்பெற்றிருப்பவர் கள் 111 பேர் தான் என கூறப் படுகிறது.

மொத்தமுள்ள 135 உறுப் பினர்களில் 117 பேர் ஆதரவு இருந்தால் தான் ஆட்சிய மைக்க முடியும். ஆரம்பத் தில் 135 உறுப்பினர்களின் ஆதரவையும் பெற்றிருந்த சசிகலாவின் முகாமில் இரு ந்து இதுவரை 7 உறுப்பினர் கள் அணி மாறியுள்ளனர்.

எம்.எல்.ஏ.க்களில் 17 பேர் யாருக்கு ஆதரவு என் பதை முடிவு செய்யாமல் உள்ளனர். தற்போது இருக் கும் 111 பேரில் அமைச்சர்கள் சிலர் அணி மாறும் யோச னையில் இருப்பதால் நெருக் கடியான நிலைக்கு தள்ளப் பட்டுள்ளது சசிகலா தரப்பு.

பெரும்பான்மை பெற்று ஆட்சியமைக்க 117 உறுப் பினர்களின் ஆதரவு தேவை. அ.தி.மு.கவில் மொத்தம் 135 சட்டமன்ற உறுப்பினர் களும், தி.மு.கவில் 89, காங்கிரஸில் 8, முஸ்லிம் லீக்கில் ஒரு சட்டமன்ற உறுப் பினர் என மொத்தம் 233 பேர் உள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது. (இ-12)




# ஜெயாவின் மர்ம மரணம் குறித்து சகாயம் தலைமையில் விசாரணை



(சென்னை)

முன்னாள் தமிழக முத லமைச்சர் ஜெயலலிதாவின் மர்ம மரணம் குறித்து ஐ.ஏ. எஸ். அதிகாரி சகாயம் தலை மையில் விசாரணை ஆணை யகம் அமைக்க வேண்டும் என்று ஓ.பன்னீர்செல்வத்து க்கு, சுங்கத்துறை அதிகாரி கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் முதலமைச் சர் ஜெயலலிதா மர்ம மர ணம் குறித்து உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் விசா ரணை ஆணையகம் அமை கப்படும் என்று முதலமை ச்சர் ஓ.பன்னீர்செல்வம் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் முதல மைச்சர் ஓ.பன்னீர்செல் வத்தை திருவொற்றியூரை சேர்ந்த சுங்கத்துறை உதவி ஆணையாளர் பா.பால முருகன் நேற்று சந்தித்து ஒரு கோரிக்கை மனு கையளி த்துள்ளார். அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

'தமிழக முன்னாள் முத லமைச்சர் ஜெயலலிதாவின் மர்மமான மரணத்தை நேர் மையும், துணிவும், திறமை யும் கொண்ட தமிழக ஐ.ஏ. எஸ். அதிகாரி சகாயம் தலைமையில் ஒரு விசா ரணை ஆணையகம் அமை க்க வேண்டும்.

இதன் மூலம் முழு உண் மையையும் வெளிக்கொண் டுவர வேண்டும் என கடந்த 02.01.2017 அன்று சேலம் மாவட்ட ஆட்சியாளர் மூல மாக தங்களுக்கு மனு ஒன்றை அளித்தேன். அத் தோடு குறித்த மனுவை முத லமைச்சர் தனிப்பிரிவிலும் சமர்ப்பித்தேன்.


இந்நிலையில், ஜெயல லிதா மரணத்தில் பொது மக்கள் மனதில் சந்தேகம் இருக்கிறது. எனவே உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமை யில் விசாரணை ஆணை யகம் அமைக்கப்படும் என நீங்கள் தெரிவித்துள்ளீர்கள்.

உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணை என்பது உங்கள் அதிகார வரம்புக்கு உட்பட்டதல்ல. எனவே ஐ.ஏ.எஸ். அதிகாரி சகாயம் தலைமையில் விசாரணை ஆணையகம் என்பது உங்களுடைய அதி காரத்துக்கு உட்பட்டது.

சகாயம் தலைமையி லான விசாரணை ஆணை யகம் திறமையாகவும், துணி வுடனும் செயற்பட்டு ஜெயல லிதாவின் மரணத்தில் உள்ள முழு உண்மையை யும் வெளிகொண்டுவர உத் தரவிடும்படி கேட்டுக்கொள் கிறேன்.' என்று அவர் தெரி வித்துள்ளார். (இ-12)

# 'ஜெ' வாழ்ந்த போயஸ் கார்டன் நினைவிடமாக மாற வேண்டும்

## பன்னீர்செல்வம் முதல் கையெழுத்து






ஜெயலலிதா வாழ்ந்த இல் லமான போயஸ் தோட்ட த்தை அவரது நினைவிட மாக மாற்ற வேண்டும் என கையெழுத்து இயக்கம் தொட ங்கப்பட்டுள்ளது.

மறைந்த முதல்வர் ஜெய லலிதாவின், போயஸ் கார் டன் இல்லம் ஜெயலலிதா வின் நினைவு இல்லமாக மாற்றப்படும் என்று முதல மைச்சர் ஓ. பன்னீர்செல்வம் ஏற்கனவே அறிவித்திருந் தார்.

இந்நிலையில், இதுதொட ர்பாக கையெழுத்து இயக் கம், க்ரீன்வேஸ் சாலையில் உள்ள, பன்னீர்செல்வத்தின் இல்லத்தில் நேற்று தொடங் கியது.

இந்த கையெழுத்து இயக் கத்தை, பன்னீர்செல்வம் கையெழுத்திட்டு ஆரம்பித்து வைத்தார். இதில் மதுசூத னன், நத்தம் விஸ்வநாதன் மற்றும் அ.தி.மு.க. நிர்வா கிகள் ஆகியோர் கையெ ழுத்திட்டனர்.

இதனைத் தொடர்ந்து சென்னையில் உள்ள ஓ.பி. எஸ். வீட்டின் முன்பு வைக் கப்பட்டுள்ள டிஜிற்றல் போர் டுகளிலும் தொண்டர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினர் கையெழுத்திட்டு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இதேபோல திருச்சி, தூத் துக்குடி உள்ளிட்ட தமிழகத் தில் உள்ள பல்வேறு மாவட் டங்களில் பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் சார்பில் கையெழுத்து இயக்கத்தை தொடங்கியுள்ளனர். (இ-12)

# ஓ.பி.எஸ்ஸுக்கு பாலா ஆதரவு



(சென்னை)

பிரபல திரைப்பட இயக் குநர் பாலா முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தை நேரில சந்தித்து ஆதரவு தெரிவித் துள்ளார்.

தமிழகத்தில் அ.தி.மு.க. தலைமையில் நடைபெற்று வரும் ஆட்சியில், தற்போது முதல்வராகப் பொறுப்பேற்கப் போவது யார் என்ற மிகப் பெரிய கேள்வி எழுந்துள் ளது. பொதுச்செயலாளர் சசி கலா மற்றும் ஓ.பன்னீர் செல்வம் இருவருக்கும் இடையே கடுமையான பனிப் போர் ஏற்பட்டுள்ளது. எம்.எல். ஏக்களின் ஆதரவு யாருக்கு என்ற மிகப் பெரிய கேள்வி எழுந்துள்ளது.

இதனால் இருவரும் யாரு க்கு பெரும்பான்மை இருக் கிறது என்பதை காட்டுவ தில் தீவிரம் காட்டி வருகின் றனர்.

இதில் திரைப் பிரபல ங்கள் பலரும் தற்போது நில வும் அரசியல் சூழல் குறி த்து தாங்கள் கருத்துக்க ளைத் தெரிவித்து வருகின் றனர்.

இதைத் தொடர்ந்து பிர பல திரைப்பட இயக்குநர் பாலா முதலமைச்சர் ஓ.பன் னீர் செல்வத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். சென்னை கிரீன்வேஸ் சாலையிலுள்ள முதலமைச்சர் பன்னீர்செல் வம் இல்லத்திற்கு நேரில் சென்று தனது ஆதரவை தெரிவித்துள்ளார். (இ-12)

# தீவிரவாதிகள் சுட்டுக்கொலை



(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் ஊடுருவிய 2 தீவிரவாதிகள் சுட்டுக் கொல லப்பட்டனர்.

காஷ்மீர் மாநிலத்தில் இந்திய எல்லை வழியாக பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவலில் ஈடுபடுவதை எல்லைப்பாதுகாப்பு படை யினர் முறியடித்து வருகின்ற னர்.

இந்த நிலையில் நேற்று அதிகாலை காஷ்மீரின் பாரி போரா பகுதியில் தீவிரவா திகள் இந்தியாவுக்குள் ஊடு ருவலில் ஈடுபட்டனர்.

இதை எல்லை பாதுகா ப்புப் படையினர் கண்கா ணித்து தீவிரவாதிகளை முற்றுகையிட்டனர். கூடுத லாக அந்தப் பகுதிக்குப் பாது காப்புப் படையினரும் விரை ந்தனர்.

எல்லையில் பதுங்கி இரு ந்த தீவிரவாதிகள் பாதுகா ப்புப் படையினரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். பாதுகாப்பு படையினரும் திருப்பி கடுமையான எதிர் தாக்குதலில் ஈடுபட்டனர்.

நீண்ட நேரம் நடந்த துப் பாக்கி சண்டையில் 2 தீவிர வாதிகள் சுட்டுக் கொல்லப் பட்டனர். மற்றவர்கள் பின் வாங்கி தப்பிச் சென்று விட்டனர். (இ-12)

# கலவர பூமியானது பாரிஸ்







பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் பொலிஸாருக்கு எதிராக நடத்தப்பட்ட அமைதிப் பேரணி கலவரமாக மாறியதை அடுத்து வன்முறையாளர்களை அடக்கும் முயற்சியில் பொலிஸார் களமிறங்கியுள்ளனர்.

பாரிஸில் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக அமைதிப் பேரணி நடந்தது. இதில் கலந்து கொண்ட ஒரு சிலர் திடீரென்று வன்முறையில் இறங்கி வாகனங்களை எரிக்கும் செயலில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் Bobigny பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது. கலவரக்காரர்களை அடக்கும் பொருட்டு பொலிஸார் கண்ணீர் குண்டுகளை வீசியுள்ளனர்.

இதனால் குறித்த பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை Aulnay-sous-Bois பகுதியில் உள்ள 3000 estate அருகே 22 வயதான Theo Temoigne என்ற இளைஞனை 4 பொலிஸார் சித்திரவதை செய்துள்ளனர்.

இதனால் குறித்த நபர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பொலிஸ் தரப்பில் இது எதிர்பாராத வகையில் நடந்த சம்பவம் என கூறப்பட்ட போதும், பாதிக்கப்பட்ட நபர் தனியார் செய்தி ஊடகத்தில் தமக்கு நேர்ந்த பாதிப்பை வெளிப்படையாக தெரிவித்துள்ளதால், பாரிஸின் பல பகுதிகளில் பொதுமக்கள் கலவரத்தில் குதித்துள்ளனர்.

பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொலிஸே பொதுமக்களை சீரழிப்பது எந்தவகையில் நியாயம் என கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பாக கலவரத்தில் ஈடுபட்ட 17 நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்கள் பாடசாலையை எரித்ததாக குற்றம் சாட்டியுள்ளனர்.

Nantes பகுதியில் 400 பேர் கலந்து கொண்ட பேரணியில் அத்துமீறிய பொலிஸார் 20 பேரை கைது செய்துள்ளனர்.

இதனிடையே பொலிஸார் விசாரணை நடத்தும் பொருட்டு பொதுமக்கள் அமைதி காக்க வேண்டும் என பாதிப்புக்குள்ளான Temoigne கோரிக்கை வைத்துள்ளார்.

இதை பிரான்ஸ் ஜனாதிபதி வரவேற்று தமது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (இ-12)




# முஸ்லிம்களை தடை செய்ய விரைவில் புதிய உத்தரவு

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் திட்டம்

(வோஷிங்டன்)

சிரியா உள்ளிட்ட 7 நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம் பயணிகள் அமெரிக்காவில் நுழையத் தடை விதிக்க வகை செய்யும் புதிய ஆணையை பிறப்பிக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார்.

சிரியா, ஈரான், ஈராக், லிபியா, ஏமன், சோமாலியா, சூடான் ஆகிய 7 முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த அகதிகள், பயணிகள் அமெரிக்காவில் நுழைய தடை விதிக்கும் ஆணையை ஜனாதிபதி ட்ரம்ப் அண்மையில் பிறப்பித்தார்.

இந்த தடையை சியாட்டிலில் உள்ள நீதிமன்றம் நீக்கியது. இதை எதிர்த்து அரசு தரப்பில் மேல் முறையீடு செய்யப்பட்டது.

இதனை விசாரித்த 3 நீதிபதிகள் அடங்கிய அமர்வு அரசின் மனுவை தள்ளுபடி செய்தது. இந்த தீர்ப்பை எதிர்த்து அரசு தரப்பில் மீண்டும் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இதனை 11 நீதிபதிகள் அடங்கிய அமர்வு விசாரிக்கவுள்ளது.

இந்நிலையில் குறிப்பிட்ட 7 நாடுகளைச் சேர்ந்த அகதிகள் மற்றும் பயணிகளுக்கு தடை விதிக்க வகை செய்யும் புதிய ஆணையை பிறப்பிக்க ஜனாதிபதி ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார். இதுதொடர்பாக அவர் நிருபர்களிடம் கூறிய போது, நீதிமன்ற சட்டத்தரணி அரசு நிச்சயம் வெற்றி பெறும் என்று நம்புகிறேன்.

அதை தவிர வேறு சில வழிகளும் உள்ளன. புதிதாக ஓர் தடையாணையை பிறப்பிக்கலாம். சட்டத்தில் திருத்தம் செய்யலாம் என்று அவர் தெரிவித்தார்.

இன்று அல்லது நாளை செவ்வாய்க்கிழமை புதிய ஆணை வெளியிடப்படலாம் என்று வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



ஜனாதிபதி ட்ரம்ப் அகதிகளை ஏற்க மறுப்பதால் கனடாவில் தஞ்சம் கோரும் அகதிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. உள்நாட்டுப் போரில் இருந்து தப்பிச் செல்வோர் கனடாவில் பெருமளவில் குவிந்து வருகின்றனர்.

'சுமார் 40 ஆயிரம் அகதிகளை ஏற்றுக் கொள்வோம், அகதிகளின் நலனுக்காக புதிய திட்டம் விரைவில் அறிமுகம் செய்யப்படும்' என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உறுதி அளித்துள்ளார். (இ-12)

# சட்டரீதியான சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வோம்

## ட்ரம்ப் அறிவிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் விதிக்கப்பட்ட பயணத் தடைக்கு எழுந்துள்ள சட்டரீதியான சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளப் போவதாக ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த அவர், ஏற்கனவே விதிக்கப்பட்ட பயணத் தடை நீதிமன்றத்தின் செல்வாக்கால் முடக்கப்பட்டுள்ளமையால் மீண்டும் ஒரு புதிய தடை ஒன்றை விதிப்பது குறித்து அக்கறை செலுத்தப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் புளோரிடாவில் இருந்து ஊடகவியலாளர் ஒருவருக்கு கருத்து தெரிவித்த அவர்,

"நாம் நிச்சயமாக இந்த வழக்கில் வெற்றி பெறுவோம். அது உறுதி.


அதற்கு சிறிது காலம் செல்லும். அது எமது துரதிர்ஷ்டம்.

ஆனால் நாம் நிச்சயம் வெற்றி காண்போம்.

வேறொரு புதிய தடையை உருவாக்குவது தொடர்பிலும் அக்கறை செலுத்தப்பட்டு வருகின்றது" என தெரிவித்துள்ளார்.

சியேட்டல் நீதிபதியால் ட்ரம்பின் பயணத் தடைக்கு இடைக்கால உத்தரவு விதிக்கப்படும் வரை, அகதிகள் மற்றும் ஏழு முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த மக்கள் அமெரிக்காவுக்கு வருவது தடுக்கப்பட்டிருந்தது.

குறித்த தடைக்கு எதிர்ப்பு தெரிவித்து, உலகளாவிய ரீதியில் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன் பல உலகத் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-12)



நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அணிவகுப்பு நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ.ஏ.ஏ.ரஞ்சித் மாசிங்க அழைத்து வரப்படுவதையும் பொலிஸ் வாகனங்களைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம் (படங்கள்:மகாலிங்கம்)

# இந்து மற்றும் முஸ்லிம் மக்களின் மதரீதியிலான விசேட தினங்களில் மதுபானசாலைகளை மூடவும் டக்ளஸ் எம். பி. வலியுறுத்து



(கொழும்பு)

இந்து மற்றும் இஸ்லாமிய மக்களது மத ரீதியிலான முக்கியத்துவமிக்க நாட்களில் நாடளாவிய ரீதியில் மதுபானசாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் குறித்த கோரிக்கையினை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்துள்ளார்.

இவ் விடயம் குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் 12 பௌர்ணமி தினங்களிலும், வெசாக் பௌர்ணமி தினத்துக்கு மறு தினமும் என 13 நாட்களிலும், தேசிய சுதந்திர தினம், உலக மது ஒழிப்புத் தினம், தமிழ், சிங்களப் புத்தாண்டு தினத்திற்கு முந்தைய தினம், தமிழ், சிங்களப் புத்தாண்டு தினம், ஈதுல் பித்ர், றம்ழான் பெருநாள் தினம், நத்தார் தினம் ஆகிய 6 நாட்கள் உட்பட வருடத்தில் 19 நாட்கள் மதுபான நிலையங்கள் மூடப்படுகின்றன.

அதேநேரம், இந்து மக்களின் மத ரீதியிலான முக்கியத்துவமிக்க தினங்களாகிய மகா சிவராத்திரி தினத்திலும், தைப்பொங்கல், தீபாவளி போன்ற திருநாட்களிலும், சகோதர முஸ்லிம் மக்களால் மிகவும் புனிதமான தினமாகக் கொண்டாடப்படுகின்ற முஹம்மது நபி அவர்களாரது பிறந்த தினமான மீலாதுன் நபி தினத்திலும், ஈதுல் அல்ஹா, ஹஜ்ஜுப் பெருநாள் தினத்திலும் மேற்படி மதுபானசாலைகள் மூடப்படுவதில்லை.

எனவே, இவ்விடயம் தொடர்பில் கூடிய அவதானத்தைச் செலுத்தி, இந்து மற்றும் இஸ்லாமிய மதங்களை மேலும் கௌரவிக்கும் வகையிலும், அந்த மக்களின் உணர்வுகளை மதிக்கின்ற வகையிலும், அதே நேரம் எமது நாட்டில் மது பாவனையை மேலும் ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்துகின்ற நோக்கில் இதனை செயற்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேற்படி 5 நாட்களிலும் மதுபானசாலைகளை நாடளாவிய ரீதியில் மூடுவதற்கு கொள்கை ரீதியில் தீர்மானமெடுத்து, அதனை செயற்படுத்த நடவடிக்கை எடுத்து உதவுமாறு டக்ளஸ் தேவானந்தா பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

## மோ. சைக்கிள் விபத்தில் சகோதரர்களுக்கு காயம்

(யாழ்ப்பாணம் )

கிளிநொச்சி ஜெயந்தி நகர்ப் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயங்களுக்குள்ளான நிலையில் சகோதரர்கள் இருவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை ஜெயந்தி நகர் சேவியர் கடைச் சந்தி வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஜெயந்தி நகரைச் சேர்ந்த கி.விஜயராசன் வயது -41, கொடிகாமத்தைச் சேர்ந்த கி.கிருஷ்ணராஜ் வயது -28 ஆகிய இருவரும் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-89)

### பால்நிலை நோயை கட்டுப்படுத்தும் திட்டம்

வெளிநாட்டு தொழிலுக்காக பயிற்சிபெறுவோருக்கு எயிட்ஸ் மற்றும் பால்வினை நோய்களை கட்டுப்படுத்தும் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

எயிட்ஸ் மற்றும் பால்வினை நோய்களை கட்டுப்படுத்தும் தேசிய திட்டத்துடன் இணைந்து, வெளிநாட்டு தொழில்களுக்காக பயிற்சி பெறுவோரை இலக்காகக்கொண்டு விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

## எல்லை நிர்ணய அறிக்கையை வர்த்தமானியில் வெளியிடாதீர்

### அமைச்சர் மனோ வலியுறுத்து



(கொழும்பு)

எல்லை நிர்ணய அறிக்கையை வர்த்தமானியில் வெளியிட வேண்டாம் என, தமிழ்க் கட்சி பிரதிநிதிகள் கோரியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த விடயம் குறித்து, அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின் போது அமைச்சர் மனோ கணேசன் முன் வைத்துள்ளார். (இ-7)

## ஆட்டோ சேவை தொடர்பில் ஒழுங்குமுறை அறிக்கை

(கொழும்பு)

ஆட்டோ விதி முறைகள் தொடர்பிலான இலங்கை தர நிர்ணய பணியக வரையறை பற்றிய அறிக்கையை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள், பெற்றுக் கொடுக்க உள்ளதாக, வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தெரிவித்துள்ளது.

மேலும், ஆட்டோக்களில் பொருத்தப்படும் மீற்றர் எந்த அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும் என, இதன் பின்னர் தீர்மானிக்கப்படவுள்ளதாகவும், அதன் தலைவர் சிசிர கோதாகொட தெரிவித்தார்.

மக்களுக்கு மிகச் சிறந்த தரமான ஆட்டோ சேவைகளை வழங்குவதை நோக்காகக் கொண்டே இந்த வேலைத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## பொலிஸ் அதிகாரி கைது

(கொழும்பு)

வெல்லவாய, திஸ்ஸ வீதியிலுள்ள, சீனிகம் பாலத்தை யின் வாகனமொன்றில் சென்று கொண்டிருந்த நபர் ஒருவரை தாக்கினார் என்ற சந்தேகத்தின் பேரில் மொனராகலை பொலிஸ் பிரிவின் ஊழல் தடுப்பு அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தன்னுடைய மோட்டார் சைக்கிளுக்கு பாதையில் இடம் தராமல் சென்றதாக தெரிவித்தே குறித்த பொலிஸ் அதிகாரி தாக்குதல் நடத்தியதாக வாகனத்தில் சென்ற நபர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

தாக்குதலுக்குள்ளான நபர் வெல்லவாய அரச ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## அரிசியில் மோசடியா? 1977 இற்கு அழைக்கவும்

அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், அரிசி விற்பனையில் மோசடியில் ஈடுபடுபவர்களைப் பற்றிய தகவல்களை 1977 எனும் அவசர தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறியத் தருமாறு பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதாரன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த இலக்கத்தினூடாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையைத் தொடர்பு கொண்டு அறிவிப்புச் செய்யுமாறும் சம்பந்தப்பட்ட வியாபாரிகளை சட்டத்தின் முன் கொண்டு வர நடவடிக்கை எடுக்குமாறும் பிரதி அமைச்சர் மேலும் கேட்டுள்ளார். (இ-7)

## சைற்றம் கல்லூரி குறித்து மருத்துவ சபை பிடிவாதம்

(கொழும்பு)

சைற்றம் பிரச்சினைகள் தொடர்பில் மருத்துவ சபை பிடிவாதமான முறையில் செயற்படுவதாக உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல குற்றம் சாட்டியுள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


இலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக பல்வேறு எதிர்ப்புக்கள் மேலெழுந்து வருகின்றன.

பல்கலைக்கழக மாணவர்கள், பிக்குகள் என அனைத்து தரப்பிடமிருந்தும், எதிர்ப்புகள் அதிகரித்திருக்கும் நிலையில், கூட்டு எதிர்க்கட்சியினரும் இதற்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

இந்நிலையில், சைற்றம் பிரச்சினைகள் தொடர்பில் மருத்துவ சபை பிடிவாதமான முறையில் செயற்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அதிகாரங்கள் பறிப்பு; முதல்வர்கள் எதிர்ப்பு





(கொழும்பு)

மாகாணசபைகளிடமுள்ள சில அதிகாரங்களைப் பறித்து, நகர அபிவிருத்தி அதிகாரசபையைப் பலப்படுத்த இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைக்கு, மாகாணசபைகள் போர்க் கொடி உயர்த்தியுள்ளன.

இந்த நடவடிக்கை 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிரானது என்று மேல்மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளின் அதிகாரங்களை நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் பறிக்கப்படுவதை தடுக்க மாகாண சபைகளில் சட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்றும், ஏனைய முயற்சிகள் தோல்வியடைந்தால் நீதிமன்றத்தை நாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கட்டடங்களுக்கான திட்டங்கள் மற்றும் தொழிற்றுறைகளுக்கு அனுமதி அளித்தல், எரிபொருள் நிலையங்கள், மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்களை கட்டுதல் என்பனவற்றுக்கு அனுமதி அளிக்கும் அதிகாரத்தை பெப்ரவரி முதலாம் திகதி இலங்கை அரசாங்கம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அளித்துள்ளது.


இந்த அனுமதிகளைவழங்கும் கடமை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளிடமே இருந்து வந்தது.

13ஆவது திருத்தச்சட்டத்தின் விளைவாக, மாகாண சபைகள் சட்டத்தின் கீழ், இந்த அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதனை தன்னிசையாக மாற்ற முடியாது. இதற்குப் பதிலடியாக, குப்பைகளை அகற்றுதல், நீர் விநியோகம் போன்ற ஏனைய பொது வசதிகளில் இருந்து ஒதுங்க நேரிடும் என்று மேல் மாகாண முதலமைச்சர் எச்சரித்துள்ளார்.

அதேவேளை, மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பறிக்கும் இந்த செயற்பாட்டை தடுப்பதற்கான சட்டங்களை அறிமுகப்படுத்த, எமது அதிகாரங்களை பயன்படுத்துவோம் என்று தென் மாகாண முதலமைச்சர் ஷான் விஜேலால் தெரிவித்துள்ளார்.

இந்த அதிகாரங்களை மாகாணசபைகள் 30 ஆண்டுகளாக அனுபவித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கை அதிகாரப் பகிர்வு கொள்கைக்கு எதிரானது என்று மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.





இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும அண்மையில் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையின் படைகள் மீது அவநம்பிக்கை

## சி.ஐ.ஏ. இரகசிய ஆவணத்தில் குறிப்பு

இலங்கைப் படைகள் மீது தமக்கு பெரியளவில் நம்பிக்கை இல்லை என்று இலங்கையின் முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெல், அமெரிக்க அதிகாரிகளிடம் தெரிவித்ததாக, அமெரிக்காவின் மத்திய புலனாய்வுப் பிரிவின் (சி.ஐ.ஏ.) இரகசிய ஆவணம் ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

1980களில், சி.ஐ.ஏயினால் தயாரிக்கப்பட்ட பல இரகசிய ஆவணங்கள் வெளியிட அனுமதிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து. இலங்கை தொடர்பாக சி.ஐ.ஏ. தயாரித்த பல இரகசிய ஆவணங்கள் தற்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன.

1986 செப்டெம்பரில் இலங்கை தொடர்பாக சி.ஐ.ஏ. தயாரித்த இரகசிய அறிக்கையில், அப்போது ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசாங்கத்தில் நிதியமைச்சராக இருந்த ரொனி டி மெல் அமெரிக்க அதிகாரிகளிடம் தனிப்பட்ட முறையில் வெளியிட்ட கருத்து இடம்பெற்றிருக்கிறது.

“அமைச்சரவையில் மிகவும் காத்திரமான உறுப்பினர்களில் ஒருவரும், நிதி சார் முடிவுகளை எடுக்கும் முக்கியமான பங்கை வகிப்பவரும், ஆனால் அரசியல் மற்றும் இராணுவ முடிவுகளில் கனதியாகத் தொடர்புபடாதவருமான 61 வயதான ரொனி டி மெல், அமெரிக்க அதிகாரிகளிடம் தனிப்பட்ட முறையில் பேசும் போது, தாம் இலங்கை ஆயுதப்படைகளிடம் சிறிதளவு நம்பிக்கை மாத்திரமே கொண்டிருப்பதாக தெரிவித்தார் என்று அமெரிக்க தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொதுவாகவே, அமெரிக்காவை விமர்சிக்காமல் இருப்பதில் கவனமாக இருக்கும் ரொனி டி மெல் , தனது நாட்டுக்கு அருகில் இருக்கும் இந்தியா, ஏனைய சக்திகள் இலங்கைக்கு உதவுவதை விரும்பவில்லை என்று கூறியிருந்தார்” என்றும் சி.ஐ.ஏ. அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தியா தனது படைகளை துரிதமாக விரிவாக்கிக் கொண்டிருப்பதாகவும், இலங்கையில் தலையீடு செய்வதற்கு அவற்றைப் பயன்படுத்தக் கூடும் என்றும் அந்த ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது.

தனது கடல் எல்லைகளை பாதுகாப்பதற்கே படைகளைப் பலப்படுத்துவதாக டில்லி கூறியிருந்தாலும், இலங்கையில் அரசாங்கம் வீழ்ச்சியடைந்தாலோ, அல்லது கிளர்ச்சியாளர்கள் சுதந்திர தமிழ்த் தேசம் ஒனறை உருவாக்கினாலோ, தனது படைகளை இலங்கைக்கு அனுப்பும் என்று நாம் நம்புகிறோம்” என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### வேண்டாதவர்களுக்கு வேண்டியவர்களும் வேண்டாதவர்களா?

ஒரு தடவை ஒரு நண்பரைப் பார்க்க அவர் வீட்டிற்குப்போனேன். நண்பர் வீட்டைக் காலி செய்து கொண்டு போய்விட்டிருந்தார் என்பதை அறிந்தேன். எனவே வீட்டுக்காரரைக் கேட்போம் எனக் கதவை தட்டினேன். கதவை திறந்த வீட்டுக்காரர் என் நோக்கத்தைப் புரிந்து கொண்டதும் ஏகமாய்க் கத்த ஆரம்பித்தார்.

அந்த ஆளு விலாசமெல்லாம் ஏன் எங்கிட்ட வந்து கேக்குறீங்க? எவனுக்குத் தெரியும் அந்தாளு விலாசம்? அவனைத் தேடி எவனும் என் வீட்டிற்குள்ள வரக்கூடாது. ஆமா? கதவை முகத்திலறைந்தாற் போல் சாத்தினார்.

அவருக்கு என் நண்பருக்கும் வீட்டைக் காலி செய்வதில் ஏதோ தகராறு போலும்! அதற்காக என் மீது கோபப்பட்டது எந்த வகையில் நியாயம்? அது எவ்வளவு அநாகரிகமான செயல்!

இது கூட ஒருவகையில் பரவாயில்லை. தன் கோபத்திற்கு ஆளாகிவிட்ட மகனுக்காக அவனைத் தேடி வருகிற நண்பர்களைத் திட்டுகிற தந்தைகளும், தன் வருத்தத்தைச் சம்பாதித்துக் கொண்ட கணவனுக்காக அவனது உறவினர்களை அவமானப்படுத்துகிற மனைவிகளும் கடுஞ்சொல் சொல்கிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். மனிதத் தன்மைக்கே களக்கம் கற்பிக்கிற செயலல்லவா இது?

ஒரு பாவமும் அறியாதவர்களை, தனக்கு வேண்டாதவர்களுக்கு மிகவும் வேண்டியவர்கள் என்ற ஒரே கரணத்திற்காகப் புண்படுத்தி அனுப்புவது என்ன நீதி?


இரு சகோதரர்களுக்குள் சண்டை என்றால், மூத்தவர், தன் தம்பியின் மனைவி, மக்கள், சகோதரரின் மாமனார் குடும்பம், தம்பியின் நண்பர்கள் என்று ஒரே நேரத்தில் முப்பது நாற்பது பேரை ஏன் அதற்கு மேற்பட்டவர்களைக் கூட விரோதித்துக் கொள்கிறார். இது பெருந்தவறு.

விரோதம் சகோதரரோடு இருக்கலாம். அதற்காக அவருக்கு வேண்டிய அத்தனை பேரையும் வேண்டாதவர்களாக ஆக்கிக் கொள்வது புத்திசாலித்தனமாகாது. தனிப்பட்ட கருத்து வேறுபாடுகளைப் பெரிதாக்கிப் பெருங்கூட்டத்தை விரோதித்துக் கொள்வது அறவீனம்.

மாறாக, மற்றவர்களோடு எப்போதும் போல் இருந்து, தன்பக்க நியாயத்தை எடுத்துச் சொல்லி, தன்னுடைய மனிதாபிமானத்தை எப்போதும் போல் வெளிப்படுத்தி , எதிரிக்கு வேண்டிய எல்லாரையும் வசப்படுத்தி, அவர்கள் அனைவரையும் நம் சார்பாகப் பேசும்படிச் செய்து, நமக்கு வேண்டாதவர்களை இந்த வகையில் தனிமைப்படுத்தி விடுவது தான் புத்திசாலித்தனம்.

**லேனா தமிழ்வாணன்**

# மீண்டும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையில் வடகொரியா



(பியாங் யாங்)

தடையை மீறி மீண்டும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வட கொரியா சோதனை செய்துள்ளது.


கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வட கொரியா மீண்டும் சோதனை செய்ததாக சியோல் பாதுகாப்பு அமைச்சகம் தகவல் தெரிவித்துள்ளது.

பல நாடுகளின் எதிர்ப்புகளை மீறி வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை, அணு ஆயுத சோதனை உள்ளிட்டவற்றை நடத்தி வருவது தொடர்ந்து வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு வட கொரியா சோதனை செய்யும் முதல் ஏவுகணை இது என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு பியாங் யாங் பிராந்தியத்தில் இருந்து இந்த ஏவுகணையை நேற்றுக் காலை 7:55 மணிக்கு பங்க் யான் ஏவு தளத்தில் இருந்து ஜப்பானின் கடல் எல்லையில் விழும் படி வடகொரியா சோதனை செய்துள்ளது. (இ-12)

# பேருந்து- வான் விபத்து 20 பேர் உயிரிழப்பு!



பங்களாதேஷத்தில் பேருந்தும் வானும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில் 20 பேர் பலியாகினர். 20 பேர் காயமடைந்தனர்.

பங்களாதேஷத்தில் பரித்பூர் மாவட்ட நெடுஞ்சாலையில் ஒரு பேருந்தும், வானும் சென்று கொண்டிருந்தது. நேற்று முன்தினம் டாக்கா-குல்னா நகரம் இடையே சென்று கொண்டிருந்த போது அவை இரண்டும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன.

அதில் வானில் இருந்த காஸ் சிலிண்டர்கள் வெடித்து சிதறின.

இதனால் வானும், பேருந்தும் தீப்பிடித்து எரிந்தன. அதில் 13 பேர் உடல் கருகி பரிதாபகமாக உயிரிழந்தனர். 20 பேர் படுகாயம் அடைந்தனர்.

அவர்களில் பெரும்பாலானோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. எனவே பலி எண்ணிக்கை உயரும் அபாயம் உள்ளது. (இ-12)




# இரகசிய புலனாய்வு நடவடிக்கை மூலம் ஐ.எஸ்ஸுடன் தொடர்புடைய குழு கைது

(சிரியா)

ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன் தொடர்பை பேணிய குழுவை பிரித்தானிய இரகசிய பொலிஸார் ஒருவர் மேற்கொண்ட புலனாய்வு நடவடிக்கைகளின் பின்னர் வெற்றிகரமாக கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விவகாரம் நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த போது, இந்த குழுவுக்கு தலைமை தாங்கியவராக கருதப்படும் 37 வயதுடைய மொஹமட் அலம்கிர் (Mohammed Alamgir) என்பவருக்கு ஆறு வருட சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அலம்கிர் மற்றும் குறித்த குழுவில் உள்ள மேலும் நால்வர் லூட்டன் (Luton) எனும் பகுதியில் மேற்கொண்ட உரையாடல்கள் கமால் எனும் பொலிஸ் அதிகாரியால் இரகசியமாக பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவை கைது செய்வதற்கு ஏதுவாகவிருந்த இரகசிய பொலிஸாரை நீதிபதி பாராட்டியுள்ளார். (இ-12)

# அகதிகள் தடுத்து நிறுத்தம்

(சோமாலியா)

சோமாலிய நாட்டை சேர்ந்த அகதிகள் சிலர் கனடாவிற்குள் நுழைய முயன்ற போது அமெரிக்க எல்லை அதிகாரிகளிடம் அகப்பட்டு கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரு ஆண்கள் மற்றும் ஒரு பெண் மூவரும் மனிரோபா எமசென் பகுதிக்கு அருகாமையில் வயல் வெளி ஒன்றின் ஊடாக கனடாவிற்குள் நுழைய முயன்ற சமயம் இச்சம்பவம் நடந்துள்ளது.

இச்சம்பவத்திற்கு இரண்டு நாட்களிற்கு முன்னர் இதே வழியால் 22 அகதிகள் நடந்து வந்து மனிரோ பாவை அடைந்துள்ளனர்.

அதில் ஒரு நபரை அவசர சேவை பிரிவினர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நடந்த போது மிக கடுமையான குளிராக இருந்ததாக எல்லை பாதுகாப்பு மக்கள் தொடர்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர் எல்லையை கடக்க முயன்ற போது இவருடன் சேர்ந்த மற்றவர்கள் உள்ளூர் எரிவாயு நிலையம் ஒன்றிற்குள் காத்திருந்துள்ளனர்.

எல்லையை கடக்கும் வரை இவர்கள் பொறுத்திருந்ததாக கூறப்படுகின்றது. பிடிபட்டவர் நடுங்கியவாறு காணப்பட்டார். வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டது.

இவர்கள்மினியாபொலிசை சேர்ந்தவர்கள். கனடாவிற்குள் செல்லும் நோக்கத்துடன் புறப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

இவர்களை சிறையில் அடைக்க வேண்டாம் என இவர்களை காப்பாற்றியவர் ஷெரீப்பிடம் கேட்டுக் கொண்டதாக கூறப்பட்டது.

நூற்றுக்கணக்கான அகதி கோரிக்கையாளர்கள் இமெர்சன் எல்லைக்கு ஊடாக வயல் வெளிகளில் நடந்து கனடாவிற்குள் வந்ததாக ஜனவரி மாதம் முதல் அறிக்கை விட்டிருந்ததாக அறியப்படுகின்றது.

இவர்களில் கானாவை சேர்ந்த இரு அகதிகள் தோலுறைவு நோயினால் பாதிக்கப்பட்டு வினிபெக்கில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இப்பிரச்சினை பொது மக்கள் கவனத்தை ஈர்த்துள்ளது. (இ-12)

# ஆற்றில் படகு மூழ்கி ஐந்து பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ஆற்றில் படகு மூழ்கி 5பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானில் சிந்து மாகாணத்தில் லர்கானா என்ற இடத்தில் பீர் முக்பான் ஷா என்ற புனித தலம் உள்ளது.

அங்கு வழிபாடு நடத்த சிந்து ஆற்றில் நேற்று முன்தினம் இரவு படகு மூலம் 30 பேர் பயணம் செய்தனர். அந்த படகு நடு ஆற்றில் சென்ற போது மூழ்கியது.

தகவல் அறிந்ததும் மீட்பு படையினர் அங்கு விரைந்தனர். அதற்குள் 5 பேர் தண்ணீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

மீட்பு படையினர் 20 பேரை மட்டுமே மீட்டனர். மீதமுள்ள 5 பேரை காணவில்லை. அவர்கள் கதி என்ன ஆனது என தெரியவில்லை.

அளவுக்கு அதிகமாக ஆட்கள் ஏற்றியதே படகு மூழ்க காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-12)

# பிலிப்பைன்ஸில் பாரிய நிலநடுக்கம் 6பேர் உயிரிழப்பு! 80பேர் படுகாயம்


(மணிலா)

பிலிப்பைன்ஸ நாட்டில் மின்டானயோ தீவில் உள்ள சுரிகாயோ டெல் நோர்டே மாகாணத்தில் நேற்று முன்தினம் இரவு கடும் நில நடுக்கம் ஏற்பட்டது.

இதனால் மாகாண தலைநகர் சுரிகாயோ மற்றும் அதைச் சுற்றியுள்ள வீடுகள் குலுங்கின.

மக்கள் கடும் குளிரிலும் பாதுகாப்பான இடங்களை தேடிச் சென்று தஞ்சம் அடைந்தனர்.

வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்தன. ஏராளமான வீடுகளில் பெரிய அளவில் விரிசல்கள் ஏற்பட்டன. தகவல் அறிந்ததும் பேரிடர் மீட்பு படையினர் அங்கு விரைந்தனர். இடிபாடுகள் அகற்றப்பட்டன.



இந்த நிலநடுக்கத்தில் இடிபாடுகளில் சிக்கி 6 பேர் பலியாகினர். 80 பேர் காயம் அடைந்தனர்.

நிலநடுக்கம் காரணமாக பல கட்டடங்கள் இடிந்தன. சுரிகாயோ நகரில் இருந்த பாலம் இடிந்து தரை மட்டமானது.

இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மின்சாரமும் துண்டிக்கப்பட்டது.

அதனால் அப்பகுதி முழுவதும் இருளில் மூழ்கியது.

சுரிகாயோவில் உள்ள விமான நிலைய ஓடு தளத்தில் கீறல்கள் ஏற்பட்டன.

அதனால் அந்த விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது. லிபாடா துறைமுகமும் மூடப்பட்டது.

இதற்கிடையே 6.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவானதாக அறிவிக்கப்பட்டது.

சுரிகாயோவில் பூமிக்கு அடியில் 6.8 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் உருவானது. (இ-12)

# தென் சீன கடற்பரப்பில் மீண்டும் பதற்றநிலை

(பீஜிங்)

தென்சீனக் கடற்பரப்பிற்கு மேலே அமெரிக்க இராணுவ விமானத்தை, சீன விமானம் பின் தொடர்ந்துள்ள சம்பவம், அமெரிக்காவின் அடக்கு முறைக்கு ஒருபோதும் தாம் அடிபணிய போவது இல்லை என்பதை மீண்டும் ஒரு முறை உணர்த்தியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் டொனால்ட் ட்ரம்ப், முதல் முறையாக சீன ஜனாதிபதி ஜின் பிங்குடன் அண்மையில், தொலைபேசியில் உரையாடி 'ஒரே சீனா' கொள்கைக்கு மதிப்பளித்து அதனை பின்பற்ற சம்மதம் தெரிவித்துள்ளதன் பின்னணியில் இச்சம்பவம் அரங்கேறியுள்ளது.

தென் சீன கடற்பரப்பிற்கு மேலே தன்னுடைய இராணுவ விமானம் பறந்த போது, சீன கண்காணிப்பு விமானம் 300 மீற்றர் தூரம் பின்தொடர்ந்து வந்ததாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

'ஸ்கார்போரஃப் ஷோல்' என்று அழைக்கப்படும் சர்ச்சைக்குரிய பவளப்பாறை தீவு அருகில் நிகழ்ந்த இந்த சம்பவம் பாதுகாப்பற்ற ஒன்றாக இருந்ததாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

ஆனால் இதற்கு விளக்கமளித்துள்ள சீன பாதுகாப்பு அமைச்சகம், தாங்களுடைய விமானி பொறுப்புணர்வுடன், சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே செயற்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளது. இந் நிலையில், இருநாடுகளுக்குமிடையில் மீண்டும் விரிசல் நிலைமை தோன்றியுள்ளது. (இ-12)

# வன்னிப் பெருநிலப்பரப்பில் முதன்முறையாக நமசிவாய சிவ ஆராதனையும் பிரார்த்தனையும்

அன்பார்ந்த சைவத் தமிழ் மக்களே !

நீண்ட கால வரலாற்றில் எமது மக்கள் அதிகமான துன்பம் நிறைந்த வாழ்வை அனுபவித்திருக்கின்றார்கள். யுத்தம் நிறைவடைந்த பிற்பாடும் அதனுடைய மன அழுத்தத்தில் இருந்து விடுபடாமலும் முழுமையான அபிவிருத்தி மற்றும் சகய வாழ்வையும் அடைந்திட முடியாமல் இருக்கின்றது. இவற்றுக்கெல்லாம் அப்பால் எமது இளைய சமூகத்தினிடையே விரும்பத்தகாத பல கலாசாரம் வளர்ந்து வருவதையும் காண முடிகின்றது. அத்துடன் பெண்கள், சிறுவர்கள் வாழ்விலும் பல இன்னல்கள் நடைபெற்று வருகின்றது.

நல்வாழ்வை அனுபவிக்க முடியாதவர்களாக மீனவமக்கள், இடம் பெயர்ந்த மக்கள், சிறைகளில் இருந்து விடுதலையடைய விரும்பும் மக்கள், காணாமல்போனவர்களது குடும்பங்கள், மீளக் குடியமராத மக்கள் என பலதரப்பட்டவர்களது நலனவேண்டி ஓம் நமசிவாய சிவயாத்திரையும் சிவ ஆராதனையும் மிகச்சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் கடந்த காலங்களில் நடத்தப்பட்டன.

இந்த வருடம் முதன்முறையாக வன்னி பெருநிலப் பரப்பின் மத்தியஸ்தானமாகிய கிளிநொச்சி மாநகரினில் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

கொடிய யுத்தத்தினால் உளரீதியாக பாதிப்படைந்த மக்களுக்கு மன ஆறுதல் கிடைப்பதற்காகவும் மாணவர்களின் கல்வி உயர்விற்காகவும் விவசாய, வியாபார, பொருளாதாரம் உயர்வடையவும், இளையோர் நல்லொழுக்க நல்வாழ்விற்காகவும், பெண்கள் மற்றும் சிறார்களின் பாதுகாப்பிற்காகவும், அரச தனியார் உத்தியோகத்தர்களின் வாழ்வின் சிறப்பிற்காகவும், திருமணம், வேலைவாய்ப்பு, வெளிநாட்டுப் பயணம், குடும்பப் பொருளாதார உயர்வு, கணவன் மனைவி, பிள்ளைகள், ஒற்றுமையாக மகிழ்ச்சியோடு வாழவும், யுத்தகாலத்தில் மரணித்த மக்களின் ஆத்ம சாந்திக்காகவும், இன, மத, மொழி பேதம் இன்றி அனைவரதும் நல்வாழ்விற்காகவும் மிகவும் பக்திபூர்வமாக நடத்தப்படவுள்ளது. வன்னிப் பிரதேச மக்கள் யுத்தம், அதனைத் தொடர்ந்து வரட்சி, அதிகமழை எனப் பெரும் இயற்கையாலும் வர்த்தக வியாபார நிலையங்கள் நெருப்பினால் எரியுண்டது, வித்துக்கள் என செயற்கையாலும் தொடர்ந்து துன்பத்தினை அனுபவித்து வருவதனால் இவர்களது வளமான நலமான நல்வாழ்விற்காக இம்முறை சிவஆராதனை, சிவயாத்திரை கிளிநொச்சி மாநகரில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15.02.2017 புதன்கிழமை காலை 9 மணியளவில் கிளிநொச்சி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து சிவயாத்திரை ஆரம்பமாகி கிளிநொச்சி கந்தசாமி கோவில் வந்தடையும். அதனைத் தொடர்ந்து அங்கு வேத திருமுறை வாத்திய கீத நடன முதலான உபசார பிரார்த்தனைகளும் அவ்வேளையில் அடியார்கள் தமது கைகளினால் சிவலிங்கப் பெருமானுக்கு திருமஞ்சன நீர் அபிஷேகம் செய்தலும் இடம் பெறும். தொடர்ந்து அன்னதானம் முதலியன நடைபெறும்.

இப்பிரார்த்தனைக்கான ஏற்பாடுகளை கிளிநொச்சி மாவட்ட செயலகமும் வர்த்தக சங்கத்தினரும் ஆலயத்தினர்களும் கல்லூரிகளும், பொதுமக்களும் செய்து வருகின்றார்கள்.

பிரார்த்தனைக்கு வலுச்சேர்க்க ஒவ்வொருவரும் ஓம் நமசிவாய மந்திரத்தினை 108 தடவைகள் எழுதுமாறு கேட்டுக் கொள்கின்றோம். எழுதிய மந்திரங்களை ஆராதனையின் போது சமர்ப்பிக்கவும்.

சிவ ஆராதனைக்கு குருமார்கள், ஆலயப் பரிபாலகர்கள், சிவனடியார்கள், மாணவர்கள், சிறுவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வர்த்தகர்கள், அரச தனியார் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் கலைஞர்கள், அரசியல் தலைவர்கள், சமய சமூகத்தலைவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**"எல்லோரும்**
**இன்புற்றிருக்க**
**இறைகழல்**
**தொழுவோம்"**

சந்நிதாச்சாரியார்
சிவஸ்ரீ.சபா.
வாசுதேவக் குருக்கள்
குருமார்சந்நிதானம்
யாழ். சித்தன்கேணி

# புதுவையில் ஜல்லிக்கட்டு நடத்த தடை

ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு புதுவை மாவட்ட ஆட்சியாளர் தடை விதித்துள்ளார். லாஸ்பேட்டை தாகூர் கலைக் கல்லூரி மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை ஜல்லிக்கட்டு நடத்த திட்டமிடப்பட்டு இருந்தது.

இதற்கான கோரிக்கையை முன்வைத்து மாவட்ட நிர்வாகத்திடம் ஜல்லிக்கட்டு பேரவையினர் கடந்த 2 ஆம் திகதி அனுமதி கோரியிருந்தனர். இதனையடுத்து, குறித்த பகுதியில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு தடை விதித்து புதுவை மாவட்ட ஆட்சியாளர் சத்யேந்திரசிங் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "மத்திய சுற்றுச்சூழல் வனத்துறையில் கடந்த 2011 ஆம் ஆண்டு 7ஆம் மாதம் 11 ஆம் திகதி ஜல்லிக்கட்டு தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையின்படி காளைகள் காட்சிப்படுத்த தடை விதிக்கப்பட்ட பட்டியலில் இடம்பெற்றுள்ளது. இதனால் புதுவை சட்டப் பேரவையில் சட்டம் இயற்றி மத்திய அரசின் அனுமதி பெற்ற பின்னரே நடத்தப்பட வேண்டும். இவ்வாறான சூழ்நிலையில் ஜல்லிக்கட்டு நடத்த அனுமதிக்க முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, தாகூர் கலைக் கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக தடுப்புகள் அகற்றப்பட்டுள்ளதாகவும் ஜல்லிக்கட்டு போட்டியை தற்போதைக்கு ஒத்திவைத்துள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-12)

# விபத்து; தாய் பலி! மகள் காயம்

கண்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த புகையிரதம் மோதி, தாயொருவர் உயிரிழந்துள்ளதாகவும் அவருடைய மகள் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் . பிலிமத்தலாவ புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் வைத்து, இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது. 48 வயதுடைய தாய் இந்தச் சம்பவத்தின் போது உயிரிழந்துள்ளதாகவும் அவருடைய 12 வயதுடைய மகள், கடுகண்ணாவை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், பேராதெனிய வைத்தியசாலைககு, மேலதிக சிகிச்சைகளுககாக மாற்றப்பட்டுள்ளார்.(இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 985

Search for people, places and things — Nagendram Home

**அனித்தா**





**வாணி**





**சர்மி**




**ஜீவா**




**தருண்**




**வின்ஜக்சன்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மீண்டும் யுத்தமொன்று உருவாகவே இனவாதிகள் வழியமைக்கின்றனர்

## அமைச்சர் கிரியெல்ல குற்றச்சாட்டு

(கொழும்பு)

***இனவாதச் சிந்தனை கொண்ட சில நபர்கள் நாட்டில் மீண்டும் யுத்தமொன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக பாராளுமன்ற அவைத் தலைவரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல குற்றம் சாட்டியுள்ளார்.***



சகல இனங்களையும் பாதுகாப்பது நல்லாட்சி அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனவும் கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனை தெரிவித்தார்.

புதிய அரசியல் யாப்பு தொடர்பில் நடத்தப்படவுள்ள பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பில் இலகுவில் வெற்றி கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நேற்று மூன்று எம்.பிக்கள் முதல்வர் ஓ.பன்னீர் பக்கம்



அ.தி.மு.க.வில் ஆட்சியையும், அதிகாரத்தையும் கைப்பற்ற ஓ.பன்னீர்செல்வத்துக்கும், சசிகலாவுக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. அதற்கு வலுச்சேர்ப்பதற்காக அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், மூத்த தலைவர்கள், பொதுக்குழு-செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளை தங்கள் பக்கம் இழுக்கும் வேலைகளில் இரு அணிகளைச் சேர்ந்தவர்களும் ஈடுபட்டனர்.

அ.தி.மு.க.வுக்கு சட்டசபையில் மொத்தம் 135 எம்.எல்.ஏ.க்கள் இருக்கின்றனர். பாராளுமன்ற இரு அவைகளிலும் 50 எம்.பி.க்கள் இருக்கின்றனர். இவர்கள் ஆதரவு யாருக்கு கிடைக்கிறதோ அவரது கையே ஓங்கும் என்று கருதப்படுகிறது. தற்போது எம்.எல்.ஏ.க்களில் ஓ.பன்னீர்செல்வம், பாண்டியராஜன், சண்முகநாதன், மாணிக்கம், மனோரஞ்சிதம், மனோகரன், ஆறுகுட்டி ஆகிய 7 பேர் ஓ.பன்னீர்செல்வம் அணியில் உள்ளனர். மற்ற எம்.எல்.ஏ.க்கள் சசிகலா அணியில் உள்ளனர்.

இந்த நிலையில் மூத்த தலைவர்கள் மற்றும் எம்.பி.க்கள் அடுத்தடுத்து ஓ.பன்னீர்செல்வம் அணிக்கு செல்லத் தொடங்கியுள்ளனர்.

மொத்தம் உள்ள 50 எம்.பி.க்களில் தொடக்கத்தில் முதன் முதலாக மைத்ரேயன் எம்.பி. ஓ.பன்னீர்செல்வத்தை ஆதரித்தார். இதையடுத்து நேற்று முன்தினம் காலை நாமக்கல் எம்.பி சுந்தரம், கிருஷ்ணகிரி எம்.பி அசோக்குமார் ஆகியோர் இணைந்தனர்.

நேற்று முன்தினம் பெண் எம்.பி.க்கள் வனரோஜா, சத்யபாமா இருவரும் ஓ.பன்னீர்செல்வம் அணிக்கு ஆதரவு தெரிவித்தனர். இந்த நிலையில் நேற்றுக் காலை மேலும் 3 எம்.பி.க்கள் ஓ.பன்னீர்செல்வம் தலைமையை ஏற்றுள்ளனர்.

தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதி எம்.பி ஜெயசிங் தியாகராஜ் நட்டர்ஜி, வேலூர் எம்.பி செங்குட்டுவன், பெரம்பலூர் எம்.பி. மருதராஜ் ஆகிய 3 பேரும் நேற்றுக் காலை ஓ.பன்னீர்செல்வம் வீட்டுக்கு சென்று தங்கள் ஆதரவை தெரிவித்தனர். இதனால் ஓ.பன்னீர்செல்வம் அணிக்கு வந்துள்ள எம்.பிக்கள் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்துள்ளது.

இவர்களைத் தொடர்ந்து மேலும் சில எம்.பி.க்கள், எம்.எல்.ஏக்களும் அணி மாறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அமைச்சர்களில் சிலரும் ஓ.பன்னீர்செல்வம் அணிக்கு செல்வார்கள் என்று பரபரப்பாக பேசப்படுகிறது.

இதற்கிடையே நேற்றுக் காலை நடிகர்கள் ராமராஜன், தியாகு, அருண்பாண்டியன் (முன்னாள் எம்.எல்.ஏ.) மற்றும் தே.மு.தி.கவில் இருந்து விலகி அ.தி.மு.க.வில் சேர்ந்த முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் தமிழழகன், சுந்தர்ராஜன், அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. சேலம் ரவிச்சந்திரன் ஆகியோரும் ஓ. பன்னீர்செல்வம் அணியில் இணைந்தனர். ஈரோடு மாநகராட்சி முன்னாள் மேயர் மல்லிகாவும் ஓ. பன்னீர்செல்வத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர்கள் கே.ஏ.ஜெயபால், பூனாட்சி, தென் சென்னை மாவட்ட மகளிரணி முன்னாள் செயலாளர் சரஸ்வதி ரெங்கசாமி, தி.நகர் செயலாளர் பத்மினி மற்றும் அ.தி.மு.க. சட்டத்தரணி பிரிவை சேர்ந்த ஏராளமான சட்டத்தரணிகள் ஓ.பன்னீர்செல்வம் அணிக்கு வந்துள்ளனர். (இ-12)

# தி.மு.கவின் ஆட்சி விரைவில் மலரும்

## ஸ்டாலின் நம்பிக்கை



(சென்னை)

"நமது ஆட்சி விரைவில் மலரும் காலம் வரும். அப்போது அனைத்து மக்களையும் பாதுகாக்கும் நல்லாட்சியை வழங்குவோம்" என்று தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

"தமிழகத்தில் யார் முதல்வராவது என்ற போட்டியில் அரசு நிர்வாகம் குட்டிச்சுவராகிக் கிடக்கிறது. ஹாசினி என்கிற பிஞ்சின் கொடூரக் கொலை பற்றி முதல்வரும் கண்டு கொள்ளவில்லை.

பொலிஸ் ஆணையாளரும் எட்டிப் பார்க்கவில்லை" என்று தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும், சிறுமி ஹாசினி குடும்பத்துக்கு நீதியையும், இழப்பீட்டையும் வழங்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பான அறிக்கையில் "தலைவர் கருணாநிதியின் அன்பு உடன்பிறப்புகளே.. நம்மைப் பொறுத்தவரை, ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்கள் நலனில் அக்கறையுடன் செயற்படுகிற இயக்கம் தான் தி.மு.க. எளிய மக்கள் பக்கம் கவனத்தைத் திருப்புவோம். ஆள்பவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வைப்போம்.

நமது ஆட்சி விரைவில் மலரும் காலம் வரும். அப்போது அனைத்து மக்களையும் பாதுகாக்கும் நல்லாட்சியை வழங்குவோம்" என்று அந்த அறிக்கையில் ஸ்டாலின் கூறியுள்ளார். (இ-12)

# பங்குகளை எப்போது விற்கலாம்?

பெரும்பாலான முதலீட்டு ஆலோசகர்கள் எப்போது பங்குகளை வாங்கலாம் என்பது குறித்து எழுதுவார்கள். ஆனால் சரியான சமயத்தில் பங்குகளை விற்பதும் முக்கியம். சில முதலீட்டாளர்கள் பங்குகளின் விலை உயரும் போது விற்றுவிடுகிறார்கள். வாங்கிய விலையை விட இரு மடங்கு அல்லது மூன்று மடங்கு உயர்ந்த பிறகு விற்று விடுகிறார்கள். ஆனால் நீண்ட கால அடிப்படையில் முதலீட்டாளர்கள் மிகப்பெரிய வாய்ப்பை இழக்கிறார்கள். பங்கின் அடிப்படையை பொறுத்து விற்கும் பட்சத்தில் பெரிய இழப்பை சந்திக்க மாட்டார்கள். கீழே குறிப்பிடப்பட் டிருக்கும் சந்தர்ப்பங்களில் முதலீட்டாளர்கள் பங்குகளை விற்பது குறித்த முடிவெடுக்கலாம்.

**முதலீட்டு காரணம் தோல்வியடைந்தால்!**

ஒவ்வொருவரும் பங்குகளில் முதலீடு செய்வதற்கு ஒரு காரணம் இருக்கும். அதிக சந்தை மதிப்பு, அதிக லாபம் கிடைக்கும் என முதலீடு செய்திருப்பார்கள். நீங்கள் என்ன காரணத்துக்காக ஒரு பங்கில் முதலீடு செய்கிறீர்களோ அந்த காரணங்கள் பொய்த்து போகும் பட்சத்தில் அந்த பங்கில் செய்யப்பட்டிருக்கும் முதலீட்டை எடுத்துவிடலாம்.

**நிர்வாகக் கோளாறு**


முதலீடு செய்திருக்கும் நிறுவனத்தில் அல்லது அந்த குழுமத்தில் நிர்வாக கோளாறு ஏற்படும் பட்சத்தில் அந்த பங்கில் இருந்து வெளியேறுவது நல்லது. பலவிதமான நிர்வாகக் கோளாறுகள் உள்ளன. இயக்குநர் குழுவில் ஏற்படும் பிரச்சினை, குடும்ப பிரச்சினை, முக்கியமான நிர்வாகிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை, வரி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஆகியவை முதலீட்டாளர்களுக்கு நல்ல செய்தி அல்ல.

நிறுவனத்தின் தொழிலுக்கு நிர்வாக கோளாறால் பாதிப்பு இல்லை என்றால் பிரச்சினை இல்லை. ஆனால் இதுபோன்ற நிர்வாக கோளாறுகளை எளிதாக எடுத்துக்கொள்ள கூடாது. இந்த விடயத்தில் நிறுவனத்தின் செயல்பாடுகள் மாற்றம், நிறுவனத்தால் பிரச்சினைக்கு போதுமான விளக்கம் கொடுக்க முடியவில்லை என்றால் ஒரு நொடியில் நிறுவனத்தின் சந்தை மதிப்பு அதள பாதாளத்துக்கு செல்லக்கூடும். அதன் பிறகு அந்த சந்தை மதிப்பு மீண்டும் உயராது.

**தவறான பாதையில் தொழில்**

ஒரு விடயம் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது என்றால் அதனை அப்படியேவிட வேண்டும். ஆனால் பெரும்பாலான சமயங்களில் இந்திய நிறுவனங்களின் நிறுவனர்கள் அதனை மறந்து விடுகிறார்கள். பெரும்பாலான நிறுவனர்கள் தங்களது சொந்த ஆசைக்காக நிறுவனத்தின் திசையையே மாற்றுகிறார்கள். அதன் பிறகு அந்த பங்குகளுக்கு இறங்குமுகம்தான்.

ஒரு நிறுவனம் பெரிய தொகையில் வேறு நிறுவனத்தை வாங்குவது, அப்போதைக்கு பிரபலமாக இருக்கும் புதிய துறையில் முதலீடு செய்வது, எதிர்காலத்தை கணிக்காமல் அதிகளவு விரிவாக்க பணிகளில் ஈடுபடுவது, அதிக தொழில்களில் முதலீடு செய்வது போன்ற காரணங்களே நிறுவனத்தில் இருந்து வெளியேற போதும். மேலே கூறிய செயல்களை கடன் வாங்கி செய்யும் பட்சத்தில் அப்போதே வெளியேறுவது நல்லது.



**அதிக சந்தை மதிப்பு**


ஒரு நல்ல நிறுவனத்தின் பங்குகளை நியாயமான விலையில் வாங்கிய பட்சத்தில், அந்த பங்கின் சந்தை மதிப்பு எவ்வளவு உயர்ந்தாலும் பிரச்சினை இல்லை என பங்குச்சந்தையில் நீண்டகாலம் முதலீடு செய்யும் முதலீட்டாளர்கள் கூறுவார்கள். ஆனால் பெரும்பாலான பங்குச் சந்தை சரிவுகள் சந்தை மதிப்பு அதிகமாக இருக்கும் போது நடந்தவையாகும். ஒரு நிறுவனத்துக்கு எவ்வளவு விலையும் கொடுக்க முதலீட்டாளர் தயாராக இருக்கிறார் என்றால் அங்கு சரிவு தொடங்கும்.

# மொபிடெலின் சீட்டிழுப்பில் 12வது வெற்றியாளர் தெரிவு

மொபிடெல் Cash Bonanza மொன்டேரோ எக்ஸ்ட்ராவெகன்ஸா சீட்டிழுப்பின் மூலம் இதுவரை 3,500 லட்சம் ரூபா பெறுமதிமிக்க பணப்பரிசுகளை, மொபிடெல் 675, 262 வாடிக்கையாளர் களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. தேசிய அலைபேசி சேவை வழங்குநரான, SLT மொபிடெல் நிறுவனத்தின் 2016 ஆண்டுக்கான, "Cash Bonanza" சீட்டிழுப்புதிட்டத்தின் மூலம், மாதாந்த மற்றும் நாளாந்த அடிப்படையில் வெற்றியாளர்களை தெரிவு செய்து அதிசொகுசு மிட்சுபிசி மொன்டேரோ ரக மோட்டார் வண்டி உட்பட இலட்சக் கணக்கான பரிசுகளை வழங்கிவருகின்றது. இம்முறை மாதாந்த சீட்டிழுப்பின் வெற்றியாளராக தெகிவளை பிரதேசத்தினை சேர்ந்த குணரத்தினராஜா ஆரியரத்தினம் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதுவரை நடந்த சீட்டிழுப்பில் மொன்டேரோ ரக கார் களை பலர் வெற்றி பெற்றிருந்தனர்.



"Cash Bonanza" திட்டத்தின் வெற்றியாளர்கள் தொடர்பான விபரங்கள், மொபிடெல் வாடிக்கையாளர்சேவை இலக்கமான 071-2755777 மற்றும் தபால் மூலமாக மட்டுமே வெற்றியாளர்களுக்கு அறியத்தரப்படும். இதன் போது, வாடிக்கையாளர்கள் வெற்றியீட்டிய பரிசுகளுக்காக எவ்விதமான மேலதிகக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது. -




# அரச நிறுவனங்களில் 11 ஆயிரம் கோடி நட்டம்

15 மாதங்களுக்குள் 15 அரச நிறுவனங்களில் 11,000 கோடி ரூபாவிற்கும் அதிக இழப்பு ஏற்பட்டுள்ளதாக கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார்.

2015 மே மாதத்தில் இருந்து 2016 ஆகஸ்ட் மாதம் வரையான காலப் பகுதியில், 15 அரச நிறுவனங்களின் இலாப நட்டம் தொடர்பான கோப் குழுவின் விசாரணை அறிக்கை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

சதொச, மகநெகும, சிறிலங்கா கிரிக்கெட் மற்றும் தேசிய லொத்தர் சபை போன்ற நிறுவனங்களும் நட்டமடைந்துள்ள நிறுவனங்களில் அடங்கும்.

சூரியபுர போன்ற விளையாட்டு மைதானங்களுக்கு உரிமையாளர்கள் இல்லாத நிலைமையே இன்று காணப்படுவதாகவும் துறைமுக அதிகார சபையினாலா அல்லது இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினாலா 53 பில்லியன் ரூபா செலுப்படுகின்றது என வினா எழுவதாகவும் சுனில் ஹந்துன்னெத்தி குறிப்பிட்டார்.

இதனால், 530 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், வீதி அதிபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தற்ற திட்டங்களாக முன்னெடுக்கப்பட்ட சில விடயங்களுக்காக 57 ஆயிரம் மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்திற்கு மில்லியன் கணக்கான டொலர்களும் மில்லியன் கணக்கான யூரோக்களும் கிடைத்துள்ளதாகக் குறிப்பிட்ட சுனில் ஹந்துன்னெத்தி, அந்தப் பணம் செலவிடப்பட்ட விதம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் அம்பாந்தோட்டை துறை முகத்தினால் ஏற்பட்டுள்ள நட்டம் குறித்தும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்டு, உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என சுனில் ஹந்துன்னெத்தி சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டார்

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,119.99 | 6,094.15 ⇩ |
| எஸ் &.பி 20 சுட்டி | 3,506.13 | 3.488.5 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 2,120.364 |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** கார்கோ போட்(94.20), சிங்கி ஹொஸ்பிட்டல் (2.00), சம்சன் இன்ரனட்(98.90), மஸ்கெலியா(8.20), கபுஹஸ்தேன்(17.80).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** லீ ஹெட்ஜ்(77.00), களனி கேபிள்ஸ் (101.00), சிரி லாண்ட்(42.60), ஏஐஏ இன்சுரன்ஸ்(300.00), ஒன்லே (48.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# இல. வங்கி தொடர்பில் கணக்காய்வு

2015ஆம் ஆண்டு இடம்பெற்ற சர்ச்சைக்குரிய மத்திய வங்கியின் முறிகல் கொடுக்கல் வாங்கலுக்கு, கடன் வழங்கியமைக்காக இலங்கை வங்கி தொடர்பில் கணக்காய்வு மேற்கொள்ள கணக்காய்வாளர் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சர்ச்சைக்குரிய முறிகல் கொடுக்கல் வாங்கலின்போது பேர்ப்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்திற்கு இலங்கை வங்கி பெருந்தொகை கடன் வழங்கியமை தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க தெரிவித்தார்.

இலங்கை வங்கி பேர்ப்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்திற்கு விடுத்த கோரிக்கைக்கு அமைய 12.5, 12.75 மற்றும் 13 வீத அடிப்படையில் 13 பில்லியன் வரை விலை கோரப்பட்டிருந்ததாக கோப் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

ஆரம்ப வர்த்தகர் சார்பாக மற்றுமொரு ஆரம்ப வர்த்தகர் மத்திய வங்கியின் முறிகள் தொடர்பில் விலைமனு முன்வைத்த முதல் சந்தர்ப்பம் இதுவென செயற்குழுவின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

# 5 புதிய கிளைகளுடன் விசன் கெயர் விஸ்தரிப்பு

நாட்டின் பிரதான மாவட்டங்களுக்கு தனது மூக்குக்கண்ணாடி சேவைகளை விஸ்தரிப்பது எனும் திட்டத்தின் பிரகாரம் கம்பஹா, குளியாப்பிட்டிய, நீர்கொழும்பு, மாத்தறை மற்றும் மொனராகலை ஆகிய நகரங்களில் விசன் கெயர் தனது புதிய கிளைகளை அங்குரார்ப்பணம் செய்திருந்தது.

இதன் மூலம் இலங்கையின் வெவ்வேறு பகுதிகளில் தான் கொண்டுள்ள கிளை எண்ணிக்கையை 39ஆக அதிகரித்துள்ளது.

விசன் கெயா தனது விஸ்தரிப்பு செயற்திட்டத்தினூடாக நிறுவனத்தின் சேவைகள் பற்றிய விழிப்புணர்வை விஸ்தரித்து வருவதுடன், தமது கண்பார்வை தீர்வுகள் பற்றிய தெரிவுகளையும் தொடர்ச்சியாக விநியோகித்த வண்ணமுள்ளது.

இலங்கையின் 25 மாவட்டங்களிலும் பிரசன்னத்தைக் கொண்டிருப்பது எனும் எதிர்பார்ப்புடன் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் விசன் கெயர் எனும் வர்த்தக நாமத்தில் மைந்த தயாரிப்புகளை நாட்டின் சகல பாகங்களையும் சேர்ந்தவர்களுக்கும் அனுபவிப்பதற்கான வாய்ப்பை வழங்குவதையும் நோக்காக கொண்டுள்ளது.

VISION CARE
OPTICAL SERVICES

விசன் கெயர் பொது முகாமையாளர் ஹர்ஷ மதுரங்க கருத்துத் தெரிவிக்கையில்,

சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற வர்த்தக நாமங்களை அறிமுகம் செய்யும்போது விசன் கெயர் ஒரு போதும் அதன் தரத்தில் குறை வைப்பதில்லை. இலங்கையில் விசன் கெயர் தனக்கென தனி நாமத்தை பதித்துள்ளது. உயர் தரம் வாய்ந்த பொருட்களில் மாத்திரம் கவனம் செலுத்தாது நுகர்வோருக்கு சகாயமான மற்றும் நேர்த்தியான விலைகளில் தயாரிப்புகளை வழங்குநர் எனும் நிலையையும் பதிவு செய்துள்ளது என்றார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 148.71 | 152.44 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 185.23 | 191.55 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 157.86 | 163.88 |
| சுவிஸ் பிராங் | 148.30 | 154.20 |
| கனேடிய டொலர் | 112.28 | 116.71 |
| அவுஸ்திரேலிய டொலர் | 112.31 | 117.32 |
| சிங்கப்பூர் டொலர் | 104.49 | 108.32 |
| ஜப்பான் யென் | 1.31 | 1.36 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.24 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 41.04 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி




# புழுதிச் சாலையில் ஒரு வைரம்



அரசனுக்கே ஆசானாக இருந்தார் ஒரு குரு. ராஜ குருவாகவே இருந்தாலும், அரச போகத்தை அனுபவிக்க விரும்பாத அவர், ஒரு தேசாந்திரியாக பயணித்து, மக்கள் தருவதைப் பெற்றுக் கொள்வது வழக்கம்.

ஒரு நாள் அந்த நாட்டின் தலைநகரை விட்டு, மற்றொரு நகரை நோக்கி நடந்தார்.

மாலை நேரமாகிவிட்டது. மழை வேறு. ஒரு கிராமம் எதிர்ப்பட்டது. முற்றாக நனைந்துவிட்ட குரு, விவசாய பண்ணைக்கு நடுவில் இருந்த ஒரு வீட்டை அணுகினார். வீட்டுக்கு வெளியே நிறைய ஷூக்கள், நனையாமல் இருந் தன.

சரி, ஆட்கள் நிறைய இருக்கிறார்கள்... நனையாத உடை, ஒரு ஜோடி ஷூ வாங்கி அணிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு உள்ளே நுழைந்தார்.

உள்ளேயிருந்து வந்த ஒரு பெண்மணி, குருவுக்கு ஒரு ஜோடி ஷூக்களை தந்தார். அவர் உடை நனைந்திருப்பதைப் பார்த்து, வேறு உடை மாற்றிக் கொள்ளுமாறும், இரவை அங்கேயே கழிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

வீட்டு முகப்பில் ஒரு சிறு கோயில். அங்கு சிறிது நேரம் கண்மூடி நின்ற குருவுக்கு, பின்னர் உள்ளே இருந்த தனது அம்மா மற்றும் குழந்தைகளை அந்தப் பெண் மணி அறிமுகப்படுத்தினார்.

ஆனால் அவர்கள் முகத்தில் ஏதோ ஒரு வாட்டத்தை அவர் கண்டார். ஏதோ சரியில்லை என்பது புரிந்ததும், "என்ன அம்மா உங்கள் பிரச்சினை?" என்று கேட்டார்.

"அய்யா... என் கணவர் ஒரு சூதாடி, குடிகாரர்.. எப்போதெல்லாம் சூதாட்டத்தில் ஜெயிக்கிறாரோ, அப்போது இருக்கும் பணத்தையெல்லாம் குடித்துவிடுவார். தோற்கும் போது, வீட்டிலிருப்பதை எடுத்துப்போய் விடுவார். அல்லது கடன் மேல் கடன் வாங்குகிறார். சமயத்தில் குடித்து விட்டு எங்கேயோ விழுந்து கிடந்து பின் வருகிறார்... என்ன செய்வதென்றே புரியவில்லை," என்றார்.

கவலை வேண்டாம்... நான் உதவுகிறேன்... இதோ என்னிடம் இவ்வளவு பணம் உள்ளது. நல்ல ஒயினையும், சாப்பிட உணவும் வாங்கி வாருங்கள். அதன் பிறகு நீங்கள் படுக்கப் போங்கள்... நான் அந்தக் கோயிலில் சற்று நேரம் தியானம் செய்கிறேன்", என்று அந்தப் பெண் மணிடம் பணம் கொடுத்து அனுப்பினார். (தொடரும்...)

## 02.2017 13 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1258 - பக்தாத் மங்கோலியரிடம் வீழ்ந்தது.
- 1668 - எஸ்பெயின் போர்த்துக்கலை தனிநாடாக அங்கீகரித்தது.
- 1755 - ஜாவாவின் மடாரம் பேரரசு "யோக்யகர்த்தா சுல்தானகம்" மற்றும் "சுரகர்த்தா சுல்தானகம்" என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.
- 1880 - எடிசன் விளைவை தொமஸ் எடிசன் அவதானித்தார்.
- 1914 - பொன்னம்பலம் அருணாசலத்திற்கு சேர் பட்டம் பக்கிங்ஹாம் அரண்மனையில் வழங்கப்பட்டது.
- 1931 - புது டில்லி இந்தியாவின் தலைநகராக்கப்பட்டது.
- 1934 - சோவியத் நீராவிக்கப்பல் செலியூஸ்கின் ஆர்க்டிக் பெருங்கடலில் மூழ்கியது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் படைகள் ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரை ஹிட்லரின் நாசிப் படைகளிடம் இருந்து மீட்டன.
- 1960 - பிரான்ஸ் தனது முதலாவது அணுகுண்டை சோதித்தது.
- 1971 - வியட்நாம் போர். ஐக்கிய அமெரிக்காவின் உதவியுடன் தெற்கு வியட்நாம் லாவோசைத் தாக்கியது.
- 1974 - நோபல் பரிசு பெற்ற அலெக்சாண்டர் சொல்செனிட்சின் சோவியத் ஒன்றியத்தில் இருந்து நாடு கடத்தப்பட்டார்.
- 1975 - நியூயோர்க் நகரில் உலக வர்த்தக மையத்தில் தீ பரவியது.
- 1978 - சிட்னியில் ஹில்டன் உணவகத்தின் முன் குண்டு வெடித்ததில் ஒரு காவற்படை உட்பட 2 பேர் கொல்லப்பட்டனர்.
- 1984 - கான்ஸ்டன்டீன் செர்னென்கோ சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளரானார்.
- 1985 - கொக்கிளாய் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் அழிக்கப்பட்டது.
- 1990 - இரண்டு ஜெர்மனிகளும் இணைவது குறித்த இரண்டு-கட்டத் திட்டம் அறிவிக்கப்பட்டது.
- 1996 - நேபாள மக்கள் புரட்சி மாவோயிசவாத போராளிகளால் ஆரம்பிக்கப்பட்டது.
- 2001 - எல் சல்வடோரில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 400 பேர் வரை கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1879 - சரோஜினி நாயுடு, இந்திய சுதந்திரப் போராட்ட வீராங்கனை. (இ. 1949)
- 1910 - வில்லியம் ஷாக்லி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர். (இ. 1989)
- 1920 - அ. மருதகாசி, தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர். (இ. 1989)
- 1934 - வெ. யோகேஸ்வரன், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி. (இ. 1989)
- 1937 - ரூப்பையா பண்டா, சாம்பிய அரசுத் தலைவர்.

### இறப்புகள்

- 1883 - ரிச்சார்ட் வாக்னர், செருமானிய இயக்குநர், இசையமைப்பாளர். (பி. 1813)
- 1950 - செய்குத்தம்பி பாவலர், தமிழறிஞர். (பி. 1874)
- 2009 - கிருத்திகா, தமிழக எழுத்தாளர்
- 2014 - பாலுமகேந்திரா, தமிழ்த் திரைப்பட இயக்குநர். (பி. 1939)

### சிறப்பு நாள்

- உலக வானொலி நாள்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 70 | 140 | 100 | 100 | 150 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 220 | 180 | 200 | 180 | 250 | 200 |
| தக்காளி | 120 | 70 | 70 | 70 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 80 | 60 | 60 |
| கோவா | 30 | 80 | 60 | 30 | 50 | 40 |
| கரட் | 50 | 80 | 60 | 60 | 120 | 30 |
| பூசணி | 60 | 50 | 60 | 60 | 60 | 60 |
| புடோல் | 50 | 80 | 80 | 80 | 60 | 70 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 80 | 120 | 120 | 140 | 140 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 300 | 150 | 120 | 200 | 250 | 200 |
| வெண்டிக்காய் | 150 | 200 | 140 | 120 | 160 | 300 |
| கருணைக்கிழங்கு | 50 | 80 | 80 | 50 | 90 | 60 |
| பயற்றங்காய் | 300 | 180 | 200 | 200 | 200 | 300 |
| லீக்ஸ் | 50 | 160 | 80 | 60 | 120 | 80 |
| பீற்றூட் | 50 | 60 | 50 | 50 | 90 | 80 |
| கறிமிளகாய் | 180 | 120 | 200 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 120 | 700 | 600 | 800 | 700 |
| போஞ்சி | 120 | 80 | 100 | 100 | 160 | 100 |
| கத்தரிதம்புள்ள | 100 | [illegible] | 100 | — | 80 | 140 |
| கீரை - 1பிடி | 30 | 80 | 30 | 40 | 40 | 30 |
| தேசிக்காய் | 120 | 120 | 150 | 120 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 30 | 50 | 55 | 50-70 | 50 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 | 200 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 60 | 60 | 60 | 60 | 100 | 200 |
| முள்ளங்கி | 50 | 60 | 50 | 50 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 50 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | 60 | 80 | 60 | 70 |

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"
~ பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## என்ன பிழை நடந்தாலும் அது எங்கள் தலையில்தான்

கேப்பாப்பிலவு மக்களின் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

வாழ்ந்த நிலத்தை வழங்க மறுப்பதால் இப் போராட்டம் தொடர்வதில் மிகுந்த நியாயப்பாடு உண்டு.

யுத்தத்துக்கு பின்னர் நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவுகிறது என்றால், யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமர்வது கட்டாய மானதாகும்.

இருந்தும் கேப்பாப்பிலவு மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர முடியாமல் மிகுந்த கஷ்டங்களையும் அவலங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

இந்நிலையில் அந்த மக்கள் இரவு பகலாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவ் விடத்தில் அந்த மக்களின் நியாயபூர்வமான போராட்டத்துக்கு தார்மீகப் பங்களிப்பை வழங்கு வது மனிதநேயம் கொண்ட அனைவரதும் கடமை என்பதுடன் சொந்த நிலத்தில் குடியமர விரும்புகின்ற மக்களை அந்த இடத்தில் குடிய மர விடுவதே அரசாங்கத்தின் கடமையுமாகும்.

எனினும் இதுவரை அந்த மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. மனத்திடம் கொண்ட கேப் பாப்பிலவு மக்கள் தங்கள் மண்ணை மீட்ப தென திடசங்கற்பம் கொண்டு அகிம்சை வழி யில் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர் களின் போராட்டத்துக்கு சகல வழிகளிலும் ஆதரவு கிடைத்து வருகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், கேப் பாப்பிலவு மக்களின் பிரச்சினை தொடர்பில் பிரதமர் ரணிலுடன் கதைத்திருந்தால் அதற் குத் தீர்வு கிடைத்திருக்குமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒரு வர் கூறியுள்ளார்.

அவரின் கூற்றுப்படி கேப்பாப்பிலவு மக்க ளின் போராட்டம் தவறான வழி என்பது போல வும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இது பற்றிக் கதைத்திருந்தால் பிரச்சினை தீர்ந்தி ருக்குமென்பது போலவும் அமைந்துள்ளது.

அவரின் கருத்தைப் பார்க்கும் போது அது தொடர்பில் சில ஐயவினாக்கள் எழவே செய் கின்றன.

அதாவது கேப்பாப்பிலவு மக்களின் நிலங் கள் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டு பல வருடங்க ளாகி விட்டன.

இது தொடர்பில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப் பினர்கள் எவரும் பிரதமர் ரணிலிடம் எடுத்து ரைக்கவில்லையா? பிரதமருடன் கதைத்திருந் தால் கேப்பாப்பிலவு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்திருக்குமென்றால் இதுபற்றி பிரத மருடன் கதைக்க வேண்டிய பொறுப்பு கேப்பாப் பிலவு மக்களுடையதா? தமிழ் மக்களின் பிரதி நிதிகளினுடையதா? கேப்பாப்பிலவு மக்கள் தங் கள் சொந்த இடங்களில் குடியமர முடியாமல் மிகவும் கஷ்டப்படுகின்றனர் என்ற தகவல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமைக்குத் தெரியாதா? என்ற கேள்வி கள் எழும்.

எது எவ்வாறாயினும் இனிமேல் தமிழ் மக் கள் எந்தப் போராட்டத்தை நடத்தினாலும் அது தொடர்பான குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் தமிழர் தலைகளில் தமிழ் அரசியல் தலைமை யால் கொட்டப்படும் என்பது நிறுதிட்டமான உண்மை.

இதில் ஒன்று கேப்பாப்பிலவு மக்களின் போராட்டம் மீதான குற்றச்சாட்டு, அடுத்தது எழுக தமிழ் எழுச்சிப் பேரணி தொடர்பான குற் றச்சாட்டாக இருக்கும்.

ஆம், நாங்கள் கேட்பதையெல்லாம் தருவ தாக நல்லாட்சியினர் இருந்தனர். எனினும் வடக்கிலும் கிழக்கிலும் நடந்த எழுக தமிழ் எழுச்சிப் பேரணியால் அது கெட்டுப் போய்விட் டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும் புத் தலைமை குற்றம் சாட்டும். இதை நம்பு வதற்கும் நம்மில் பலர் இருக்கவே செய்வர்.

என்ன செய்வது எதிரி வெளியில் என்றால் எதிர்கொள்வது சுலபம். ஆனால் தமிழர்களு க்கு எதிரி உள்வீட்டுக்குள் இருப்பதால் அழிவைச் சந்திப்பதைத் தவிர வேறு வழி ஏதுமில்லை எனலாம்.

## ஜனாதிபதி செயலகத்தில் இருந்த வாகனங்களுக்கு நடந்தது என்ன?

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தில் காணப்பட்ட குண்டு துளை க்காத பல மோட்டார் வாக னங்கள் தற்போது அங்கு இல்லையென தெரிவிக்கப் படுகிறது.

இதன்காரணமாக குறி த்த வாகனங்களுக்கு என்ன நடந்ததென சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள் ளன.

விசேட பிரபு வாகனம் உட்பட அனைத்து வாக னங்களையும் உள்ளடங் கிய ஆவணம் ஒன்று ஜனா திபதி செயலகத்தில் காணப் பட வேண்டும்.

எனினும் அவ் வாறான ஒன்று உரிய முறை யில் செயற்படுத்தாமையினால் 2015ஆம் ஆண்டு ஜனாதி பதி தேர்தலின் பின்னர் ஜனாதிபதி செயலகத்திற் கான வாகனங்களை கண்டு பிடிப்பது உட்பட கடினமான விடயமாகியுள்ளது.

இந்த குண்டு துளைக் காத வாகனங்கள் உட்பட 69 வாகனங்கள் இராணு வத்தினரின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக பேச்சா ளர் ஒருவர் தெரிவித்துள் ளார். இந்நிலையில் அவ் வாறு இராணுவத்தினரின் பொறுப்பில் ஒப்படைக்கும் எவ்வித முறையும் ஜனாதி பதி செயலகத்தில் இல்லை.

விசேட பிரபு பாதுகாப் பிற்காக குண்டு துளைக்காத வாகனம் ஒன்றை இராணு வத்தினரால் ஜனாதிபதி செய லகத்திற்கு பெற்றுக் கொள்ள மாத்திரமே முடியும்.

குறித்த கடமை நிறைவ டைந்தவுடன் உடனடியாக அந்த வாகனத்தை ஒப்படை ப்பதே சாதாரண முறை யாகும்.

அவ்வாறான எவ்வித கோரிக்கையும் இன்றி ஜனா திபதி அலுவலகத்தில் இரு ந்த மோட்டார் வாகனம் இவ் வாறு இராணுவத்தினரின் பொறுப்பில் உள்ளமை தொடர்பில் சந்தேகம் ஏற் பட்டுள்ளது. (இ-3)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**எளிய உடற்பயிற்சிகள் எவை?**

முந்தைய காலத்தில் நட ந்து சென்று ஆறுகள், ஓடை கள், கோயில் குளங்கள் ஆகியவற்றில் நம் முன்னோர் குளித்தார்கள்.




நடப்பது ஒரு சிறந்த எளிமை யான உடற்பயி ற்சியாகும். குள த்தில் நீந்துவது, உழைப்பது, வீட்டு வேலை கள் செய்வது ஆகியவையும் உடற்பயிற்சியின் பகுதிக ளாகும். முன்பெல்லாம் குழ ந்தைகள் நிறைய நேரம் விளையாடினார்கள். பந்து விளையாட்டு, சடுகுடு, ஓடி விளையாடுவது என்று பல் வேறு விளையாட்டுக்களை விளையாடினார்கள். உடற் பயிற்சி செய்வதன்மூலம் உடலின் இரத்தக் குழாய்கள் விரிவடைந்து அசுத்தக்காற்றை வெளியேற்றி சுத்தமான காற்றை உள்வாங்குகிறது. இதன் மூலம் இரத்த ஓட்டம் சீராகிறது. கால்களுக்கு வலிமை அதி கரிக்கிறது.

முந்தைய கால த்தில் குழந்தை கள் மூன்று, நான்கு மைல் கள் நடந்தே பாட சாலைக்குச் சென் றார்கள். உடற்ப யிற்சியினால் உடல்எடை குறை கிறது. அதிக சதை போடுவது தடுக்கப்படுகிறது. நல்ல முறையில் செரிமானம் நடை பெறுகிறது. இதனால் நமக்கு உணவு ருசிக்கிறது. மனதிற்கு புத்துணர்ச்சி கிடை க்கிறது. உடற்பயிற்சியின் பலன்களை கண்டறிந்து நம் முன்னோர் குழந்தை களை விளையாட அனும தித்தார்கள். (தொடரும்)

## சாஸ்திரங்கள்

✦ ஆலயத்திற்குச் செல்பவர் தேங்காய், பழம், புஷ்பம் இவைகளை நீரினால் அலம்பி முழங்காலுக்குக் கீழ் தொங்கவிடாமல் எடுத்துச் செல்லவேண்டும்.

-ஆலய தரிசன விதி

✦ மூடத்தனத்தால் பெரியோரைப் பகுத்தறியாமல் துன்பப்படுத்துகிறவன் புத்திர, மித்திர, களத்திரா திகளுடன் (மனைவி, மக்கள், உறவினர்களுடன்) அழிகிறான்.

-பிரம்ம ரகசியம்

✦ உழுத நிலத்திலும் பயிர்களின் நடுவிலும் பசுக்கள் இருக்குமிடத்திலும் மலசலம் கழிக்கக்கூடாது. இவ் விடங்களிலெல்லாம் லெட்சுமி வாசம் செய்கிறாள்.

-ஸ்ரீவிஷ்ணுபுராணம்

✦ போஜனத்திற்கு முன்பு "ப்ராணாய ஸ்வாஹா, அபானாயா ஸ்வாஹா" என்று சுருக்கமாகச் சொல் லப்படுவது "ப்ரணாக்னி ஹோத்ர" மந்திரமாகும். இதைக் காய்ந்த கட்டையிடம் சொன்னால்கூட அதில் கிளைகள் முளைத்து இலைகள் தரிக்கும்.

-சாந்தோக்கிய உபநிஷத்து

✦ போஜனத்திற்கு முன்பு ப்ராணாக்னி மந்திரத்தைச் சொன்னால் உண்ட உணவு நன்கு செரித்து உடலுக்கு ஆரோக்கியத்தை உண்டு பண்ணும்.

-சாந்தோக்கிய உபநிஷத்து

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமை ப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக இன்று திங்கட் கிழமை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரை **யாழ.பிரதேசத்தில்** கைதடி வடக்கு, கைதடி மத்தி, நவ புரம், வன்னியசிங்கம் வீதி ஆகிய இடங்களிலும் **வவு னியா பிரதேசத்தில** சாந்த சோலைக்கிராமம், வவு னியா நகரம், பூங்கா வீதி, புகையிரத நிலைய வீதி, வவுனியா மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து கண்டி வீதியூடாக கற்குண்டமடு வரை, மதவு வைத்த குளத் திலிருந்து பண்டாரிக்குளம் வரைக்கும், காத்தார் சின் னக் குளம், மகாறம்பைக் குளம், பூந்தோட்டம், குரு மன்காடு, வைரவ புளியங் குளம், பட்டானிச்சூரிலிருந்து நெளுக்குளம் சந்தி வரை, கூமாங்குளத்திலிருந்து நொச் சிக்குளம் வரை, நெளுக் குளத்திலிருந்து பெரிய நொச் சிக்குளம் வரைக்கும், நேரிய குளத்திலிருந்து செட்டிகுளம் வரை வவுனியா வைத்திய சாலை, வவுனியா இலங்கை தொலைத்தொடர்பு நிலை யம், வவுனியா மக்கள் வங்கி, வவுனியா தேசிய சேமிப்பு வங்கி, வவுனியா இலங்கை வங்கி, வவுனியா கார்கில்ஸ் பூட் சிற்றி, கச்சேரியடி நீர்ப்பா சன சபை, மூன்றுமுறிப்பு விமானப்படை முகாம், மண் டரின் காமென்ஸ் Gowloom காமென்ட்ஸ் இரட்டை பெரிய குளம் இராணுவ முகாம், பூ-ஓயா இராணுவ முகாம், குளோப் அரிசி ஆலை, மடுக் கந்த தொலைத்தொடர்பு நிலையம், குருமன்காடு **UNHCR**, அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, ஸ்ரீரங்கம் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, செட்டிகுளம்தொலைத் தொடர்பு கோபுரம், செட்டி குளம் வைத்தியசாலை, செட்டிக்குளம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் , வெளிக் குளத்திலிருந்து குடாகச்சக் கொடிய வரை, கோவில்குளத திலிருந்து சிதம்பரபுரம் வரை, வவுனியா நகரத்திலிருந்து போகஸ்வேவா வரை, **T.M.M** கல்லுடைக்கும்ஆலை, சூசைப் பிள்ளையார்குளம், ஓவியா விடுதி, **S.V.R.** அரிசிஆலை, லங்கா அரிசி ஆலை, கீர்த்தி அரிசி ஆலை, குடாகச்சக் கொடிய கல்லுடைக்கும்ஆலை, **CEC** கல்லுடைக்கும் ஆலை, 1ஆம் குறுக்குத்தெரு வவு னியா, பிரசன்னா கல்லு டைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### த்வைதம், அத்வைதம், விசிஷ



நீங்கள் வெளியூருக்கு செல்கிறீர் கள் அங்கு பகல் உணவு கிடைக்காது என்பதால் உணவுப்பெட்டியில் (Tiffin Box) உணவை எடுத்துச் செல்கிறீர்கள். இப்போது, நீங்கள் வேறு, உணவு வேறு. பிறகு பகல், ஒரு மணி அளவில் அந்த உணவை உண் ணுகிறீர்கள். இப்போது அந்த உணவு பெட்டியில் இல்லை உங்களுக்குள் சென்று விட்டது. இவ்வளவு நேரம் அந்த உணவும் நீங்களும் தனித்தனியே இருந்தாலும் இப்போது ஒன்றாகிவிட்டீர்கள். இப்போது உங்களை நினைத்துப் பாருங்கள். நீங்கள் யார்? இதுவரையில் நீங்கள் எடுத்துக் கொண்டுள்ள மொத்த உணவின் சாரம் (essence) தானே?

அணு நிலையில் உடலும் ஒன்றே. சிவம் என்ற இருப்பு நிலையிலிருந்து சக்தியெனும் விண் மலர்ந்தது. சில விண் துகள்கள் உடலாயின. சில விண் துகள்கள் உணவாயின. இதனால் உடலும், உணவும் தோன்றிய மூலப்பொருள் அணுவே. இங்கு அத்வைதம் துவைதமாயிற்று. 1 மணி க்கு, நீங்கள் வேறு, அந்த உணவு வேறு. 5 மணிக்கு நீங்க ளும் அந்த உணவும் இரண்டறக் கலந்து ஒன்றாகி விட்டீர்கள். 1 மணியிலிருந்து 5 மணி வரை நடைபெற்ற வேலைக்கிரமம் (Process) இருக்கிறதே அதுதான் விசிஷ்டாத்வைதம்.

மனிதன் அத்வைதம் என்பதையும், த்வைதம் என்பதையும் உணர்ந்து கொள்கிறான். த்வைதம் என்ற நிலையிலிருந்து, உண்மையைப் புரிந்து கொண்டு, இயற்கையின் ஒழுங்காற்றலைப் புரிந்து கொண்டு, தன்னை உயர்த்திக் கொண்டு அத்வைதம் என்ற நிலைக்குச் சென்றடைகிறான். இந்த செயல் ஒழுங்கு (Process) தான் விசிஷ்டாத்வைதம். அதற்குத் தனித் தன்மையுள்ள அத்வைதம் (Special advaitha) என்ப தும் பொருந்தும்.

இவ்வாறான உண்மைகளைத் தெளிவாக உணர்ந்து கொள்ளாமல், "த்வைதம் ஒன்றுதான் கடவுளை அடைய வழி" என்றும், "அத்வைதம் ஒன்று தான் கடவுளை அடையவழி" என்றும், சண்டையிட்டுக் கொண்டு மக்களில் பலர் தங்களைக் குழப்பத்திலாழ்த்திக் கொள்கிறார்கள். ஒவ்வொரு பொருளுக்கும், நிகழ்ச்சிக்கும் மூன்று அடிப்படைக் கொள்கைகள் (Principles) உண்டு. "எல்லாம் ஒன்று" என்பது அத்வைதம். "ஒவ்வொன்றும் அதனதன் தனித்தன்மைக்கும் குணாதிசயங்களுக்கும் ஏற்ப ஒன்றுக்கொன்று "மாறுபடுகிறது" என்பதை த்வைதம்," எல்லாமே பகுத்துக் கொண்டே வரப்படும்பொழுது (While disintegrating) அணுவாகிப் பின்னர் பரமாகிறது என்பது விசிஷ்டாத்வைதம்.

# மூன்றாம் சுற்றுக்கு முன்னேறியது மல்லாகம் ஸ்ரீ முருகன் வி. கழகம்



கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டு கழகத்தின் 60வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடத்தும் யங்கம்பன்ஸ் வைர விழா நிகழ்வின் ஒரு அங்கமான கிரிக்கெட் தொடரின் 08/02/2017 அன்று மின் னொளியில் நடைபெற்ற இரண்டாம் சுற்றில் முதலாவது ஆட்டத்தில் கரவெட்டி ஞான!ம்ஸ் வி.க எதிர்த்தாடியது மல்லாகம் ஸ்ரீமுருகன் வி.க.

நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய ஸ்ரீமுருகன் முதலில் துடுப்பெடுத்தாடியது. நிர்ணயிக்கப்பட்ட 7 ஓவரில் 6 விக்கெட்டை இழந்து 53 ஓட்டங்களை பெற்றது.

ஸ்ரீ முருகன் வி.கழகம் சார்பாக வரன் 23ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

ஞானம்ஸ் சார்பாக ஜொனி1 முருகதாஸ்2, செந்தி,ஜெனன் தலா1 ஒவ்வொரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

54என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய கரவெட்டி ஞானம்ஸ் வி.கழகம் 7ஓவர் நிறைவில் 7விக்கெட்டை இழந்து 44ஓட்டங்களை பெற்றது. ஞானம்ஸ் அணி சார்பாக செந்திரன் 9 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். ஸ்ரீமுருகன் அணி சார்பாக கண்ணன் 3, தமிழன் 2, தனு 1 ஆகியோர் விக்கெட்டை சாய்த்தனர். 9ஓட்டகங்களால் வெற்றியீட்டி மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றது மல்லாகம் ஸ்ரீமுருகன் வி.கழகம். (க)

# தேசிய மட்ட எறிபந்தாட்ட போட்டியில் 3ஆம் இடம் பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு துணுக்காய் கோட்டை கட்டியகுளம் அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர போட்டிகள் கடந்த 07.02.2017 அன்று பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் க.வ.கமலேஸ்வரன் கலந்து சிறப் பித்ததுடன் சிறப்பு விருந்தினராக துணுக்காய் கோட்டக் கல்வி அதிகாரி செல்வரட்ணம், துணுக்காய் வலய உடற் கல்வி பாட ஆசிரிய ஆலோசகர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின்போது 2016 ஆம் ஆண்டு இலங்கை பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற எறிபந்தாட்ட போட்டியில் கோட்டை கட்டிய குளம் அ.த.க.பாடசாலை மாணவர்கள் தேசிய மட்டத்தில் 3 ஆம் இடத்தை பெற்றனர்.

இவர் களை கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெற்றது.

இவர்க ளுக்கான பதக்கங் களை பிரதம விருந்தினர் மற்றும் சிறப்பு விருந் தினர் மற்றும் சிறப்பு விருந்தினர் ஆகியோர் அணிவித்து வைத்தனர். (க-281)

# கரவெட்டி ஞானம்ஸ் வி.கழகம் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது



மத்தொனி விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் மென் பந்துச் சுற்றுப் போட்டியின் 21 வயதுப் பிரிவினருக்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அரையிறுதிப் போட்டியில் கரவெட்டி ஐங்கரா விளை யாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம். (க)



புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் 2017 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வன்மைப்போட்டியானது அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்து சிறப்பித்தார்.

## அரசின் நிலைப்பாடு...

பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அங்கு முஸ்ஸமில் மேலும் கூறுகையில்,

நாட்டில் அமுலில் உள்ள அரசியலமைப்புச் சட்டத்தில் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மாற்றக்கூடிய பந்திகளில் கை வைக்க போவதில்லை எனக் கூறி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரத்திற்கு வந்தார்.

அவர் ஜனாதிபதியாக பதவி வகிக்கும் அரசாங்கத்தின் தரப்பான நாடாளுமன்றத்தின் சபை முதல்வர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் பதவிகளை வகித்து வரும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை சர்வஜன வாக்கெடுப்பில் நிறைவேற்ற போவதாக கூறி வருகின்றனர்.

இதன்மூலம் அரசாங்கத்தின உத்தியோக பூர்வ நிலைப்பாடுகளில் முரண்பாடுகள் உருவாகியுள்ளமை தெளிவாகின்றது என முஸ்ஸமில் குறிப்பிட்டார். (செ-11)

## காணிகளிலுள்ள...

முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் தமது காணிகளிலுள்ள வரலாற்று அடையாளங்கள் மற்றும் பயன் தரு மரங்கள் என்பவற்றை இராணுவத்தினர் அழிப்பதாக நேற்று மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்

தாம் போராட்டம் ஆரம்பித்த பின்னர் இந்த இடத்தில் வருகை தருபவர்களிடம் தமது காணிகளில் தாம் வாழ்ந்ததுக்கான பல்வேறு ஆதாரங்களாக வீடுகளின் அத்திபாரங்கள், மலசலகூடங்கள், கிணறுகள், நீண்டகால பயிர்கள் என்பவற்றை அடையாளங்களாக கூறிவந்ததாகவும்,

இந்நிலையில் தமது அடையாள சின்னங்கள் பலவற்றை முன்னரும் அழித்த இராணுவம் தாம் போராட்டம் ஆரம்பித்த பின்னரும் தங்களுடைய அடையாளங்களை அழித்து வருவதாக வேதனையுடன் குற்றஞ்சாட்டியுள்ளனர். (செ-281)

## 15ஆண்டுகளாக...

ர்கள் தங்கவைக்கப்பட்டிருக்கும் கூவத்தூர் விடுதியில் குண்டர்கள் காவலுக்கு இருப்பதாகவும் அவர்கள் துன்புறுத்தப்படுவதாகவும் முதலமைச்சர் ஓ.பன்னீர்ச்செல்வம் குற்றம்சாட்டியிருக்கிறார்.

அதிமுக பொதுச் செயலாளர் கூவத்தூரில் சசிகலா நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த சிறிது நேரத்திற்குப் பிறகு சென்னையில் தனது இல்லத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த பன்னீர்ச்செல்வம், எம்.எல்.ஏ.க்கள் தமது தொகுதி மக்களின் மன நிலையை அறிந்த பிறகு தங்கள் ஆதரவு யாருக்கு என்பதை முடிவுசெய்ய வேண்டுமெனக் கூறினார்.

உள்துறை முதல்வர் வசம் இருப்பதால், அந்த எம்.எல்.ஏக்களை ஏன் பொலிஸார் மூலம் மீட்கக்கூடாது என கேள்வியெழுப்பப்பட்டபோது, அசாதாரண சூழல் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதால் அம்மாதிரி நடவடிக்கையில் இறங்கவில்லையென்று கூறினார்.

தொடர்ந்து பேசிய ஓ.பன்னீர்ச்செல்வம், ஜெயலலிதா மருத்துவமனையில் இருந்த போது சசிகலா மட்டுமே ஜெயலலிதாவைப் பார்த்து வந்த நிலையில், செய்தியாளர்களைச் சந்தித்து உண்மை நிலையை ஏன் தெளிவுபடுத்தவில்லையென்று கேள்வியெழுப்பினார்.

மேலும் முதல் முறையாக ஜெயலலிதா தன்னை முதலமைச்சராக்கிய காலகட்டத்திலிருந்து தற்போது வரையிலான 15 ஆண்டு காலத்தில் சசிகலாவால் தான் பட்ட துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் அளவில்லையென்றும் ஜெயலலிதா யாரோடு அன்பு பாராட்டினாலும் சசிகலாவால் பொறுக்க முடியாது என்றும் பன்னீர்ச்செல்வம் கூறினார்.

ஜெயலலிதாவின் ரத்த சொந்தமான தீபாவை ஜெயலலிதா இறந்த பிறகுகூட அவரது சடலத்தின் அருகில்கூட அனுமதிக்கவில்லையென பன்னீர்ச்செல்வம் குற்றம் சாட்டினார்.

சசிகலா எம்.எல்.ஏக்கள் மத்தியில் பேசும் போது தன்னைத்தானே சிங்கம் என்று சொல்லிக்கொள்வது வடிவேலு நானும் ரவுடிதான் என்று கூறிக்கொள்வதைப் போல இருக்கிறது என்று கேலியாகச் சொன்னார்.

மேலும் இன்று திங்கட்கிழமை தமிழக தலைமைச் செயலகத்திற்குச் சென்று பணிகளைக் கவனிக்கப்போவதாகவும் சட்டமன்றத்தில் பெரும்பான்மையை தன்னால் நிரூபிக்க முடியுமென்றும் பன்னீர்ச்செல்வம் கூறினார்.

ஜெயலலிதா 145 படங்களில் பெரும் சிரமப்பட்டு நடித்து சம்பாதித்த சொத்துகள் கட்சிக்குத்தான் சொந்தமென்றும் பன்னீர்ச்செல்வம் கூறினார்.

இதற்கிடையில் தேனி தொகுதியின் எம்.பி.யான ஆர். பார்த்திபனும் தனது ஆதரவை ஓ. பன்னீர்ச்செல்வத்திற்குத் தெரிவித்திருக்கிறார். இதன்மூலம் அவருக்கு ஆதரவளிக்கும் எம்.பி.க்களின் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது. (செ-11)

## ஐரோ. ஒன்றியம்...

னதாக, இந்த நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றத் தவறினால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இழக்க நேரிடும் என்று ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்துள்ளது. (இ-3)

## கால நிலையில்...

மாகாணங்களில் மழை பெய்ய வாய்ப்பு காணப்படுவதுடன் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சிறிதளவில் மழை பொழியக்கூடும் என அந்த நிலையம் அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

அதேபோல், நாட்டை சுற்றியுள்ள கடற்பிரதேசங்களில் கடும் காற்று வீசக்கூடும் என வானிலை அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது. (செ-11)

## எந்த கொம்பனாலும்...

தெரிவித்துள்ளார்.

சென்னைக்கு அருகிலுள்ள கூவத்தூர் ரிசார்ட்டில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் 129 எம்.எல். ஏக்களை சந்தித்து நேற்று பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில், ஜெயலலிதா எனும் சிங்கத்துடன் இருந்த குட்டி சிங்கம் நான். ஜெயலலிதாவுடன் இருந்தவர்கள் அனைவருமே சிங்கங்கள்தான்.

அதிமுகவில் ஒரு குட்டி சிங்கம் வந்து விட்டதே என சிலர் எரிச்சலடைந்துள்ளனர். எத்தனை வலை விரித்தாலும் அதை எதிர்கொண்டு இந்த சிங்கம் வெளியே வரும். அதிமுக ஆட்சியை எப்படியாவது கலைத்துவிடலாம் என நினைக்கின்றனர். இதற்காக எட்டப்பர்களை வைத்து ஆட்சியை கலைக்கவும் முயற்சிக்கின்றனர். இங்கே 129 எம்.எல்.ஏக்கள் இருக்கின்றனர். நீங்கள்தான் அரசாங்கம். நீங்கள் 129 பேரும் சிங்கங்கள். நானும் ஒரு சிங்கம். நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்தால் ஆட்சியை எதுவும் செய்துவிட முடியாது. நான் ஜெயலலிதா நினைவிடத்தில் நின்றபோது என்னை நகரவிடாமல் ஒரு ஈர்ப்பு சக்தி தடுத்தது. அப்போது அங்கே அதிமுகவையும் ஆட்சியையும் உயிருள்ளவரை காப்பாற்றுவேன் என உறுதி எடுத்துக் கொண்டேன். என் உயிருள்ளவரை அதிமுகவையும் ஆட்சியையும் காப்பாற்றுவேன். எந்த கொம்பனாலும் அதிமுகவையும் ஆட்சியையும் அசைத்துவிட முடியாது என் உயிரை கொடுத்து ஆட்சியையும் அதிமுகவையும் கைப்பற்றுவேன். நம் கையாலே நம் கண்ணை குத்துகிறார் ஓ.பன்னீர்ச்செல்வம். நாம் ஒற்றுமையாக இருந்தால் டில்லி வரை யாரும் எதுவும் செய்ய முடியாது. எம்.எல்.ஏக்கள் என்னுடன் இருந்தால் எதையும் சாதிப்பேன் என்னைப் பொறுத்தவரையில் நான் எடுத்த முடிவில் பின்வாங்க மாட்டேன். அதிமுகவையும் ஆட்சியையும் தக்க வைக்க எந்த முடிவையும் தெளிவாக எடுப்போம். நானும் ஜெயலலிதாவும் சென்னை, பெங்களூர் சிறைகளைப் பார்த்தவர்கள். சிறையில் இருந்து, மண்டும் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறோம். பெண் என்றுதானே அச்சுறுத்தப் பார்க்கிறார்கள். அது நடக்காது. சட்டசபையில் ஜெயலலிதா படத்தை திறக்கவிடாமல் சதி செய்கிறார்கள். நாம் சட்டசபையில் ஜெயலலிதா படத்தை திறந்து வைக்க வேண்டும். ஜெயலலிதா படத்தை திறப்பதுதான் என் வாழ்நாள் பாக்கியம். நாம் நிச்சயம் ஆட்சி அமைப்போம். 129 பேரும் ஜெயலலிதா நினைவிடத்தில் நின்று புகைப்பட மெடுத்து அங்கிருந்து கோட்டைக்கு செல்வோம் என ஜெயலலிதா படம் முன்பாக சபதமெடுப்போம் என சசிகலா உரையாற்றியுள்ளார். (செ-11)

## நல்லாட்சியின்...

காணி மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் உரையாற்றிய வியாழேந்திரன்,

ஜனவரி மாதம் 31ஆம் திகதியிலிருந்து தெருவோரத்திலே குளிரிலும் வெயிலிலும் வேதனையுடன் தமது காணிகளை விடுவிக்கக் கோரி அறவழிப் போராட்டத்தை முல்லைத்தீவு மக்கள் நடத்தி வருகின்றனர்.

கேப்பாப்பிலவு மக்கள் இறுதி யுத்தத்திலே 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் வரை சென்று மிகப்பெரிய பாதிப்புக்களையும் இழப்புக்களையும் சந்தித்து இப்பொழுது பெருந்துயரோடு வீதி யோரத்தில் வந்து தமது துன்ப துயரத்திற்கு முடிவு வேண்டித்தவம் கிடக்கின்றார்கள்.

செட்டிகுளம் முகாம் தொடக்கம் இன்று வரை அவர்கள் வேதனைகளைச் சுமந்து கொண்டு தான் காலங்கழிக்கின்றார்கள்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு மீள்குடியேற்றம் என்ற பெயரிலே அவர்கள் குடியேற்றப்பட்டாலும் அவர்களுக்கான வசதி வாய்ப்புக்கள் அங்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

நல்லாட்சியிலே தமது நிலபுலன்கள் மீளக் கிடைக்கும் என்கின்ற பாரிய எதிர்பார்ப்பு அவர்களுக்கிருந்தது.

ஆனால் நல்லாட்சி கடந்து மூன்று வருடங்கள் கழிந்து விட்ட போதிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை தீர்வில்லை.

ஜனாதிபதி வரை கேப்பாப்பிலவு மக்களின் பிரச்சினை ஒத்தி வைக்கப்பட்டிருந்தாலும் இதுவரை உரிய நடவடிக்கைகளை நல்லாட்சியின் ஜனாதிபதியும் பிரதமரும் அரசாங்கமும் எடுக்காதது கவலையளிக்கின்றது.

விமானப்படைக்கு கையகப்படுத்தப்பட்டிருக்கும் 534 ஏக்கர் பொதுமக்களின் காணி விடுவிக்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள உறுதியாகப் போராடுகின்றோம்.

சூரபுரத்தில் 59 குடும்பங்களினுடைய காணிகள், தினக்குடியிருப் பில் 84 குடும்பங்களினுடைய காணிகள், கேப்பாப்பிலவில் 145 குடும்பங்களினுடைய காணிகள் இவ்வாறு பொது மக்களின் காணிகள் விமானப்படையினரால் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

அங்கு போராட்டம் நடத்தும் வயோதிபர் சிறுவர், தாய்மாருக்காக ஆதரவு தெரிவிக்கும் போராட்டத்தை கிழக்கிலுள்ள நாங்களும் முன்னெடுத்துள்ளோம்.

நல்லாட்சி அரசு இந்தப் பிரச்சினைக்கு காலத்தை இழுத்தடிக்காமல் நல்ல தீர்வைத் தரவேண்டும்.

பால்குடிக்கும் பச்சிளம் குழந்தைகளோடு பனியிலும் வெயிலிலும் படுத்துறங்கும் தாய்மாரின் துயரங்களை இந்த நல்லாட்சி அரசு ஏறெடுத்துப் பார்க்க வேண்டும்.

குடிமக்களை தெருவில் பதை பதைக்க வைப்பதா நல்லாட்சியின் நகர்வு? மக்களை மன அழுத்தத்துக்கு உள்ளாக்குவதுதானா நல்லாட்சியின் நகர்வு? இது பற்றி ஆட்சியாளர்கள் சிந்திக்க வேண்டும்.

வடக்கு தமிழ் மக்களின் துயரம் நிறைந்த போராட்டத்திற்கு தென்னிலங்கையிலுள்ள சிங்கள மனிதாபிமானிகளும் ஆதரவு தெரிவித்திருக்கின்றார்கள் என்பது ஒரு நிம்மதி தரும் செய்தி. தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்ற பாகுபாடில்லாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கேட்டுப் போராடுவதில் நாம் ஒன்றிணைந்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஜனாதிபதி மற்றும் பிரதமரின் சொத்து விபரங்கள் கோரல்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் சொத்து வபரங்களை வழங்குமாறு டிரான்ஸ பெரன்சி இன்டர்நஷனல் நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. தகவல் அறிந்து கொள்ளும் சட்டம் நடைமுறைக்கு வந்ததனால் இந்த வேண்டுகோளை விடுக்க முடியுமாகவுள்ளது.

சகல கட்சிகளிலிருந்தும் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல உறுப்பினர்களினதும் கடந்த 2012ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரையிலான சொத்து விபரங்களையும் அந்நிறுவனம் கோரியுள்ளது. (இ-7)

# சண்டைக் கட்சியாக முஸ்லிம் காங்கிரஸ்

## பிரதியமைச்சர் அமீர் அலி விமர்சனம்

(கொழும்பு)

சமூகக்கட்சி என்ற நிலையில் இருந்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, சண்டைக் கட்சியாக மாறிவிட்டதென அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளரும் பிரதியமைச்சருமான அமீர் அலி தெரிவித்துள்ளார்.

தம்பலகாமம் அல் ஹிக்மா கல்லூரியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சட்டியோடு புலால் நாற்றம் போய்விட்டதென்று, கிராமத்துப் பழமொழியொன்று உண்டு. அதேபோன்று முஸ்லிம் காங்கிரஸும், மர்ஹூம் அஷ்ரபின் மறைவோடு முடிந்து விட்டது. அந்தக் கட்சிக்குள்ளே ஏகப்பட்ட பிரச்சினைகள், பல்வேறு நெருக்கடிகள் தலைவிரித்தாடுகின்றன. தலைவரில் பிரச்சினை, செயலாளரில் பிரச்சினை, தவிசாளரில் பிரச்சினை அடிதடி நடக்குமளவுக்கு, பிரச்சினைகள் பூதாகரமாகக் கிளம்பியிருக்கின்றன.

மர்ஹூம் அஷ்ரபோடு இணைந்து அந்தக் கட்சியை நாங்கள் தூக்கிப்பிடித்தவர்கள். தற்போது சமூகத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு, அவர்களுக்கு நேரமில்லாத நிலைவந்து விட்டது.

முஸ்லிம்களின் நலன் காக்கும் சங்கமெனக் கருதப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ், கடந்த காலங்களில் நமது பிரச்சினைகளை தீர்க்கத் தவறிவிட்டது. அவர்கள், அந்தப் பிரச்சினைகளை தீர்க்கத் தயாராகவுமில்லை. அவர்களுடைய கவனமும் கரிசனையும், தங்களை வளர்ப்பதிலேயே குறியாக இருக்கின்றது. "நாரே தக்பீர்" என்று சொல்லி ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் பின்னர், "ஆதவன் எழுந்து வரப்போகின்றான்" என்று கூறிய போது, அவர்களை நம்பினோம், ஏமாந்தோம்.

இந்த நிலவரத்தை மாற்றுவதற்காகவே, கட்சியை நாங்கள் உருவாக்கினோம். எமது தலைமை, நீங்கள் எதிர்பார்ப்பதைவிட ஒரு படி மேலே சென்று ஓடோடி உதவி செய்து வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மன்னார் விபத்து; மூவர் காயம்

(மன்னார்)

மன்னார் - நானாட்டான் பிரதான வீதியில் நேற்று இரவு 7.30 மணியளவில் இடம் பெற்ற மோ.சைக்கிள்-ஆட்டோ விபத்தில் 3 பேர் காயமடைந்துள்ளனர். குறித்த விபத்து குறித்து மேலும் தெரியவருகையில்,

மன்னார் நானாட்டான் பிரதான வீதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் காயமடைந்த மூன்று பேர் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நானாட்டானில் இருந்து மன்னார் நோக்கி சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டியுடன், மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரும் முச்சக்கர வண்டியின் சாரதியும் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

# 27 முதிரை மரக்குற்றிகள் மீட்பு

(கரணவாய்)

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் அடர்ந்த காட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 27 முதிரைக் குற்றிகள் மீட்கப்பட்டதாக முழங்காவில் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் முழங்காவில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் அடர்ந்த காட்டினைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்திய போது 8 அடி நீளமுடைய 27 முதிரை மரக் குற்றிகள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தகவல் வெளியிட்டனர். (செ-60)



# நீதிமன்ற விவகா...

ஊடக சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய பந்துல குணவர்த்தன, ஹம்பாந்தோட்டை துறைமுக விற்பனை தொடர்பாக வாசுதேவ தாக்கல் செய்த வழக்கில் பிரதமர் தலையிடுவதாக குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்கால பொருளாதார நெருக்கடியை கையாளுவதற்கு அரச நிறுவனங்களை விற்பனை செய்வது அத்தியாவசியமானது என மத்திய வங்கியின் ஆளுநர் தெளிவாக கூறியுள்ளார் என ஊடகமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகளில் பொருளாதார முகாமைத்துவ குழு பிரதமரிடம் இருக்கின்றது.

மிகவும் பலம்மிக்க இந்த குழுவினால் நாட்டில் இருக்கும் வளங்கள் மிகவும் குறைந்த விலையில் செல்வந்தர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை ஜனாதிபதிக்கும் தெரியாமல் முன்னெடுக்கப்படுகின்றது.

பொருளாதார செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை விட அதிக அதிகாரங்கள் பிரதமருக்கு தேவையாகின்றது என்ற விடயம் இதன்மூலம் தெளிவாகியுள்ளது. அதற்காக சட்டமூலமொன்றை அவரே தயாரித்தார்.

அதிக அதிகாரங்களை கொண்ட அமைச்சை உருவாக்கும் பொருளாதார அபிவிருத்தி ஏற்பாடுகள் சட்டமூலத்தை அவர் பின்னர் வாபஸ்பெற்றார். பொருளாதார முகாமைத்துவ அமைச்சரவை உப குழுவால் தனித்து தீர்மானத்தை எடுக்க முடியாது என்ற செய்தியை கடந்த வாரம் ஜனாதிபதியால் கூற வேண்டி ஏற்பட்டது. அனைத்து தீர்மானங்களையும் தமக்கு அறிவிக்க வேண்டும் என ஜனாதிபதி கூறியிருந்தார். அவ்வாறெனின் ஜனாதிபதிக்கு நாம் ஒன்றை கூறுகின்றோம்.

வாசுதேவ நாணயக்கார நாட்டிற்காக தேசிய சொத்தான துறைமுகம் நாட்டிற்கு நன்மை பயக்காத வகையில் வெளிநாட்டுமயப்படுத்துவதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்திற்கு சென்றுள்ளார். அந்த வழக்கு விசாரணைக்கு நேரடியாகவோ மறைமுகமாகவே பிரதமர் தலையீடு செய்துள்ளார். இந்த நடவடிக்கை நியாயத்தை பெற்றுக்கொள்வதற்கு பாரிய இடையூறான ஒன்றாக கூட்டு எதிர்க்கட்சியான நாம் கருதுகின்றோம் என பந்துல குணவர்த்தன குற்றஞ்சாட்டியுள்ளார். (செ-11)


## தேவை

எமது ஸ்தாபனத்துக்கு சிட்டை எழுதுநர் தேவை. குறைந்தது இரு மொழிகளும் பேசத் தெரிந்தவர் விரும்பத்தக்கது. நேரில் சமுகம் தரவும்.

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**

213, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

## மீண்டும் மூன்றாவது தடவையாக ஓர் அரிய சந்தர்ப்பம். வெளிநாட்டு வேலைவாய்ப்பு - மலேசியா





| JOB CATEGORY | QUT | SALARY (RM) |
|---|---|---|
| உற்பத்தி உதவியாளர் (பெண்) | 20 | 1200 + OT |
| உற்பத்தி உதவியாளர் (ஆண்) | 80 | 1200 + OT |

**மலேசியாவிலுள்ள பிரபல்யமான ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு உற்பத்தி உதவியாளர்களுக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.**

### நிபந்தனைகள்

- இலவச தங்குமிட வசதி 3 வருடங்கள்.
- வேலை நேரம் 08 மணித்தியாலயங்கள் மேலதிகமாக வேலை செய்யும் நேரத்துக்கு 1.6 வீதமும் சனிக்கிழமை நாட்களில் இரண்டு மடங்கு கொடுப்பனவும் வழங்கப்படும்.
- வாரத்தில் இரண்டு நாட்கள் ஓய்வு / விடுப்பு வழங்கப்படும்.
- முன்னனுபவம் தேவையில்லை.
- வயது 18 - 35
- அரசாங்க பயண அனுமதிக் கட்டணம் ரூபாய் 50,000
- வங்கிக்கடன் வசதி செய்து தரப்படும்.

பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரம், புகைப்படம், கடவுச்சீட்டு, அடையாள அட்டை ஆகியவற்றுடன் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்

**இடம் : சுபாஸ் விருந்தினர் இல்லம், விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்.** (யாழ். ஆஸ்பத்திரி பின் வீதி)

**காலம் : 18.02.2017 சனிக்கிழமை காலை 9மணி**

முற்பதிவுகளுக்கு : யாழ்ப்பாணத்தில் - 077 972 9481, 076 718 3799
கொழும்பு - 011 524 4146

**Capital Recruitment International (Pvt) Ltd**
No.130 3/1, 3rd Floor, Grand Pass, Colombo 14
அரச அனுமதி இலக்கம் L.L. No.: 2248

(C-7534)

## அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்

வெளிநாடுகளுக்கான
**துரித கடிதங்கள், பொதிகள் சேவை**





365
72
(Express Service)
(Door to Door Service)

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
Call 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
Call 021 222 3536

DHL aramex FedEx.

(A-7523)

# மக்களின் நன்மதிப்பை பெற்ற உலக நாடுகளில் முதன்மை நாமமான

20% OFF

BLACK+DECKER DEWALT Ohms STANLEY

PowerTools மற்றும் வீட்டு இலத்திரனியல் உபகரணங்கள்

மீண்டும் யாழ் மக்களுக்காக 20% விசேட விலைக்கழிவுடன்

**KINGS ELECTRONICS(PVT) LTD**
வடமாகாண ஏகவினையோகத்தர்
NO.12, POINT PEDRO ROAD, JAFFNA. | WEB: MYKINGS.LK Tel: 0214546699
(வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)
10.02.2017 தொடக்கம் 17.02.2017 வரை பெற்றுக்கொள்ளலாம்

150 வருடத்திற்கு மேலான நம்பிக்கை வாய்ந்த Delmage கம்பனியிடம் இருந்து






மேலும்
நந்தலாலா ஹாட்வெயர் - No.29 Stanly வீதி யாழ்ப்பாணம்.
ஜெசீமாஸ் - K.K.Sவீதி யாழ்ப்பாணம்.
ARK Enterprises - Stanly வீதி யாழ்ப்பாணம்.
தில்லயம்பதி மோட்டர்ஸ் - Stanly வீதி யாழ்ப்பாணம்.
லிங்கம் & Co - No.48 Stanly வீதி யாழ்ப்பாணம்.
நாராயணா ஹாட்வெயர் - Stanly வீதி யாழ்ப்பாணம்.
கஜமுகன் ஹாட்வெயர் - Stanly வீதி யாழ்ப்பாணம்.

ஆகிய இடங்களிலும் மேற்குறிப்பிட்ட திகதிகளில் 20% விலை கழிவுடன் பெற்று கொள்ளலாம்

**Delmege Forsyth & Co. Ltd**
101 Vinayalankara Mawatha, Colombo 10

(A-7532)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.